# அடிப்படைப் பாடநூல்

# தமிழ்

வகுப்பு VIII

**Kerala Reader - Tamil (BT)**
**Standard VIII**


கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2025

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிச மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

**தமிழ்**

**8**

*Prepared by*
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Typeset and design by : SCERT
First Edition : 2025
Printed at : KBPS, Kakkanad, Kochi
© Department of General Education, Government of Kerala

## முகவுரை

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பது ஆன்றோர் வாக்கு. எழுத்து என்பது மொழியையே குறிக்கும். பிற உயிரினங்களிடமிருந்து மனித இனத்தை வேறுபடுத்துவது மொழியே. மொழி இல்லையேல் சிந்தனை இல்லை; சிந்தனை இல்லையேல் மனிதனும் விலங்கும் ஒன்றுதான். உலகில் ஆயிரக்கணக்கான மொழிகள் வழக்கிலிருந்தன. காலந்தோறும் சில மொழிகள் வழக்கொழிந்து வருகின்றன. ஒரு மொழியின் அழிவு ஓர் இனத்தின் அழிவுக்கு வழிவகுத்துவிடும் என்பார்கள். எனவே எம் மொழியாயினும் அம்மொழியை வழங்குவோர் அதைப் பாதுகாக்க வேண்டும். தமிழ்மொழி தனித்துவம் மிக்கது. கால வெள்ளத்தில் கரைந்து போகாமல் பழமைக்குப் பழமையாய், புதுமைக்குப் புதுமையாய் வளமை குன்றாது வாழ்ந்தும் வளர்ந்தும் வரும் மொழி தமிழ் மொழி என்பது பெருமைக்குரியது.

உயர்நிலை வகுப்பை எட்டும் எட்டாவது வகுப்பு மாணவர்கள் மொழியின் அமைப்பையும் அடிப்படைக் கூறுகளையும் அறிந்திருப்பர். அவர்களின் மொழித்திறனை மேம்படுத்துவதும் மொழி ஆர்வத்தை ஊக்குவிப்பதுமாக மொழிக்கல்வி அமையவேண்டும். மொழித்திறனை அடைவதோடு நின்று விடாமல், அம் மொழியின் வாயிலாக மாணவர்களின் படைப்புத் திறனை வெளிக்கொணர்வதும் மொழிக் கல்வியின் நோக்கமாகும். எல்லாவற்றிற்கும் மேலாக மொழிக் கல்விக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டப் பாடப்பகுதிகள் மாணவர்களின் சமூக ஈடுபாட்டிற்குத் தூண்டுகோலாகவும் அமையவேண்டும். இவற்றையெல்லாம் உள்வாங்கிக் கொண்டு இப்பாட நூல் உருவாக்கப்பட்டுள்ளது. பாடங்களைக் கசடறக் கற்றும், செயல்பாடுகளைச் செவ்வனே செய்தும் மொழிக் கல்வியின் நோக்கங்களை நிறைவேற்றுங்கள்.

வாழ்த்துகள்.

**முனைவர் ஜெயப்பிரகாஷ், ஆர்.கெ.**
இயக்குநர்,
எஸ்.ஸி.இ.ஆர்.டி.

# Textbook Development Team

## Tamil - VIII - BT

### Advisor

**Dr. Nainar, M.**
Reader in Tamil (Rtd.), University College, Thiruvananthapuram.

### Chairperson

**Dr. Manickaraj**.
Associate Proffessor, Dept. of Tamil, Govt. College, Munnar.

### Experts

**Dr. Benedy**, **K.**
Asst. Prof., Tamil, Govt. Art College, Thiruvananthapuram.

**Dr. A. Karthikeyan**
Rtd. Proffessor, Tamil University, Tanjavur.

**Dr. Rajashekaran**, **L.**
Asst. Prof., Department of Folkloristics and Tribal Studies,
Central University of Karnataka.

**Dr. L. Ramamoorthy**
Rtd. Proffessor, Central University, Kasarcode.

### Members

**Archana, M.,** HST, CPMGHSS Peermade, Idukki.
**Mercy Premalatha, R.,** HST (Rtd.), LMS Tamil HS, Chervarakkonam, Parassala.
**Monikandan, T.,** Principal (Rtd), CPMCHSS, Peermade, Idukki.
**Velkuthalam, P.,** HST, GHSS, Chinnakanal, Idukki.
**Vijayakumar, K.**, HST, GCHS, Attakulangara, Thiruvananthapuram.
**Vijila Rani, M.**, HST, GTV & HSS, Chalai, Thiruvananthapuram.
**Deepesh, T.,** Artist, CHMHSS, Kavumpady, Kannur.
**Ajinas,** Artist, Kollam.
**Melvin Rubeesh,** Artist, College of Fine Arts, Thiruvananthapuram.

### Academic Co-Ordinator

**Dr. Sahaya Dhas, D.**
**Assistant Professor (Tamil), SCERT.**

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| அலகு 1 | தூய்மை வாழ்வு | 7 - 26 |
| | சூழல்கள் | 8 - 13 |
| | குறைவற்ற செல்வம் | 14 - 19 |
| | அக அழகு | 20 - 26 |
| அலகு 2 | தெளிவானம் | 27 - 50 |
| | விண்மீன்கள் | 28 - 35 |
| | சுடர்கள் | 36 - 43 |
| | நிழல்கள் | 44 - 50 |
| அலகு 3 | கவசம் | 51 - 77 |
| | சாகசம் | 52 - 61 |
| | வேலிகள் | 62 - 67 |
| | வெள்ளம் | 68 - 77 |
| | சொல்லகராதி | 78 |

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

அலகு 1

# தூய்மை வாழ்வு



'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.' ஆரோக்கியமான மனிதனால் தான் வாழ்க்கையை மகிழ்ச்சியாக வாழ முடியும். நாம் நம்மைச் சுத்தமாக வைப்பதுடன் நமது சூழலையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். சுகாதாரம் காப்பது தனி மனிதன் மற்றும் சமூகத்தின் பொறுப்பாகும்.

# சூழல்கள்





## சுகாதாரம்

சுற்றுச்சூழல் அத்தனையும் கெட்டுப் போச்சு
சுகாதாரம் பகல்கனவாய் மாறிப் போச்சு!
வற்றாத நீரோடையாய் சாக்கடைத் தண்ணீர்
வழிநெடுக கொப்பளிக்கும் சாலைக் காட்சி
சிற்றூரோ நகரமென பாகுபா டின்றி
சிதறிகிடக்கும் குப்பைமேடு நமைவர வேற்கும்
தொற்றுநோய் பரவாமல் தடுப்ப தற்கே
சுகாதார விளம்பரத்தின் கீழ்சிறு நீர்க் குட்டை!

பல்தேய்த்தும் வாய்கழுவ தவிர்த்து விட்டு
படுக்கையிலே தேநீரைக் குடிப்ப வர்க்கு
எள்ளளவும் சுகாதார மேம்பாடு பற்றி
ஏற்றுக்கொள்ளா மூடர்களும் நாட்டில் உண்டு!
நல்விருந்தில் நடுபந்தியில் இடத்தைத் தேடி
நாசுக்காய் இடம்பிடித்து அமர்ந்து கொண்டு
பொல்லாத நாக்குக்கே ருசியைத் தேடி
பொறுப்பாகக் கைகழுவ மறந்தே போவார்!

சுத்தம்தான் சோறுபோடும் பெரியோர் வாக்கு
சுகாதாரம் நம்வாழ்வின் ஆதார மாகும்!
எத்திசையும் சுத்தமாக வைத்துக் கொண்டால்
இடர்ப்பாடோ நோய்நொடிக்கு ஆளாக மாட்டோம்!
பத்திரமாய் நாம்நம்மைப் பாது காக்க
பகலிரவாய் சுகாதாரம் பேணிக் காப்போம்!
உத்வேக முனைப்புடனே எந்த நாளும்
உலகெங்கும் சுகாதாரம் காப்போம் வாழ்வோம் !

– பெ. ஆறுமுகம்

**ஆசிரியர் குறிப்பு :** இவர் சிறந்த எழுத்தாளர். சமூக ஆர்வலர். இவர் எழுதிய உண்மையைத் தேடுகிறேன் என்ற நூலிலிருந்து இப்பாடப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது.

**செயல்பாடுகள்**

- பாடலை வாசித்து, நயம் பாராட்டி எழுதுங்கள்.
- சுகாதாரமான வாழ்விற்கு நாம் கடைபிடிக்க வேண்டிய பழக்கவழக்கங்களைப் பட்டியலிடுங்கள்.
- பகலிரவாய், உலகெங்கும், தொற்றுநோய் இச் சொற்களைப் பிரித்து எழுதுங்கள்.
- "வற்றாத நீரோடையாய் சாக்கடைத் தண்ணீர்
  வழிநெடுக கொப்பளிக்கும் சாலைக் காட்சி
  சிற்றூரோ நகரமென பாகுபாடின்றி
  சிதறிக்கிடக்கும் குப்பைமேடு நமைவர வேற்கும்."

  இப்பாடல் வரிகளைச் சமகாலச் சூழலுடன் ஒப்பிட்டு குறிப்பு தயாரியுங்கள்.

## முகங்கள்

சின்னம்மாளைப் பற்றி அந்தப் பகுதியில் வசிக்கும் அனைவருக்குமே தெரிந்திருக்கும். அந்த அளவிற்கு அனைவருக்கும் பரிச்சயமான பெயராக சின்னம்மாள் பிரபலமாகி இருந்தார். சின்னம்மாள் சினிமா நடிகையோ, பாடகியோ இல்லை. பரத நாட்டியத்திலோ வேறு எந்த வகையிலோ பிரபலமானவரும் கிடையாது. சின்னம்மாளுக்குக் கணவரும் இல்லை. குழந்தையும் கிடையாது. தனியொருத்தியாகவே வாழ்ந்து வருகிறார். தனக்குக் கொடுத்திருக்கும் தூய்மைப் பணியாளர் பணிக்கு முன்னுதாரணமாக விளங்கும் அவருக்கு ஈடு இணை எவருமில்லை என்று அடித்துக் கூறலாம்.

காலை 5.30 மணிக்கெல்லாம் நகராட்சி அலுவலகத்திற்கு வந்து துப்புரவு ஆய்வாளரிடம் ஆஜர் செய்து கொண்டு அனைத்துத் தூய்மைப் பணியாளர்களும் செல்ல வேண்டும். அதன்படி சின்னம்மாள் காலை 5.00 மணிக்கே நகராட்சி அலுவலக வாசலில் முதல் நபராகக் காத்திருப்பார். தனக்கு ஒதுக்கியுள்ள தெருக்களில் தூய்மைப் பணியை மிகவும் சுத்தமாக செய்வதில்

சின்னம்மாளுக்கு நிகர் எவருமேயில்லை. நேரம் காலம் பார்க்காமல் வேலை செய்வார்.

தெருக்களில் இவர் தூய்மைப் பணியில் ஈடுபடும் போது, சிலரது வீட்டிலுள்ள பெண்கள் அன்பாக சின்னம்மாளுக்கு காபி, டீ ஏதும் கொடுத்தாலும் வாங்கிச் சாப்பிடமாட்டார். அதேப் போன்று காசு, பணம் கொடுத்தாலும் வாங்க மாட்டார். கடைசி நிலையிலுள்ள ஒரு தூய்மைப் பணியாளருக்கு இப்படி ஒரு குணம் இருப்பது வியப்பாகத்தான் இருக்கிறது. அரசுப்பணியில் இருப்போர் என்றாலே லஞ்சம் வாங்குபவர் என்ற முத்திரை குத்தப்பட்டிருக்கும் நிலையில் மக்கள் அன்போடு தருகின்ற எவற்றையும் வாங்கிக் கொள்ளாத உயர்ந்த பக்குவ நிலையிலுள்ள சின்னம்மாளை எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை.

கொரோனா நோய்த் தொற்று பரவி இருந்த காலத்தில் ஒவ்வொரு வீட்டிலும் அலுப்பில்லாமல் குப்பைகளை வாங்கித் தனக்குக் கொடுத்துள்ள தள்ளுவண்டியில் கொட்டி நிரப்பிக் கொண்டு, அவற்றைச் சுத்தமாகவும், நாகரிகமாகவும், தெருவில் சிந்தாமல் சிதறவிடாமல் குப்பைக் கொட்டும் தளத்தில் மிகப் பொறுப்போடு சேர்க்கும் சின்னம்மாவைப் போன்று வேறு எந்தத் தூய்மை பணியாளராலும் பணி செய்ய முடியாது.

கடமையுணர்விலும், கண்ணியத்திலும் சின்னம்மாள் நாள் தவறாமல் சுறுசுறுப்பாகத் தெருக்களைத் தூய்மை செய்து கொண்டே வீடு வீடாகக் குப்பைகளையும் வாங்கி எடுத்துச் செல்வதை வழக்கமாகவே வைத்துக் கொண்டிருப்பார். நகராட்சி நிர்வாகத்தில் கொடுக்கப்பட்ட சீருடையோடு தூய்மையாக சிரித்த முகத்தோடு பணியாற்றும் சின்னம்மாளைப் பற்றி கொரோனா காலத்தில் ஊடகங்கள் பாராட்டியதை எவராலும் மறக்க முடியாது.சின்னம்மாள் தெருக்களில் நுழையும் போதே அவரைத் தேடி, அந்தத் தெருவில் வசிக்கும் நாய்கள் கூட்டம் வட்டமடித்துக் காத்து நிற்கும். சின்னம்மாள் தனது சேலை மடியில் வைத்திருக்கும் பிஸ்கட் பாக்கெட்டுகளை பிரித்துத் தெருவின் ஓரத்தில் வைத்தவுடன் அங்கு நிற்கும் நாய்கள் அனைத்தும் எவ்வித சத்தமும் இல்லாமல் பிஸ்கட்டுகளைத் தின்று விட்டு கலைந்து போய்விடும். இது தினசரி நடக்கும் வழக்கமாக இருந்தது.

சின்னம்மாள் ஒரு நாள் வராது போய்விட்டால் நாய்கள் அங்கும் இங்கும் அலைந்து சின்னம்மாளைத் தேடிப் பார்த்து விட்டு ஏமாந்து போய் நிற்கும். சின்னம்மாளை யாரும் வா, போ என்று ஒருமையிலும் அழைப்பது இல்லை. வாங்க போங்க என்று தான் மரியாதையாக அழைப்பார்கள். கடை வீதியில் சின்னம்மாள் துப்புரவுப் பணி செய்யும் போது, சில கடைக்காரர்கள் இவருக்கு டீ, காபி என கொடுக்க முன்வருவதை வேண்டாமென்று சொல்லி விடுவார். அதற்குப் பதிலாக பிஸ்கட் பாக்கெட்டுகளை வாங்கி வைத்துக் கொண்டு அவைகளைத் தெருவில் இருக்கும் நாய்களுக்குக் கொடுத்து வருவது தினசரி தவறாது நடக்கும். வீட்டுக்கு வீடு குப்பைகளைச் சின்னம்மாள் வாங்கும் போது

குடியிருப்பவர்களிடம் அன்பாகவும், பண்பாகவும் பழகுவார். இப்படித்தான் ஒரு வீட்டில் குப்பை வாங்கும் போது அந்த வீட்டின் குப்பைக் கூடைக்குள் விலையுயர்ந்த மோதிரம் ஒன்று கிடந்துள்ளது.

அந்த வீட்டிலுள்ள வயதான பெண் ஒருவர் குப்பைக் கூடையைக் கொடுத்ததும் அதனை வாங்கிக் கொண்ட சின்னம்மாள் தனது தள்ளுவண்டியிலுள்ள குப்பைகளைச் சேகரிக்கும் டப்பாவில் குப்பையைக் கொட்டியபோது அதிலிருந்த மோதிரம் பளபளவென மின்னியதைக் கண்ட சின்னம்மாள் அதனை எடுத்துக் கொண்டு போய் வயதான அம்மாவிடம் கொடுத்தாள். அந்த அம்மாவுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. மோதிரத்தைக் காணாமல் இரண்டு தினங்களாகத் தேடிக் கொண்டிருப்பதாகச் சின்னம்மாவிடம் தெரிவித்தார். வயதான அம்மாள் மோதிரத்தைப் பெற்றுக் கொண்டு சின்னம்மாவுக்கு நன்றி சொல்லியபடியே 500 ரூபாய் பணத்தைக் கொடுத்தார். அதெல்லாம் வேணாம்மா... மோதிரத்தைப் பத்திரமா வச்சுக்குங்க. நான் வரேன் என்று சொல்லிவிட்டு புறப்பட்டு விட்டார்.

மோதிரத்தைப் பெற்றுக் கொண்ட காமாட்சி அம்மாள் மாதர் சங்கத்தில் செயலாளராக இருப்பவர். மோதிரம் தொலைந்து போனதையும் அது சின்னம்மா மூலமாகக் கிடைத்ததையும் மாதர் சங்க உறுப்பினர்களிடம் காமாட்சி அம்மாள் பெருமையாகச் சொல்லிக் கொண்டிருந்தார். சின்னம்மாவைப் பாராட்டி மாதர் சங்கம், ஒரு விழா நடத்தி, அதில் அவரை அனைவரும் புகழ்ந்து பேசியது செய்தித்தாள்களில் வெளிவந்து மேலும் சின்னம்மாவைப் பிரபலமாக்கியது. அரசுப் பணியில் கடைசி நிலையில் சின்னம்மா பணி புரிந்தாலும் உயர்ந்த எண்ணத்தோடு அவரது தூய்மைப் பணி சிறந்து இருப்பதாக அரசாங்கம் பாராட்டி அவருக்கு விருதும் வழங்கி இருந்தது. அன்று வழக்கம்போல் காலை 5 மணிக்கு எழுந்து, நகராட்சி அலுவலகத்திற்கு பணிக்காக வீட்டிலிருந்து புறப்பட்டு, சாலையில் நடந்து வந்து கொண்டிருந்த சின்னம்மாவை எதிர்பாராத வகையில் லாரி ஒன்று இடித்துத் தள்ளிவிட்டுச் சென்றது. அப்படியே தட்டுத் தடுமாறி அருகிலிருந்த சாக்கடைக்குள் மயங்கி விழுந்தார்.

காலை 6 மணி வரை மக்கள் நடமாட்டம் அதிகமில்லாத நிலையில் ஏழு மணியளவில் மயங்கிக் கிடந்த சின்னம்மாவைப் பார்த்த ஒருவர் ஆம்புலன்சுக்குப் போன் செய்து மருத்துவமனையில் கொண்டு சேர்த்துவிட்டார். சின்னம்மா மயங்கி விழுந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள தகவலறிந்து நகராட்சி அதிகாரிகளும், சின்னம்மாவோடு வேலை பார்க்கும் மற்ற தூய்மைப் பணியாளர்களும் மருத்துவமனையில் கூட்டமாய் கூடிவிட்டனர். இந்தச் செய்தி காற்றோடு காற்றாக ஊர் முழுவதும் பரவியது பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தனர். மாவட்ட ஆட்சியரும் மருத்துவமனைக்கு நேரில் வந்து மருத்துவர்களிடம் சின்னம்மாவின் உடல் நலம் குறித்துக் கேட்டறிந்து சென்றார். அப்போது மருத்துவமனை வாசலில் ஒரு அதிசயிக்கத்தக்க சம்பவமும் நடந்தது. சின்னம்மா தான் வேலை பார்த்த தெருக்களில் தினசரி நாய்களுக்கு பிஸ்கட் கொடுப்பது வழக்கமாகி இருந்த நிலையில் கடந்த

ஒரு வார காலமாக சின்னம்மா விபத்துக்குள்ளாகி மருத்துவமனையில் இருப்பதால் வேலைக்குச் செல்ல முடியவில்லை. அதனால் அங்குள்ள நாய்களுக்கு பிஸ்கட் கிடைக்கவில்லை! இந்தத் தகவல் நாய்களுக்கு எப்படித் தெரிந்ததோ தெரியவில்லை. சின்னம்மாவைப் பார்க்க அந்த நன்றியுள்ள மிருகங்களும் கூட்டமாக மருத்துவமனை வாசலில் சோகத்தோடு நின்று கொண்டிருந்தன.

– நன்னிலம் இளங்கோவன்

**ஆசிரியர் குறிப்பு :** இவர் தமிழ்நாட்டில் பேரூராட்சி நிர்வாகத்தில் செயல் அலுவலராகப் பணியாற்றினார். ஏராளமான கவிதைகளையும் நாடகங்களையும் சிறுகதைகளையும் எழுதியுள்ளார். நிறங்களின் நிறங்கள் என்பது இவரது முதல் சிறுகதைத் தொகுப்பு ஆகும்.

## செயல்பாடுகள்

- உங்கள் பகுதியிலுள்ள தூய்மைப் பணியாளர்களைப் பாராட்டும் விதமாக நடைபெறும் பாராட்டு விழாவில் உரையாற்றப் பாராட்டுரை தயாரியுங்கள்.
- நம் தெருக்களையும் வீட்டையும் சுத்தம் செய்வதில் தூய்மைப் பணியாளர்களின் பங்கினைக் குறித்துக் கலந்துரையாடி குறிப்பாக எழுதுங்கள்.

### உலகக் காற்று தினம்

அனைத்து உயிர்களின் வாழ்வியல் அடிப்படை காற்று. உணவும், நீரும் இல்லாமல் கூட மனிதனால் குறிப்பிட்ட காலம் வரை வாழ முடியும். ஆனால், காற்று இல்லாமல் சில வினாடிகள் கூட வாழ முடியாது. இத்தகைய மகத்துவம் மிக்க காற்றை தொழில்நுட்பம், விஞ்ஞான வளர்ச்சி போன்ற காரணங்களால் தொடர்ந்து மாசுபடுத்தி வருகிறோம். இதைக் கட்டுப்படுத்தவும் சீர் செய்யவும் வேண்டும்.

ஐரோப்பிய காற்று ஆற்றல் ஆணையமும், உலகளாவிய காற்று ஆற்றல் மன்றமும், காற்றின் ஆற்றலைக் கொண்டாடும் விதமாகவும், காற்றின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாகவும் ஆண்டுதோறும் ஜூன் மாதம் 15–ஆம் நாளை உலகக் காற்று தினமாகக் கொண்டாடி வருகின்றன.

உலக அளவில், காற்று மூலம் அதிக அளவில் மின் உற்பத்தி செய்வதில் இந்தியா முதல் இடத்தில் உள்ளது. அதேசமயம் உலக அளவில் காற்று மாசுபாடு அதிகம் உள்ள நகரங்களின் பட்டியலில், இந்தியாவின் டெல்லி முதல் இடத்தில் உள்ளது. அங்குச் சில ஆண்டுகளுக்கு முன்பு, சுவாசிப்பதற்காகத் தூய காற்றை விலை கொடுத்து வாங்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டது.

இத்தகைய நிலையைத் தடுக்கக் காற்றை மாசுபடுத்தும் பொருட்களின் பயன்பாட்டைக் குறைக்க வேண்டும். வாகனங்களில் அவ்வப்போது புகைக் கருவியைச் சரிபார்த்து சீர் செய்ய வேண்டும். வருடத்துக்கு ஒரு மரம் நட்டுப் பராமரிக்க வேண்டும். உணவு, உடை, உறைவிடம் போலத் தூய்மையான காற்றும் அனைவரின் உரிமையாகும்.

## உறுதிமொழி



நான் எனது சுய சுத்தப் பழக்கங்களைத் தொடர்ந்து கடைபிடிப்பதன் மூலம் எனது உடல் நலத்தைப் பேணுவேன். எனது பள்ளி, வீடு, குடியிருப்பு, பொது இடங்களான; விளையாடுமிடம், பூங்கா, தோட்டம், எனது கிராமம் மற்றும் எனது மாநிலம் ஆகியவற்றின் உள்ளும், புறமும் சுத்தமாக வைத்துக் கொள்வேன். மேலும், குப்பைகளை உரிய குப்பைத்தொட்டியில் மட்டுமே போடுவேன். என்னைச் சுற்றியுள்ள நிலம், நீர் மற்றும் காற்றினைச் சுத்தமாக வைத்திருப்பேன். சிறுநீர் மற்றும் மலம் கழிக்க கழிவறையினைப் பயன்படுத்துவேன். பயன்பாட்டிற்குப் பின்னர் அதனைச் சுத்தமாகப் பராமரிப்பேன். கழிவறைப் பயன்பாட்டிற்குப் பின்னர் சோப்பு அல்லது கிருமி நாசினியால் எனது கைகளைக் கழுவுவேன். மேலும், சாப்பிடும் முன்னர் சோப்பு அல்லது கிருமி நாசினியால் எனது கைகளைக் கழுவுவேன்.

என் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களிடையே எப்போதும் கழிவறையினைப் பயன்படுத்துதல் மற்றும் சோப்பு அல்லது கிருமி நாசினியால் கைகழுவும் பழக்கத்தை ஊக்குவிப்பேன். மகாத்மா காந்தி அவர்களின் கனவான "தூய்மை பாரதம்" என்பதற்கு இதயப் பூர்வமாக என்னை அர்ப்பணித்து எனது செயல்பாடுகள் மூலம் அதனை நிறைவேற்ற அயராது பாடுபடுவேன் என உறுதி கூறுகிறேன்.

### செயல்பாடுகள்

- சுற்றுப்புறத் தூய்மையின்மையால் ஏற்படும் விளைவுகளை எடுத்துரைத்துப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் விதம் துண்டுப்பிரசுரம் தயாரியுங்கள்
- உங்கள் பள்ளிக் காலைக்கூட்டத்தில் வாசிப்பதற்காக "மாசற்ற கேரளம்" என்னும் தலைப்பில் உறுதிமொழி தயாரியுங்கள்.
- உங்கள் பகுதியில் குப்பைக் கூளங்களால் மாசடைந்து கிடக்கும் ஓடைகள் மற்றும் தெருக்களைச் சுத்தம் செய்யும் பொருட்டு, சுகாதார அதிகாரிக்குக் கோரிக்கை மனு தயார் செய்யுங்கள்.



# குறைவற்ற செல்வம்



## வள்ளுவ மருத்துவம்

"பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ! பாரிலுள்ள நூலெல்லாம் வள்ளுவர் செய் நூலாமோ!" என வள்ளுவரையும் அவர் செய்த திருக்குறளையும் போற்றிப் புகழ்வர். மேலும், "இதில் இல்லாத செய்தி இல்லை. சொல்லாத பொருளும் இல்லை" என்றும் கூறுவர். இப்புகழுரைகள் முற்றிலும் உண்மையே. மனித வாழ்க்கையில் தாம் கண்டறிந்த அனைத்தையும் தமது ஈரடி குறட்பாவுக்குள் அடக்கிய பெருமை வள்ளுவருக்குண்டு. அவற்றுள் ஒன்று தான் நோய் குறித்த அவரது சிந்தனை. நோய்பற்றியும், நோய்க்கான காரணங்கள் குறித்தும், நோய் தீர்க்கும் மருத்துவ முறைபற்றியும் அவர் கூறியிருக்கும் கருத்துகள் மருத்துவ அறிவியலர்க்கே வியப்பைத்தருவன. 'மருந்து' என்னும் அதிகாரத்தில் இச்செய்திகள் விளக்கப்பட்டுள்ளன.

நோய் உண்டாவதற்கான அடிப்படைக் காரணம் நமது உணவு முறைதான் என்பது வள்ளுவர் கருத்து.

1. உண்ட உணவு செரித்தபின் உணவு உட்கொள்ளல்,
2. நன்கு பசித்தபின் பசியறிந்து உண்ணல்,
3. அளவோடு உண்ணல்,
4. அளவுக்கு அதிகமாக உண்ணாதிருத்தல்.

ஆகிய நான்கு நிலைகளைக் கடைபிடித்தால் நோயின்றி வாழலாம். என்கிறார், வள்ளுவப் பெருமகனார்.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்"

"இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய்."

"தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும்."

என்னும் குறட்பாக்களில் உண்ணும் நேரம், உண்ணும் உணவின் அளவைக் குறித்துப் பேசுகிறார். மேலும் வாதம், பித்தம், சிலேத்துமம் (கபம்) இவற்றின் அளவு கூடவோ குறையவோ செய்தாலும் நோய் உண்டாகும் என்பதனை,

"மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று."

என்னும் குறளில் எடுத்துரைக்கின்றார்.

நோயாளி, மருத்துவன், மருந்து, துணையாளி ஆகிய நான்கும் மருத்துவத்தின் கூறுகளாகும்.

"உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று
அப்பால் நாற்கூற்றே மருந்து."

என்ற குறளில் விளக்கப்பட்டுள்ளது.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்."

என்னும் குறட்பா வள்ளுவரின் மருத்துவ அறிவுக்கோர் எடுத்துக் காட்டாக அமைகின்றது. நோய் எதுவெனக் கண்டறிந்து , அந்நோய்க்கான மூலக்காரணத்தை ஆராய்ந்து, அதைத் தணிக்கும் மருந்தை அளிப்பதே சிறந்த மருத்துவமுறை என்கிறார். வள்ளுவரின் மருத்துவக் கருத்துகள் எக்காலத்திற்கும் பொருத்தமானவையாகும்.



"நோயற்ற வாழ்வே
குறைவற்ற செல்வம்!"

– சு. நரேந்திரன்

**ஆசிரியர் குறிப்பு :** இவர் தமிழக அரசு மருத்துவக் கல்லூரியில் பணியாற்றியவர். அறிவியல் தமிழுக்கு அரும்பணியாற்றியவர். மருத்துவம் குறித்த பல நூல்களை வெளியிட்டுள்ளார்.

### செயல்பாடுகள்

- நோயற்ற வாழ்விற்கு வள்ளுவர் கூறும் வழிமுறைகளைக் கலந்துரையாடிக் குறிப்பு எழுதுங்கள்.
- உலகச் சுகாதார தினத்தன்று உங்கள் பள்ளி சுகாதார மன்றம் சார்பாக நடைபெறும் விழிப்புணர்வு முகாமில் உரையாற்ற 'உடல் நலம் பேணுவோம்' எனும் தலைப்பில் சொற்பொழிவுரை தயார் செய்யுங்கள்.
- சுகாதாரம் குறித்த பழமொழி, விடுகதை, பொன்மொழிகளைத் திரட்டி வகுப்பில் வாசியுங்கள்.

## ஆசாரக்கோவை

உடுத்து அலால் நீர்ஆடார், ஒன்று உடுத்து உண்ணார்
உடுத்தஆடை நீருள் பிழியார், விழுத்தக்கார்
ஒன்று உடுத்து என்றும் அவைபுகார் – என்பதே
முந்தையோர் கண்ட முறை.

நீராடிக் கால்கழுவி வாய்பூசி மண்டலம்செய்து
உண்டாரே உண்டார் எனப்படுவார் அல்லாதார்
உண்டார்போல் வாய்பூசிச் செல்வர் அதுவெடுத்துக்
கொண்டார் அரக்கர் குறித்து.

– பெருவாயில் முள்ளியார்

**நூல் குறிப்பு :** ஆசாரக்கோவை பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. ஆசாரக்கோவை என்பதற்கு 'நல்லொழுக்கங்களின் தொகுப்பு' என்பது பொருள். இந்நூல் நூறு பாடல்களைக் கொண்டுள்ளது. இதன் ஆசிரியர் பெருவாயில் முள்ளியார் ஆவார்.

### செயல்பாடுகள்

- செய்யுளின் மையக்கருத்தினைக் கலந்துரையாடிக் குறிப்பாக எழுதுங்கள்.
- உங்களின் அன்றாடச் சுகாதாரச் செயல்பாடுகளை நாட்குறிப்பாக எழுதுங்கள்.
- செய்யுளில் இடம்பெறும் எதுகை, மோனைச் சொற்களை எடுத்தெழுதுங்கள்.

## சுகாதாரமே முதல் சொத்து!

பள்ளிக்கூடத்தில் மதிய உணவுக்குச் செல்ல மணி அடிக்கப்பட்டது. மாணவர்கள் அனைவரும் மதிய உணவிற்குச் சென்றார்கள். பள்ளிக்கூட மைதானத்தில் உள்ள மரங்களுக்குக் கீழே ஆங்காங்கே சில மாணவர்கள் சிறு சிறு குழுக்களாக அமர்ந்து அவரவர் உணவைப் பரிமாறிக்கொண்டு சாப்பிட்டார்கள்.

அதுபோன்ற ஒரு குழுவில்தான் சங்கர் மற்றும் அவனுடைய வகுப்பு மாணவர்களும் சாப்பிடுகிறார்கள். கடகடவென்று சாப்பிட்ட அவர்கள் சாப்பிட்டு முடித்ததும், அவர்களுள் சிலர் வகுப்பறைக்குச் சென்றுவிட்டனர். ஆனால் அந்தக்குழுவில் இருந்த சங்கர், சுப்பரமணி, சேகர் ஆகிய மூவரும் பள்ளிக்கூடத்திற்கு வெளியே சென்றனர்.

வழக்கமாக அவர்கள் மதிய உணவு நேரத்தில் சாப்பிட்டு முடிந்ததும் வெளியில் தெருவில் விற்கப்படுகின்ற மாங்காய், நெல்லிக்கனி, சுண்டல், சமூசா, பிஸ்கட் போன்ற சில தின்பண்டங்களை வாங்கித் தின்பது வழக்கம். அதேபோல் அன்றும் அவர்கள் தெருவிற்குச் சென்றனர்.

மூவரும் வெளியே சென்று சிறுசிறு தள்ளு வண்டிகளில் விற்கப்படும் தின்பண்டங்களைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தனர். இவர்களைப் போன்றே பல மாணவர்கள் வெளியில் விற்கும் தின்பண்டங்களை வாங்கித் தின்பது வழக்கம். மூவரும் சேர்ந்து மாங்காய் விற்கின்ற ஒரு வண்டியருகே சென்றனர்.

அப்போது, அதே பள்ளியில் படிக்கும் இவர்களின் நண்பன் கோபால், பக்கத்துத் தெருவில் உள்ள தன் வீட்டிற்குச் சென்று மதிய உணவை



முடித்து விட்டு வந்துகொண்டிருந்தான். இவர்கள் அவனை அழைத்து "டே, கோபால் வாடா… மாங்காய் சாப்பிடலாம்." என்று கூப்பிட்டனர்.

அதற்கு கோபால் "டே நான் ஒருபொழுதும் இதுபோன்று திறந்தவெளியில் விற்கும் தின்பண்டங்களை வாங்கிச் சாப்பிடமாட்டேன் என்று உங்களுக்குத் தெரியும் அல்லவா? தெரிந்தும் என்னை நீங்கள் கூப்பிடுவது சரியல்ல. எனக்கு வேண்டாம்" என்றான். அதற்கு அந்த மூவரும் "கோபால் இன்று ஒருநாள் மட்டும் எங்களுக்காகச் சாப்பிடுடா" என்று வற்புறுத்தினார்கள். மீண்டும், கோபால் "வேண்டாம்" என்று கூறினான்.

அதற்கு அவர்களில் ஒருவனான சங்கர் "என்னடா கோபால்! நீ ஏன்டா இதையெல்லாம் சாப்பிட மாட்டேன்னு சொல்கிறாய்?" என்று கேட்க, அதற்கு "வேறு ஒன்றும் இல்லை. இவர்கள் விற்கின்ற தின்பண்டங்கள் சுகாதாரமான முறையில் செய்வதும் இல்லை, விற்பதுமில்லை.

அது மட்டுமின்றி, வாகனங்களின் புகைகள் இவற்றின் மீது படிகின்றன. மேலும் இவற்றின் மீது கொசுக்களும் ஈக்களும் வந்து அமர்கின்றன. அந்தக் கொசுக்களும் ஈக்களும் இந்தத் தின்பண்டங்களிலும் உட்காருகின்றன.

எனவே இப்படிப்பட்ட சுகாதாரத்திற்குக் கேடான, சுத்தமற்ற தின்பண்டங்களை நாம் சாப்பிட்டால் வயிறு கெட்டுப் போய்விடும். அதனால் அஜீரணம், வாந்தி, பேதி, வயிற்றுவலி போன்ற பலவிதமான பிரச்சினைகள் நமக்கு ஏற்படுகின்றன. உடனே நாம் அந்தப் பிரச்சினைகளிலிருந்து விடுபட ஆயிரக்கணக்கான ரூபாய் மருத்துவருக்கும் மருந்துகளுக்கும் செலவு செய்கிறோம். ஒரு சமயம் செலவு செய்ய பணம் இல்லாத சூழ்நிலையில் நம்முடைய நோயைக் குணப்படுத்த முடியாமல் போனால் அந்நோய் முற்றி பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடும்.

எனவே இப்படிப்பட்ட தொல்லைகளுக்கு, நாம் ஆளாகாமல் இருக்கவேண்டுமானால், இதுபோன்று சுகாதாரமற்ற முறையில், திறந்தபடி விற்கும் தின்பண்டங்களை நாம் உண்ணாமல் இருக்க வேண்டும்.

இந்தப் பண்டங்களை விற்பவர்கள் இதைப் பற்றி எல்லாம் சிந்திப்பதும் இல்லை, இதனால். பலர் பாதிக்கப்படுவார்களே! என்று கவலைப்படுவதும் இல்லை. அவர்களுக்குத் தேவை பணம்! அவ்வளவுதான்.

எனவே, நாம்தாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அப்படி எச்சரிக்கையாக இருந்தால் நமக்கு தானே நல்லது. அது மட்டுமின்றி, இந்தப் பணத்தைச் சேர்த்து வைத்தால் ஒரு நாளைக்கு உங்களுக்கே ஒரு அவசரத்திற்கு உதவும் என்பதில் ஐயமில்லை. எனவே உங்களுடைய

உடல் நலத்தின் மேல் அக்கறை கொண்டு இந்தப் பழக்கங்களை விட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்" என்றான்.

அதற்குள் மணி அடித்தது. எல்லாரும் வகுப்புக்குத் திரும்பினார்கள். எனவே, நீங்களும் கோபாலைப் போன்று எச்சரிக்கையாக இருந்து நம்முடைய உடல் நலத்தைக் கெடுக்கும் இதுபோன்ற திறந்தவெளியில் திறந்தபடி விற்கின்ற தின்பண்டங்களை வாங்கிச் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். 'உடல் நலத்தைக் காக்க வேண்டும்'.

– கவிஞர் தூயோன்

**ஆசிரியர் குறிப்பு :** இவர் சிறுவர்களுக்கான இலக்கியங்களை எழுதுவதில் சிறந்தவர். இவர் எழுதிய 'வள்ளுவர் நெறிக்கதைகள்' என்ற நூலிலிருந்து இப்பாடப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- சுகாதாரமற்ற உணவை உண்டால் தீங்கு விளைவிக்கும் என்று அறிந்துகொண்ட கோபால் தனது நண்பர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினான். அதுபோன்று பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதம் துண்டுப்பிரசுரம் தயார் செய்யுங்கள்.
- பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள கோபால் என்ற கதாபாத்திரத்தின் பண்பு நலன்களை எடுத்தெழுதுங்கள்.
- உலக உணவு தினத்தன்று உங்கள் பள்ளிக் காலைக்கூட்டத்தில் வாசிப்பதற்குத் 'தூய்மையான உணவை உட்கொண்டு ஆரோக்கியமாக வாழ்வோம்' என்ற கருத்தமைவுடைய உறுதி மொழி எழுதுங்கள்.
- பாடப்பகுதியில் இடம்பெறும் இரட்டைக்கிளவி சொல்லைக் கண்டறிந்து வாக்கியத்தில் அமைத்து எழுதுங்கள்.
- உங்கள் பகுதியிலுள்ள சுற்றுச்சூழல் மாசடைவதற்கான காரணங்களை இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்கு நீங்கள் மேற்கொள்ளும் வழிமுறைகளையும் தீர்வையும் குறிப்பாக எழுதுங்கள்.
- நூகர்வோருக்கு சுகாதாரமற்ற உணவுப் பண்டங்களை விநியோகிக்கும் சூழலை தவிர்ப்பதற்காக சுகாதாரத்துறையின் உதவியுடன் நீங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைப் பட்டியலிடுங்கள்.



# அக அழகு



## எண்ணங்களே ஏணிப்படிகள்

'எண்ணங்களை ஏணியாக்கினால்
எதையும் சாதிக்க முடியும்'

நமது வாழ்க்கையானது நம்முடைய எண்ணங்களின் வெளிப்பாடு ஆகும். அதாவது நாம் இன்று வாழ்ந்து கொண்டு இருக்கும் வாழ்க்கையானது, இதுவரை நமது நெஞ்சில் தோன்றிய எண்ணங்களின் செயல் வடிவமாகும். ஏனென்றால், எண்ணங்களே செயல்களாக மலர்கின்றன. செயல்களே வெற்றியைத் தருகின்றன. ஆகவே சிந்தனையே நமது செல்வம். நற்சிந்தனை நமது வாழ்வின் வரங்களை அள்ளி அள்ளித் தருகின்ற தவம்.

மனித மனதில் இரு வகையான எண்ணங்கள் உண்டாகின்றன. ஒன்று 'ஆக்கச் சிந்தனை', இன்னொன்று 'எதிர்மறைச் சிந்தனை'. அதாவது எதையும் 'முடியும்' என்று அணுகுவது ஆக்கச் சிந்தனை எதையும் 'முடியாது' என்ற மனநிலையுடன் அணுகுவது எதிர்மறைச் சிந்தனை. ஆக எந்தவொரு பிரச்சினையையும் நேர்முகமாகவும் அணுகலாம். எதிர்மறையாகவும் அணுகலாம். ஆகவே எவருக்கும் அவரவர் எண்ணங்களின் தன்மையும் மனநிலையுமே அடிப்படையான காரணமாகவும் அமைகின்றன.

ஓர் ஊரில் ஒரு ஞானி இருந்தார். அவரிடம் மூன்று சீடர்கள் இருந்தனர். மூவரின் எண்ண ஓட்டத்தைச் சோதித்துப் பாற்பதற்காக ஒரு சிறிய தேர்வு வைத்தார். தனக்கு முன்னால், ஒரு மண் குடத்தைக் கவிழ்த்து வைத்துவிட்டு, மூன்று சீடர்களையும் அழைத்தார். அவர்களிடம் 'இந்தக் குடத்தில் என்ன இருக்கின்றது'? என்று கேட்டார். அதற்கு முதற் சீடன் 'ஒன்றும் இல்லை' எனக் கூறிவிட்டான்.

இரண்டாம் சீடனோ பானையை நிமிர்த்தி வைத்து தனது கையை அதனுள் விட்டுத் தேடிப்பார்த்து விட்டு 'ஒன்றுமில்லை' எனக் கூறிவிட்டான். பிறகு மூன்றாவது சீடனை அழைத்தார். உடனே அவன் 'இந்த மண் குடம் நிறையக் காற்று இருக்கின்றது' என்றான்.

இம்மூவரில், முதலாவது சீடன் எந்தவித முயற்சியும் செய்யவில்லை. இரண்டாவது சீடன் சிறிது முயன்றான். ஆனால், அவனால் ஆக்கப்பூர்வமாகச் சிந்திக்க இயலவில்லை. மூன்றாவது சீடன் எதையும் வித்தியாசமாக அணுகக் கூடியவன் என்பதை உணர்த்தும் விதமாக 'இந்தப்பானை நிறைய காற்று இருக்கின்றது' என்றான்.

முதற்சீடன் எந்தவித முயற்சியும் மேற்கொள்ளாததால் அவனைத் தேர்விலிருந்து விலக்கி விட்டு, இரண்டாவது சுற்றுச் சோதனையை ஆரம்பித்தார் அந்த ஞானி.

இரண்டாவது, மூன்றாவது சீடர்களைப் பார்த்து 'இந்தப் பானை நிறைய காற்று இருக்கின்றது என்பதை நான் ஒப்புக் கொள்கின்றேன். அந்தக் காற்றை வெளியேற்ற முடியுமா?' எனக் கேட்டார்.



உடனே இரண்டாவது சீடன், 'முடியும் குருவே' எனக்கூறியவாறே அருகில் இருந்த ஒரு பெரிய கல்லைத் தூக்கிக் கொண்டு வந்தான். அதாவது, அந்தக் கல்லால் மண் குடத்தை உடைத்தால், அதிலுள்ள காற்று வெளியேறி விடும் என்பது அவனது எண்ணம். அதை உணர்ந்து கொண்ட ஞானி, அவனைத் தடுத்து நிறுத்திவிட்டு, மூன்றாவது சீடனைப் பார்த்தார். அவன் அருகில் இருந்த இன்னொரு குடத்தில் இருந்த நீரை எடுத்து வந்து, மண் குடத்தில் ஊற்றினான். இப்பொழுது அந்தக் குடத்திலிருந்த காற்று வெளியேறி விட்டது.

இம்மூன்று சீடர்களின் செயலைக் கவனித்தால், ஒருவன் முயற்சியே செய்யாத மூடனாக இருக்கின்றான். இரண்டாவது சீடன் முயற்சி செய்தான் என்றாலும், எதிர்மறைச் சிந்தனையுடன்

பானையை உடைக்க வந்தான். மூன்றாவது சீடனுக்கு முயற்சி செய்யும் மனமும் வித்தியாசமாக சிந்திக்கும் ஆற்றலும் ஆக்கப்பூர்வமான எண்ணமும் இருந்தது.

இதுபோலத்தான் நம்மில் பலர் முயற்சிப்பதில்லை. பலர் முயன்றாலும் ஆக்கப்பூர்வமாகச் சிந்திப்பதில்லை. ஒரு சிலரே புத்திசாலித்தனமாக சிந்தித்து ஆக்கப்பூர்வமாகச் செயல்படுகிறார்கள்.

ஆகவே எதையும் சாதிக்க முடியும் என்ற மனநிலையோடு சிந்தித்து புத்திசாலித்தனமாகச் செயல்பட்டால் எதுவும் சாத்தியமே என்பதைப் புரிந்துகொண்டு செயல்படத் தொடங்குங்கள். பிறகு வெற்றி உங்களிடம் கூட்டணி அமைத்துக்கொள்ள முயலும்.

எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் உள்ளன என்று முழுமையாக நம்புங்கள். அப்படி நம்பும் போதுதான் தீர்வுகளைத் தேடுவதில் ஒரு தீவிரம் இருக்கும்.

எதையும் பன்முகமாகவும், நேர்முகமாகவும் சிந்தித்தால், தொடர்ந்து வெற்றியடைய முடியும் என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள்.

ஏற்கனவே நமது மனதில் இருக்கும் கருத்துகளே நமது சிந்தனைக்கும் செயலுக்கும் வழிகாட்டியாக அமைகின்றன. ஆகவே ஆக்கபூர்வமான மனநிலையை அமைத்துக் கொள்ள நல்ல கருத்துக்கள் அடங்கிய நூல்களை வாசிப்பது அவசியம் என்பதை உணருங்கள்.

எதைச் சிந்திக்கும் போதும், அந்தச் சிந்தனையைச் செயலாக்கும் போதும் ஏற்படும் விளைவுகளையும் சேர்த்தே சிந்தியுங்கள். மற்றவர்களுக்கு உதவும் சிந்தனைகள் தோன்றுவதற்கு வாய்ப்பாக, தியாகிகளின் வரலாறுகளைப் படியுங்கள்.

ஒவ்வொரு நாளும் உங்களைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள். நாள்தோறும் வளர்ந்து வளர்ந்து செடி தன்னைத் தானே உயிரோட்டமாக வைத்துக் கொள்கின்றது. அதுபோல முயன்று முன்னேற்றப் பாதையில் விரைந்திடுங்கள். தொடர்ந்து வென்றிடுங்கள்.

எதையும் குறைந்தது இருமுறையேனும் சிந்தித்து விட்டு முடிவெடுங்கள். சிந்திக்கும்போது தான் மனம் விரியத் தொடங்குகின்றது. விரிந்த மனமே வெற்றியின் விளைநிலம்.

பயிற்சிக்கு உட்பட்டவர்களே முயற்சி எடுப்பதில் முந்திக் கொள்கின்றார்கள். ஆகவே புதியவைகளைக் கற்றுக் கொள்வதில் முனைப்போடு இருங்கள். தேவைப்பட்டால் போதிய பயிற்சி எடுத்துக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு நாளும் நீங்கள் கடந்து வந்த பாதையை அதாவது கலந்து கொண்ட நிகழ்வுகளை இரு முறையேனும் திரும்பிப் பாருங்கள். அவ்வாறு எண்ணிப்பார்க்கும்போது நேர்ந்த தவறுகளை சரி செய்து கொண்டு முன்னேற முடியும்.

எதிலும் தவறு ஏற்படுவது இயற்கையே. என்றாலும் செய்த தவறுகளில் இருந்து பாடம் கற்றுக் கொண்டு ஒரு முறை நேர்ந்த தவறுகள் மீண்டும் மீண்டும் நேராதவாறு எச்சரிக்கையோடு செயற்படுங்கள். வெற்றி உங்களுக்கு ஒரு விழா எடுக்க நாள் குறிக்கும்.

ஆம்!

தவறுவது தவறில்லை;

தவறுகளில் இருந்து கற்றுக் கொள்ளத்

தவறுவதே தவறு.

> 'எண்ணங்களே வாழ்க்கையின் வண்ணங்கள்
> எண்ணங்களை மாற்றினால் வாழ்க்கையை மாற்றலாம்"

– கவிஞர். கவிதாசன்

**ஆசிரியர் குறிப்பு :** கவிஞர் கவிதாசன் தன்னம்பிக்கை மிக்கப் பேச்சாளர். இவருடைய பேச்சுக்கள் தன்னம்பிக்கை ஊட்டுவதாக அமைந்திருக்கும். சிறந்த எழுத்தாளர். பல்வேறு நூல்களை எழுதியுள்ளார்.

### செயல்பாடுகள்

- உலக மனநல தினத்தில் உங்கள் பள்ளிச் சுகாதார மன்றம் சார்பாக நடத்தும் பேச்சுப்போட்டியில் "நல்ல எண்ணங்களே ஏணிப்படிகள்" என்னும் தலைப்பில் உரையாற்ற சொற்பொழிவுரை தயாரியுங்கள்.
- உலக சுகாதார தினத்தன்று உங்கள் பள்ளியில் மனிதனின் நலமான வாழ்விற்குத் தேவை உடல் நலமே! / மனநலமே! எனும் தலைப்பில் பட்டிமன்றம் நடைபெறவுள்ளது. ஏதேனும் ஒரு அணியில் பேசப் பட்டிமன்ற உரை தயார் செய்யுங்கள்.
- பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள அடுக்குத் தொடர் சொல்லைக் கண்டறிந்து எழுதுங்கள். இதுபோன்ற அடுக்குத்தொடர் சொற்களைத் திரட்டி வாக்கியம் அமையுங்கள்.
- நல்லொழுக்கச் சிந்தனைப் பாடல்கள், பொன்மொழிகள், கதைகள் போன்றவற்றைத் தொகுத்து பொருத்தமான தலைப்பிட்டு மலர் ஒன்று தயார் செய்யுங்கள்.

## நெஞ்சே நில்! நில்!



திசை மாறிப் போகாதே, நெஞ்சே நில்! நில்!
தெளிவின்றிக் குழம்பாதே! என்றும் எங்கும்
அசைபோட்டுத் திரிகின்ற கோயிற் காளை
ஆகாதே; கட்டின்றி அலைந்தி டாதே!
தசைகுருதி நரம்புகளின் பொல்லா இச்சைத்
தாக்குதலைத் தாக்காமல் தகர்ந்து போக
இசையாதே! நெருப்பழுக் கிரையா காதே!
இலையிழந்த மரத்தோற்றம் எடுத்தி டாதே!

விழுஎன்று பேராசை சொன்னால் நம்பி
வீழாதே பள்ளத்தில்! வயல் வாழ் நாங்கூழ்ப்
புழுபோல வாழாமல் ஊண்கெ டுக்கும்
புழுவாக மாறாதே! இலக்க ணத்தில்
வழு என்றால் கூடஅதற்(கு) அமைதி உண்டு;
வழுஉனக்கு வருமாயின் அமைதி இல்லை!
கழுத்தளவு தண்ணீரில் மூழ்கிப் பின்னர்
கதறாதே! பதறாதே! நெஞ்சே, நில்! நில்!

கற்பனைக்கும் கனவுக்கும் காகி தப்பூக்
காட்சிக்கும் கவர்ச்சிக்கும் மொத்த மாக
விற்பனைக்குக் கொடுக்காதே உன்னை, நெஞ்சே!
விழலுக்கு நீர் பாய்ச்ச விரைந்தி டாதே!
'அற்புதம் ஆ! உன் ஆக்கம் இமயம்' என்றே
அருகிருந்து பத்துப்பேர் கூடிச் சிந்தும்
சொற்புகழ்ச்சி மழையினிலே நனைந்து வெற்றுச்
சுகங்காண ஏங்காதே! ஏமா றாதே!

– மீரா

**ஆசிரியர் குறிப்பு :** இவரது இயற்பெயர் மீ. இராசேந்திரன் என்பதாகும். இவர் தமிழ்ப் புதுக்கவிஞர், பதிப்பாளர், தமிழாசிரியர் என்ற பல தளங்களில் இயங்கியுள்ளார். மீ. இராசேந்திரன் கவிதைகள், மூன்றும் ஆறும், மன்னர் நினைவில், கனவுகள்+கற்பனைகள்=காகிதங்கள், ஊசிகள், கோடையும் வசந்தமும், குக்கூ போன்ற கவிதைகளையும் வேறு பல நூல்களையும் எழுதியுள்ளார். தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு, பாவேந்தர் விருது, சிற்பி இலக்கிய விருது, தமிழ்ச் சான்றோர் பேரவை விருது போன்ற விருதுகளைப் பெற்றுள்ளார்.

**செயல்பாடுகள்**

- 'நெஞ்சே நில்! நில்!' கவிதையை வாசித்து மையக்கருத்தைக் கலந்துரையாடி குறிப்பெழுதுங்கள்
- இலக்கணத்தில் வழு என்றால் கூடஅதற்(கு) அமைதி உண்டு;
  வழுஉனக்கு வருமாயின் அமைதி இல்லை!
  இப்பாடல் வரிகளை விமர்சனம் செய்து எழுதுங்கள்
- கீழ்க்காணும் சொற்களை அகரவரிசைப்படுத்தி, பொருள் எழுதுங்கள்.
  குருதி, இச்சை, ஊண், வழு

## தன்னைத் தான் காக்கின் சினங் காக்க

"ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு" என்பது பழமொழி. கோபங்கொள்ளாதே! அறிவுக்கு வேலை கொடு. இன்றேல், கோபம் மனிதனைக் கடுமையான துன்பத்திற்கு ஆளாக்கிவிடும்.

கூடா ஒழுக்கம் உடையவன் ஒருவன் வஞ்சக எண்ணம் உடையவனாய்ப் பொய் கூறத் தொடங்குகின்ற பொழுது அதைச் சுட்டிக்காட்டினால் கோபம் வரும் என்பது திருவள்ளுவர் உட்கிடக்கை. ஒரு மனிதன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள நினைத்தால் மனத்தில் சினம் எழாமல் காத்துக்கொள்ள வேண்டும். இன்றேல் மிகுதியான துன்பத்தை அடைய நேரிடும்.

தன்னைத் தான்காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்

என்பது பொய்யாமொழி.

நகுடன் என்பானுக்கு இந்திரபதவி கிடைத்தது. இந்திர பதவி என்பது தேவலோகப் பதவி என்பதும் தேவலோகத்திற்குச் சென்றால் வேண்டியதை வேண்டியாங்கு எய்தலாம் என்பதும் பெரும்பாலோர் கொள்கை இந்திர பதவியைப் பெறப் பொறுமை வேண்டாமா?



பல்லக்கில் செல்லவேண்டும். பல்லக்கைச் சுமந்து செல்லுதல் என்பது சுமையான வேலை. வெயிலால் வாடி, பனியால் உருகி, மழையால் நனைந்து தவமிருந்து முற்றும் துறந்த முனிவர்கள் பல்லக்கைச் சுமந்து செல்லுதல் மிகமிகக் கடுமையான வேலை. அகத்திய முனிவரும் பல்லக்கைச் சுமந்து செல்கின்றார்.

இந்திர பதவி பெற்றுப் பதவியேற்பு விழாவுக்குப் பல்லக்கில் சென்று கொண்டிருந்த நகுடன் திடீரென முனிவர்கள் மேல் கோபம் கொள்கிறான். முனிவர்கள் பல்லக்கைக் கீழே போட்டுவிட்டார்கள். நகுடனுக்குக் கிடைக்கவேண்டிய இந்திர பதவி கிடைக்காமல் போய்விட்டது. கோபத்தினால் சாபம். சாபத்தினால் பதவி பறிப்பு. பதவியிழந்தால் துன்பந்தானே!

"மறத்தல் வெகுளியை யார் மாட்டும்" என்பது வள்ளுவர் வாய்மொழி.

வாழ்க்கை என்பது கடல் போன்றது. கடலைக் கடக்கவேண்டும் என்றால் நீந்திக் கரைசேர முடியாது. தெப்பம் இருந்தால்தான் கரைசேர முடியும். அதுபோல வாழ்க்கையைக் கடக்கவேண்டும் என்றால் உற்றார் உறவினர், நண்பர்கள் இருக்கவேண்டும். இல்லையென்றால் தனிமனிதனால் வாழ்க்கையைக் கடக்கமுடியாது. தெரிந்தோ தெரியாமலோ ஒருமனிதன் பிறரைச் சார்ந்தே வாழ்கின்றான். எவருடைய உதவியுமின்றி யாரும் வாழ்ந்துவிட முடியாது. நெருப்புப் பிடித்துக்கொண்டால் தான் சேர்ந்த இடத்தை மட்டும் அழிக்கும். சேராத இடத்தை அழிக்காது. ஆனால், சினம் என்னும் நெருப்பு சேராத இடமாகிய தொலைதூரத்திலுள்ள உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் பற்றி அழித்துவிடும்.

உறவினர்களும் நண்பர்களும் இல்லையென்றால் உலக வாழ்க்கை ஏது? அதனால்

"சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்"

என்று எச்சரிக்கை செய்கின்றார் திருவள்ளுவர்.

– மு. அழகப்பன்

**ஆசிரியர் குறிப்பு :** இவர் சிறந்த படைப்பாளர். கவிதைகள், கட்டுரைகள் உட்பட ஏராளமான நூல்களை எழுதியுள்ளார். இவர் எழுதிய நல்லொழுக்கச் சிந்தனைகள் என்ற நூலிலிருந்து இப்பாடப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- உங்களுக்கு ஏற்படும் மிகை உணர்வுகளைக் கையாளும் வழிமுறைகளைக் குறிப்பாக எழுதுங்கள்.
- மனநலத்தைக் காக்க வள்ளுவர் கூறும் வழிமுறைகளைப் பட்டியலிடுங்கள்.
- 'ஆத்திரக் காரனுக்குப் புத்திமட்டு' என்னும் பழமொழிக்குப் பொருத்தமான கதை எழுதுங்கள்.
- பாடப்பகுதியில் பயின்று வந்த குறட்பாக்களுக்குப் பொருள் கண்டறிந்து எழுதுங்கள்.



அலகு 2

# தெளிவானம்



சமூகத்தில் பாலின சமத்துவம் பேணப்பட வேண்டும். பாலின அடிப்படையில் எவரையும் உயர்ச்சித் தாழ்ச்சிப் படுத்துவது அறமன்று. தற்காலச் சூழலில் பெண்கள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர்கள் பல்துறை வித்தகர்களாக மிளிர்கின்றனர். மேலும் சமூக சேவை, மருத்துவம், திரைத் துறைகளில் தங்களின் தனித்திறன்களை நிலைநாட்டியுள்ளனர்.

# விண்மீன்கள்



## பாரதத்தின் ஒளிமிகுந்த மாதர்கள்

பாரத நாட்டின் பெருமை அதன் பெண்களையும் பொறுத்தது என்பது உலகறியும். வேதகாலம் முதல் இந்திய வரலாற்றில் பெண்கள் நிலையான ஓர் இடம் பெற்றுவிட்டனர். அக்காலத்தில் ஒளிவிடும் நட்சத்திரங்களாகத் திகழ்ந்த கார்க்கி, மைத்திரேயி முதலியோரது வரலாறு இவ்வுண்மையை எடுத்துக்காட்ட வல்லது.

பேரிதிகாசங்களான பாரதம், இராமாயணம் முதலியவற்றிலும் பெண்களே நடுநாயகமாகத் திகழ்வதைக் காணலாம். திரௌபதியும், சீதையும் அவ்வக்காலச் சூழ்நிலைக்கேற்ப மிக உன்னதமான லட்சியக் கதாபாத்திரங்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். இன்றும் என்றென்றும் இம்மாதரசிகள் பாரதத்தின் பெண்குலத்திற்கு ஒளி காட்டி நிற்கின்றனர். இன்னும் நளாயினி, சாவித்திரி, தமயந்தி, அனுசூயை போல்வாரின் வரலாறும் பெண் மக்கள் உள்ளத்தில் இடம்பெற்று அவர்கள் பண்பாட்டை வளர்ப்பதற்குரியதாக இருக்கிறது.

சங்க இலக்கியங்கள் மூலம் நம் நாட்டில் அறிவாற்றல் பெற்றுச் சிறந்து விளங்கிய ஔவையார் போன்ற பெண்பாற் புலவர்களைப் பற்றி அறிகிறோம். இவர்கள் இயற்றி வைத்துப்போன அறிவுரைகளும் பிறவும் உலகுள்ளளவும் புகழ் மங்காது ஒளிர்வன. அறிவுத்துறையில் புரட்சியை உண்டு பண்ணிய லீலாவதி அம்மையார் வான சாஸ்திரக் கலையில்

பற்பல ஆராய்ச்சிகளைச் செய்து பல உண்மைகளைக் கண்டறிந்ததன் பயனாகத்தான் இன்று நாம் பஞ்சாங்கங்கள், ஜியோமிதி, பீஜகணிதம் ஆகிய கணித சாஸ்திரங்களை அறிகிறோம்.

இந்திய வரலாற்றின் இடைக்காலத்திலும் கண்ணகி, மணிமேகலை போன்ற வீரக் கற்பரசிகளைப் பற்றி சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களுள் காண்கிறோம். அறம் காக்க இவர்கள் ஆற்றிய அருஞ்சாதனைகள் நாம் அறிவோம்.

புராண வரலாற்றால் திலகவதியார், காரைக்கால் அம்மையார் ஆகியோரைப் பற்றியும் அறிகிறோம். இவர்களது அஞ்சா நெஞ்சுரம் நம்மை வியக்கச் செய்யும் வகையில் உள்ளது. சரித்திரத்தில் நிலையான புகழ் பெற்றுவிட்ட ராணி மங்கம்மாள் தமிழ் நாடெங்கும் தமது பெயரை விளக்கும் சத்திரம் சாவடிகளின் வாயிலாக அவரது உதாரகுணத்தை ஏழை மக்கள் எண்ணிப்பார்த்து அஞ்சலி செய்யும் வகையில் அணையாத ஜோதியாகத் திகழ்கிறாள்.

முதல் உலகப்போர் மூண்டபோது ஹோம்ரூல் இயக்கத்தை ஆரம்பித்து வைத்தார் அன்னிபெசன்ட் அம்மையார். விதேசிப் பொருட்களைத் தவிர்க்கவும் மதுவை விலக்கவும், தேசியக் கல்வித் திட்டத்தை அமைக்கவும் அரும்பாடு பட்டார். அம்மையார் கவிக்குயில் சரோஜினி நாயுடு, ஆங்கிலேயரை எதிர்த்து உப்பு சத்தியாக்கிரகத்தை நடத்தினார். இன்னும் இவர்போல் அரசியல் துறையில் முன்னணியில் நின்று அரும்பெரும் சாதனைகள் புரிந்த கமலாதேவி சட்டோபாத்தியாய, அன்னை கஸ்தூரிபா, கமலா நேரு, கசின்ஸ் அம்மையார், ருக்மணி லெட்சுமிபதி ஆகியோரை நாம் மறக்க முடியுமா? இவர்களெல்லாம் பாரதத்தாய் ஈன்ற சுடர்மணிகள் அல்லவா?



இன்னும் இவர்களைப் போன்ற நட்சத்திரங்கள் பல வானில் மின்னிக்கொண்டுதான் இருக்கின்றனர். இருண்ட நெறிகளில் நாம் செல்லாதவாறு ஒளி காட்டி, வழி காட்டி நிற்கின்றன. ஸ்ரீமதி துர்க்காபாய் போன்ற தியாக நட்சத்திரங்களைத்தான் குறிப்பிடுகின்றேன். அரசியல் துறையில் ஈடுபட்டு உப்பு சத்தியாகிரகம் நடைபெற்றபோது சிறைப்பட்ட இரத்தினங்களில் இவரும் ஒருவர். தன்னலம் பாராது தியாகமே உருவாக, பெண்குலத்தின் நலனுக்கே தம்மை அர்ப்பணித்த சுடர்மணிகள் இன்னும் இருப்பதனால் தான் அவர் காட்டும் நெறியைப் பின்பற்றி எண்ணற்ற மக்கள் வெற்றிப் பாதையை நோக்கிச் சென்றுகொண்டிருக் கின்றனர்.

இதுபோல சமூகத் துறையிலும், கல்வித் துறையிலும் தன்னலமற்ற பணியாற்றிய டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, சகோதரி சுப்புலட்சுமி அம்மாள், லேடி வெங்கட்ட சுப்பராவ், கிளப்வாலா ஜாதவ் ஆகிய சகோதரிகளும் வருங்கால மக்களாகிய இந்தியப் பெண்மணிகளுக்கு ஒளிகாட்டும் சுடர்களாக விளங்குவார்கள்.

– ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள்

**ஆசிரியர் குறிப்பு :** இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்நாட்டுப் பெண் ஆவார். நாட்டுப் பற்று மிக்கவர். நான் கண்ட பாரதம், மகாத்மா காந்தி நினைவு மாலை முதலிய நூல்களைப் படைத்துள்ளார். அவர் எங்கே இருப்பார்? என்ற சிறுகதைத் தொகுப்பிற்கும் சொந்தக்காரர்.

### செயல்பாடுகள்

- சமுக சேவைத் துறையில் சாதனை படைத்த பெண்மணிகளின் வாழ்க்கை வரலாற்றை நூலகத்தின் துணையோடு திரட்டி எழுதுங்கள்.
- உங்கள் பள்ளியில் நடைபெறும் பேச்சுப் போட்டியில் பங்கேற்க 'பெண் கல்வியின் முக்கியத்துவம்' என்னும் தலைப்பில் உரை ஒன்று தயார் செய்யுங்கள்.
- பாடப்பகுதியில் பயின்று வரும் பிறமொழிச் சொற்களை இனங்கண்டு அதற்கிணையான தமிழ்ச் சொற்களை எழுதுங்கள்.

## பெண்மைக்கு நிகரிலை!

உலகினில் பெண்மையில் உயர்வானது வேறிலை!
உண்டாக்கி உயிர்களை உவப்புடன் காக்கும்
அந்தப் பெண்மைக்கு நிகராக ஒன்றிலை!
மென்மைக்கு மென்மையாய் மேன்மைக்கு மேன்மையாய்
ஒளிமுகங் காட்டும் அந்தப் பெண்மையின்
அடிச்சுவட் டினிலே அகிலம் நடந்திடும்!
அன்பு என்பதன், அமைதி என்பதன்
வேர்இந்தப் பெண்மையில் விளைவதே யாகும்!
முகிழ்க்கும் உயிர்களின் முன்னேற் றங்கள்
அரியஇப் பெண்மையில் அடங்கிய தாகும்!
தோல்விகள் இங்கே தொடர்கதை யாவதும்
தூயஇப் பெண்மை துணைவராமைதான்!

அமுதப் பெண்ணும் ஆர்த்தே எழுந்தால்
ஆயிரம் சிக்கல்கள் அறுந்து பொடியும்!
அடிமை விலங்கும் நொறுங்கிச் சிதறும்!
இனிய பெண்மை இமைவிழி திறந்து
சூரியன் நாணும் சுடர்முகங் காட்டினால்
பொலிவிலா அனைத்தும் பொலிவுடன் நடக்கும்
புதைந்தவை கூட பூத்துச் சிரிக்கும்!
மாயங்கள் கோடி மண்ணில் விளையும்;
மாண்புறு செயல்கள் நித்தம் தழையும்
அணையாப் பெண்மை அறிந்து தெளிந்து
அறிவியல் வழியில் ஆய்ந்து நடந்தால்
கூத்தாடும் கொடுமைகள் குலைநடுங்கி ஓடும்
கொண்டாடும் மடமைகள் பிழைப்பற்று வாடும்!



– பொன்னடியான்

**ஆசிரியர் குறிப்பு :** இவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் மாணவராவார். பனிமலர், ஓர் இதயத்தின் ஏக்கம், ஒரு கைதியின் பாடல்கள், பறக்கத் தெரியாத பட்டாம் பூச்சிகள், பொன்னடியான் கவிதைகள், நினைவலைகளில் பாவேந்தர் போன்ற நூல்களைப் படைத்துள்ளார். இவர் ஐ. நா. பண்பாட்டுக் கழக விருது, தமிழக அரசின் பாவேந்தர் விருது போன்ற விருதுகளைப் பெற்றுள்ளார்.

### செயல்பாடுகள்

- கவிதையை வாசித்து மையக்கருத்தினைக் கலந்துரையாடிக் குறிப்பெழுதுங்கள்
- கவிதையில் இடம்பெறும் அருஞ்சொற்களுக்கு அகராதி உதவியுடன் பொருள் எழுதி அகரவரிசைப்படுத்துங்கள்.
- பாடல் அடியில் சொல்லோ, பொருளோ முரணுடையதாக வருமேயாயின் அதை முரண்தொடை என்போம். இப்பாடலில் இடம்பெறும் முரண்தொடைச் சொல்லைக் கண்டறிந்து எழுதுங்கள்.

## பத்துப் பேருக்கு உதவணும்



பிலிசேரி கிராமத்தைத் தேடிக் கண்டு பிடித்து நாங்கள் அங்கு போய்ச் சேர்ந்தபோது மணி காலை எட்டு. அழகான சிறிய கிராமம். ஊருக்கு நடுவில் சின்னதாய் ஒரு கோயில். கோவிலுக்குப் பின்புறம் சின்னப்புள்ளையின் வீடு. பத்மஸ்ரீ, சக்தி புரஸ்கார் விருது பெற்ற சின்னப்புள்ளையிடம் பேட்டி எடுப்பதற்காக வந்திருக்கிறோம் என்று சொல்லி அங்கிருந்தவர்களிடம் அறிமுகப்படுத்திக் கொண்டோம்.... 'மேக்கால போயிருக்காங்க. இன்னும் சித்த நேரத்துல வந்துருவாங்க. காப்பி எதுவும் குடிக்கறீங்களா?' என்று உபசரித்தார் ஒரு பெண்மணி.

நகர வாசனை படாத ஒரு சின்னக் கிராமம், எங்களையும் நாங்கள் வந்த வாகனம், கேமரா எல்லாவற்றையும் ஆர்வமாய்ப் பார்ப்பதற்காக வந்த கூட்டம் என்று இருந்த அந்தக் கிராமத்தைப் பார்த்தபோது இந்த ஊரிலிருந்து ஒரு பெண் சமூக சேவை செய்ததற்காக 'பத்மஸ்ரீ', 'சக்தி புரஸ்கார்' விருது பெற்றிருக்கிறார் என்பது ஆச்சர்யமாகவே இருந்தது.

அந்த வழியே டி.வி.எஸ். பிஃப்டியில் வந்த ஒரு மனிதரிடம், "அங்கிட்டு போனீன்னா டிவில இருந்து ஆளுக வந்துருக்காங்கன்னு சொல்லி அத வரச்சொல்லு" என்று தகவல் சொல்லி அனுப்பினார் அந்தக் காபி கொடுத்த பெண். கொஞ்ச நேரத்தில் கண்ணுக்கெட்டிய தூரத்தில் வயதான ஒரு பெண்மணி ஓட்டமும் நடையுமாக வந்து கொண்டிருந்ததைப் பார்க்க முடிந்தது. சின்னப்புள்ளைதான் அவர்.

"சின்ன பிள்ளை" மாதிரி நடையில் அப்படியொரு வேகமும் சுறுசுறுப்பும். வேகமாக ஓடிவந்த ஒரு பையன் 'அந்தா வந்துட்டாங்க' என்று சொல்லி அடையாளம் காட்டினான். குறைந்த பட்சம் யாராவது பைக் ஓட்டிவர பின்சீட்டில் அமர்ந்து வருவார் என்றுதான் நினைத்திருந்தேன். நம் சராசரி கற்பனைகளுக்கும் அப்பாற்பட்டுத்தான் இருந்தது சின்னப் புள்ளையின் இயல்பு வாழ்க்கை.

"அங்குன வாரம்னு சொல்லியிருந்தேன். நீங்க வாரதுக்குள்ள வெள்ளனமே போயிட்டு வந்துரலாமுன்னு போனேன். கொஞ்ச நேரமாயிருச்சு... ஏதாவது சாப்புட்டீங்களா?" என்று கனிவோடு விசாரித்தார். "ஒன்னும் அவசரமில்லைம்மா. நீங்க ஏதாவது சாப்பிட்டுட்டு வாங்க" என்று சொல்லிவிட்டுப் பக்கத்திலிருந்த ஊர்க்காரரிடம் பேச்சுக் கொடுத்தேன்.

"நடவுக்குக் காசு வாங்கியாந்து எல்லாருக்கும் குடுக்கறதுக்காக போயிருந்தாங்க" என்றார் அவர். அவர் சொன்ன இடம் சின்னப்புள்ளை வீட்டிலிருந்து 3 கிலோ மீட்டர் தூரம்.

"சமுதாயத்துல விழிப்புணர்ச்சி ஏற்படுத்தறது, சேவ செய்யறது இதெல்லாம் நகரத்துல இருக்கற பணக்காரங்க செய்யற வேலைன்னு பொதுவா ஒரு நினைப்பிருக்கு. ஆனா, இந்தக் குக்கிராமத்துல இருந்துக்கிட்டு கஷ்ட ஜீவனத்துக்கு நடுவுலயும் நாலு பேருக்கு ஏதாவது நல்லது செய்யணும்னு உங்களுக்கு எப்படி தோணுச்சு".

"கிராமத்துல வந்து வேலைக்குப் போனாலும் சரியான கூலி கிடைக்காது. கந்து வட்டிக்குக் காசு வாங்கி அதுக்கு வட்டி கட்ட முடியாம நொடிச்சுப்போய் ஒவ்வொரு நாளும் வாழ்க்கையை நகர்த்தறதே எங்க ஆளுகளுக்கு அவ்வளவு கஷ்டம். அந்த நேரத்துல வெளில இருந்து வந்து நிறைய சமூக சேவைக்காரங்க எங்களுக்கு உதவியெல்லாம் செஞ்சாங்க. இந்த மனுஷங்க மூணு வேளை சாப்பிடறதுக்கு வழி பண்ணித் தந்தாங்க... வெளில இருந்து வந்து நம்மளுக்காக இவ்வளவு ஆதரவு செய்யறாங்களே, நாமளும் நம்ம கிராமத்துல இருந்து நம்ம மக்களுக்காக வேலை செய்யக் கூடாதான்னு எனக்கு ஓர் ஆர்வம் தோணுச்சு. எவ்வளவுதான் நம்மளோட சுமை இருந்தாலும் நமக்குச் சாப்பாட்டுக்குக்கூட வழி இல்லாம இருந்தாலும் நாமளும் பத்து பேருக்கு உதவி பண்ணனும். நம்ம மக்களை முன்னுக்குக் கொண்டாரணும் அப்படின்னு எனக்கொரு எண்ணம் தோணுச்சு. காலைல எந்திருச்சு நீராகாரத்தையோ மோரையோ குடிச்சுட்டு விடுவிடுன்னு எங்க சேவை ஆபீசுக்குப் போயிருவேன்."

இந்தக் குக்கிராமத்திலிருந்து கொண்டு விவசாயக் கூலிகளுக்காகவும், பெண்களின் வாழ்வியல் உரிமைகளுக்காகவும் உழைத்துக் கொண்டிருந்த சின்னப்புள்ளையின் பணி இந்தியா முழுவதும் தெரிய வந்தது.

குடும்பத்தில் வறுமை தாண்டவம் ஆடிய நிலையில்.... சின்னப்புள்ளை சமூகசேவை போன்ற பொது விஷயங்களில் ஈடுபட்டதை அவரது குடும்பம் ஆதரிக்கவில்லை. ஆனாலும் மக்களுக்காக எதையாவது செய்ய வேண்டும் என்ற உத்வேகத்திலும் அன்பிலும் தொடர்ந்து சமூகப் பணிகளில் ஈடுபட்டு வந்திருக்கிறார். "இவ்வளவு சிரமத்தின் மத்தியில் சேவை, தொண்டுன்னு போறப்ப நிறையக் கஷ்டங்கள் வரும். அந்த நேரத்துல உங்களை என்ன சொல்லித் தேத்திக்குவீங்க?"

"மனசுக்கு வேதனையாயிருந்தா அப்படியே படுத்திருப்பேன். சாப்பிடாமக்கூடக் கிடப்பேன். கொஞ்ச நேரத்துல ஒரு கால்மணி நேரத்துலயோ அரைமணி நேரத்துலயோ அந்த ஞாபகம் போய்

மக்களுக்காக நாம செய்யணுமே... இங்க வாரம்ணு சொல்லியிருந்தமே... அங்க போகணும்னு சொல்லி இருந்தமே... அங்கன ஒரு பிரச்சினை இருக்கு. நிறைய அந்த மாதிரி எண்ணங்கள் வந்துக்கிட்டே இருக்கும். அப்ப எந்திரிச்சி முகத்தக் கழுவிட்டு ஏதாவது சாப்பாடு இருந்தா சாப்பிட்டுக் கிளம்பிருவேன்."

மனசு கஷ்டமாக இருந்தால் என்னவெல்லாம் செய்யலாம் என்பதற்கான புத்தகங்கள்கூட வந்து விட்டன. இசை கேட்கலாம். ஓவியம் வரையலாம். நண்பரோடு தொலைபேசியில் உரையாடலாம். பிடித்த சினிமாவுக்குப் போகலாம். என்றெல்லாம் ஆயிரம் உத்திகளுண்டு. கிராமத்து மனுசிகளுக்கெல்லாம் அந்த வாழ்க்கை இல்லை. மனசு லேசாகும்வரை அழுதுவிட்டு பழைய வாழ்க்கைக்குத் திரும்புவதைத் தவிர அவர்களுக்கு வேறு கதியில்லை. சின்னப்புள்ளை போன்ற மனிதர்களைச் சமூகம் கொண்டாட வேண்டும் என்பதற்கு அவர்கள் வாழ்க்கைச் சூழலில் இருக்கும் காரணிகளே போதுமானது. மூன்று வேளை உணவு தனக்கு வாய்க்காத போதும்கூட சக மனிதர்களுக்காக ஏதாவது செய்ய வேண்டு மென்ற துடிப்பு ஒரு கிராமத்துக் கிழவியிடம் இருப்பதைப் பாராட்டுவ தோடு நிறுத்திக் கொள்ளாமல், அவரிடமிருந்து கற்றுக்கொள்ள ஆயிரம் விஷயங்கள் இருக்கிறது என்பதை அறிய வேண்டியதே இங்கே முக்கியம்.

"நெருக்கடிகளுக்கு மத்தியிலிருந்து பிறக்கிற கவிதையில் உயிரின் தன்மை அதிகமிருக்கிறது" எனப் பிரபலமான ஒரு வாசகம் உண்டு. சின்னப்புள்ளையின் சேவைகளும்கூட அப்படித்தான். கணவர் இல்லாமல் தனிமனுஷியாக தன் சொந்த வாழ்விலும் போராடிக் கொண்டுதான் இருக்கிறார் சின்னப்புள்ளை. "கூலி வேலைக்குப் போனாத்தான் சாப்பாடு. கொத்தனார் வேல பாப்பேன். பத்துப்பேர வெச்சு நடவு நட்டு அவங்களுக்குக் காசு வாங்கியாந்து பிரிச்சுக் குடுப்பேன். பல நேரம் வீட்ல சமைக்க முடியாமப் போயிரும். நெறைய கஷ்டந்தான். ஆனா நம்மள விட கஷ்டப்படறவங்க நிறையப் பேர் இருக்காங்கன்னு நினைச்சுப் பார்க்கணும். என்னை மாதிரி நாட்டுல எல்லாருமே எடுத்து உதவி செஞ்சா நல்லாருக்கும். அவங்க முன்னுக்கு வர்றதுக்கு இதனால் நல்ல வாய்ப்பா இருக்கும். படிச்ச பெண்கள் பெரிய பெரிய அதிகாரியா இருக்காங்க. அந்த மாதிரி ஆளுங்கள்ளாம் படிக்காத ஓர் அம்மா இப்படிச் செஞ்சிருக்கே. நாமளும் ஏதாவது எடுத்துச் செய்யணும்ணு நினைச்சா நிறைய பேருக்கு நல்லது நடக்கும்..."

இப்படித்தான் பேச வேண்டுமென்று மெனக்கெட்டுத் திட்டமிடாமல் மனதில் பட்டதைப் பேசுகிறார் இந்தக் கிராமத்து மனுஷி. சொந்த வாழ்க்கையில் சோகங்களும் துயரங்களும் தொடர்ந்து துரத்தினாலும், அழுத கண்களைத் துடைத்தபடியே அடுத்த சமூகப் பணிக்குப் புறப்படுகிறார் சின்னப்புள்ளை.

– கோபிநாத்

**ஆசிரியர் குறிப்பு :** இந்த நேர்காணல் கோபிநாத் அவர்கள் பத்மஸ்ரீ, சக்தி புரஸ்கார் விருதுகள் பெற்ற சின்ன புள்ள என்ற பெண்மணியைப் பேட்டி கண்ட பகுதியாகும். கோபிநாத் ஒரு தொலைக்காட்சியின் தொகுப்பாளராகப் பணியாற்றி வருகிறார்.

## செயல்பாடுகள்

- பெண்கள் தினத்தை முன்னிட்டு இலக்கிய மன்றம் சார்பாக நடைபெறும் விழாவில் உரையாற்ற 'சமூக சேவையில் பெண்கள்' என்னும் தலைப்பில் சொற்பொழிவுரை தயார் செய்யுங்கள்.
- சமூக சேவையில் ஈடுபடும் தன்னார்வலர்களைப் பற்றிய செய்தித் துணுக்குகளைத் திரட்டிக் குறிப்பு தயாரியுங்கள்.
- 'பத்மஸ்ரீ', 'சக்தி புரஸ்கார்' விருது பெற்ற சின்ன புள்ளையின் சமூகச் சேவையைப் பாராட்டி, சின்னப்பிள்ளைக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுங்கள்.
- "அங்குன வாரம்னு சொல்லியிருந்தேன். நீங்க வாரதுக்குள்ள வெள்ளனமே போயிட்டு வந்துரலாமுன்னு போனேன். கொஞ்ச நேரமாயிருச்சு.. ஏதாவது சாப்புட்டீர்களா?"

  வட்டார வழக்கில் அமைந்த இவ்வரிகளைத் திருந்திய தமிழ் நடையில் எழுதுங்கள்.



# சுடர்கள்



## மருத்துவ அறிக்கை

டாக்டர்
மருத்துவ முறையை
மாற்றுங்கள்
"வாயைத்திற" என்பீர்கள்
வயிறு தெரியும்படி
வாய் திறப்போம்
"நாக்கை நீட்டு" என்பீர்கள்
கல்கத்தா காளியாய்
நாக்கை நீட்டுவோம்
"முதுகைத் திருப்பி
மூச்சிழு" என்பீர்கள்
அப்போது தான்
உண்மையாய் சுவாசிப்போம்
அவ்வளவுதான்!
அஞ்சேல்' என்று
அருள் வாக்கு சொல்வீர்கள்
வாசிக்க முடியாத கையெழுத்தில்



வாயில் வராத பெயரெழுதிக்
காகிதம் கிழிப்பீர்கள்
மூன்று வேளை..... என்னும்
தேசிய கீதத்தை
இரண்டே வார்த்தையில்
பாடி முடிப்பீர்கள்
போதாது டாக்டர்
எங்கள் தேவை
இது இல்லை டாக்டர்
நோயாளி பாமரன்
சொல்லிக் கொடுங்கள்
நோயாளி மாணவன்
கற்றுக் கொடுங்கள்
வாய்வழி சுவாசிக்காதே
காற்றை
வடிகட்டும் ஏற்பாடு
வாயில் இல்லையென்று
சொல்லுங்கள்
சுவாசிக்கவும்
சூத்திரமுண்டு
எத்தனை பாமரர்
இஃதறிவார்?
சுவாசிக்கப்படும்
சுத்தக்காற்று
நுரையீரலின்
தரைதொட வேண்டும்
தரையெங்கே தொடுகிறது?
தலைதானே தொடுகிறது
சொல்லிக் கொடுங்கள்
சாராயம் என்னும்
திரவத்தீயைத் தீண்டாதே
கல்லீரல் எரிந்துவிடும்
கல்லீரல் என்பது கழுதை
பாரஞ்சுமக்கும்
படுத்தால் எழாது
பயமுறுத்துங்கள்
ஒருகால்வீக்கம்
உடனே கவனி
யானைக்காலின் அறிகுறி
இரு கால் வீக்கம்
இப்போதே கவனி
சிறுநீரகத்தில் சிக்கலிருக்கலாம்
வாயில் என்ன
ஆறாத புண்ணா?
மார்பகப் பரப்பில்
கரையாத கட்டியா?
ஐம்பது தொட்டதும்
பசியே இல்லையா?
சோதிக்கச் சொல்லுங்கள்
அறியாத புற்றுநோய்
ஆனா ஆவன்னா எழுதியிருக்கலாம்
நோயாளியை
துக்கத்திலிருந்து
துரத்துங்கள் டாக்டர்
நோயொன்றும் துக்கமல்ல
அந்நியக்கசடு வெளியேற
உடம்புக்குள் நிகழும்
உள்நாட்டு யுத்தமது
சர்க்கரை என்பது
வியாதியல்ல
குறைபாடு என்று கூறுங்கள்
செரிக்காத உணவும்
எரிக்காத சக்தியும்
சுடுகாட்டுத்தேரின்
சக்கரங்கள் என்று
சொல்லுங்கள் டாக்டர்
ஊமை ஜனங்களிவர்
உள்ளொளி அற்றவர்
பிணி வந்திறப்பினும்
முனி வந்திறந்ததாய்
முனகுவர்
சொல்லிக் கொடுங்கள்
யோகம் என்பது
வியாதி தீர்க்கும்

வித்தை என்று
சொல்லுங்கள்
உயிர்த்தீயை
உருட்டி உருட்டி
நெற்றிப் பொட்டில்
நிறுத்தச்சொல்லுங்கள்!
உணவு முறை திருத்துங்கள்
தட்டில் மிச்சம் வைக்காதே
வயிற்றில் மிச்சம்வை
பசியோடு உட்கார்
பசியோடு எழுந்திரு
சொல்லுங்கள் டாக்டர்
அவிக்காத காய்களே
அமிர்தமென்று சொல்லுங்கள்
பச்சை உணவுக்குப்
பாடம் நடத்துங்கள்
மருந்தை உணவாக்காதே
உணவை மருந்தாக்கு
மாத்திரைச் சிறைவிட்டு
மனிதனே வெளியேவா
கோணாத ஒருவன்
கூனன் ஆனான் – ஏனாம்?
அவன்
டப்பா உணவுகளையே
உட்கொண்டதுதானாம்
ஒருவனுக்கு
விஷப்பாம்பு கடித்தும்
விஷமில்லை ஏனாம்?
அவன்
உப்பில்லா உணவுகளையே
உட்கொண்டதுதானாம்
ஆரோக்கிய மனிதத் தேவை
அரைகிராம் உப்புதானே
மனிதா
உப்பைக் கொட்டிக் கொட்டியே
உயிர் வளர்க்கிறாயே
செடி கொடியா நீ?
சிந்திக்கச்சொல்லுங்கள்
உண்மை இதுதான்
மனிதனைத் தேடி
மரணம் வருவதில்லை!
மரணம் தேடியே
மனிதன் போகிறான்
டாக்டர்
எல்லா மனிதரையும்
இரு கேள்வி கேளுங்கள்
பொழுது
மலச்சிக்கல் இல்லாமல்
விடிகிறதா?
மனச்சிக்கல் இல்லாமல்
முடிகிறதா?

கவிஞர். வைரமுத்து

**ஆசிரியர் குறிப்பு :** இவர் 1953 ஆம் ஆண்டு வடுகப்பட்டி என்ற கிராமத்தில் பிறந்தார். தமிழ் திரைப்படப் பாடல் ஆசிரியர். சிறந்த பாடலாசிரியருக்கான தேசிய விருதை ஏழுமுறை வென்றுள்ளார். இன்னொரு தேசிய கீதம், இந்தப் பூக்கள் விற்பனைக்கல்ல, தண்ணீர் தேசம், கருவாச்சி காவியம் போன்றன இவரது படைப்புகள். கள்ளிக்காட்டு இதிகாசம் என்னும் நூலிற்கு சாகித்திய அகாதமி விருதைப் பெற்றுள்ளார். 2014 இல் பத்மபூஷன் விருதையும் பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- 'மருத்துவ அறிக்கை' கவிதையின் உட்பொருளைக் கலந்துரையாடித் தற்கால மருத்துவச் சூழலோடு ஒப்பீடு செய்து குறிப்பெழுதுங்கள்.

- "பொழுது
  மலச்சிக்கல் இல்லாமல்
  விடிகிறதா?
  மனச்சிக்கல் இல்லாமல்
  முடிகிறதா?"

  இவ்வரிகள் உணர்த்தும் கருத்தினைக் குறிப்பாக எழுதுங்கள்.
- வேளை, வேலை என்னும் சொற்களின் வேறுபாடறிந்து, வாக்கியம் உருவாக்குங்கள்.

## அடையாற்றில் இன்னொரு ஆலமரம்

2021 ஜனவரி 20 அன்று வெளியான எல்லா நாளிதழ்களிலும் ஒரே செய்தி ஒரு முக்கியச் செய்தியாக வெளிவந்திருந்தது. அதைப் படித்த பலரும் அதிர்ச்சியடைந்தனர். பலரும் உள்ளுருகிக் கண்ணீர் வடித்திருக்கலாம், குறிப்பாகப் புற்று நோயாளிகளும் புற்று நோயிலிருந்து குணம் அடைந்தவர்களும். 'மருத்துவர் சாந்தா காலமானார்' என்பது தான் அந்தச் செய்தி. அவரது இழப்பிற்கு ஏன் இந்த நாடே கண்ணீர் விடவேண்டும்! நாட்டின் பிரதமர், மாநில முதல்வர் முதலாக அரசியல் பிரமுகர்களும் அனைத்துத் துறைகள் சார்ந்த சான்றோர்களும் சாதாரண மக்களும் ஏன் இரங்கல் தெரிவிக்க வேண்டும்! ஒரு மருத்துவராக மட்டுமல்லாமல் மனிதாபிமானம் மிக்க ஒரு சமூக சேவகியாகவும் அவர்



சென்னை அடையாறில் ஓர் ஆலமரம் உள்ளது. இம்மரம் சுமார் 450 ஆண்டுகள் பழமையானது. உலகம் முழுவதுமுள்ள மிகப்பெரிய ஆலமரங்களில் ஒன்றாகவும், இந்தியாவின் இரண்டாவது பெரிய ஆலமரமாகவும் கருதப்படுகிறது. இம் மரத்தின் விழுதுகள் சுமார் (63000) 63 ஆயிரம் சதுர அடி அளவில் பரந்து விரிந்து காணப்படுகின்றன. மரம் நிற்கும் இடத்தின் மொத்தப் பரப்பளவு 59,500 சதுர அடி. அடையாறு ஆலமரம் அடையாற்றுக்கு மட்டுமல்ல, சென்னையின் அடையாள மாகவும் கருதப்படுகிறது.

செயற்கரிய செய்தவர் என்பதுதான் அவரது பெருமைக்குக் காரணம். 'தோன்றின் புகழொடு தோன்றுக' எனும் வள்ளுவர் வாக்கிற்கு இணங்க வாழ்ந்து காட்டியவர் விஸ்வநாதன் சாந்தா எனும் வி.சாந்தா அவர்கள்.

இவர் 1927 ஆம் ஆண்டு மார்ச் 11– ஆம் நாள் சென்னை மயிலாப்பூரில் பிறந்தார். தந்தையார் விஸ்வநாதன், தாயார் பாலா பார்வதி அம்மாள். மயிலை பி.எஸ். சிவகாமி பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் பள்ளிப் படிப்பை நிறைவு செய்தார். பின்னர் சென்னை மருத்துவக் கல்லூரியில் பயின்று 1949–இல் மருத்துவர் பட்டம் பெற்றார். 1955 இல் மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவத்தில் எம்.டி. பட்டம் பெற்றார். அதே ஆண்டில் அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் பணியில் சேர்ந்தார். நாட்டின் முதல் பெண் மருத்துவரான முத்துலட்சுமி ரெட்டி அவர்களின் முயற்சியில் தொடங்கப்பட்டது தான் அடையாறு மருத்துவக் கழகம். மருத்துவர் சாந்தா தம் பணியில் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் காட்டினார். அன்னாரின் திறமைக்கு ஏற்ப பல்வேறு பொறுப்புகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து அம்மருத்துவமனையின் இயக்குநர் பதவியை எட்டினார்.1980 முதல் 1997 வரை இயக்குநர் பதவியில் நற்பணி புரிந்தார். 65 ஆண்டுகள் அடையாறு மருத்துவமனையில் அவர் பணியாற்றினார் என்பது ஓர் அரிய சாதனையே. அடையாறு மருத்துவமனையை உலகத்தரம் வாய்ந்த புற்றுநோய் சிகிச்சை மையமாக மாற்றியதில் அம்மையாரின் பங்கு அளப்பரியது.

மருத்துவர் சாந்தா அவர்கள் புற்று நோயாளிகளுக்குத் தரமான சிகிச்சையும் மலிவான மருந்துகளும் வழங்கும் அணுகுமுறையை மேற்கொண்டவர். இவ்வணுகுமுறை புற்று நோயாளிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாகவே இருந்தது. பலரது பாராட்டுகளைப் பெற்றார். தம் மருத்துவப் பணிகளை வெறும் சிகிச்சையோடு நிறுத்திக் கொள்ளாமல், புற்று நோய் குறித்தும், அதற்கான தடுப்பு மருந்துகள் குறித்தும் தொடர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டார். கண்டறிந்தவற்றைக் கட்டுரைகளாக்கினார். சுமார் நூறு ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். அவற்றுள் பலவும் சர்வதேச மருத்துவ இதழ்களில் வெளிவந்து பாராட்டுகளைப் பெற்றன. உலகச் சுகாதார அமைப்பின் ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் செயல்பட்டார். இது அன்னாரின் திறமைக்குக் கிடைத்த அங்கீகாரம் என்றே சொல்லவேண்டும்.

புற்றுநோய் குறித்த சிந்தனையாகவே வாழ்ந்த அம்மையார் திருமணம் செய்துகொள்ளவில்லை. மருத்துவமனையைத் தம் வீடாக மாற்றிக் கொண்டார். புற்றுநோய் சிசிச்சைக்காகவே தம் வாழ்வை அர்ப்பணித்தவர் அவர்.

இவருக்குக் கிடைத்த விருதுகளும் பரிசுகளும் பல: 1986 இல் பத்மஸ்ரீ விருது பெற்றார். 2006 இல் பத்மபூஷன். 2016 இல் உயரிய குடியியல் விருதான 'பத்மவிபூஷண்' விருது. 2005 இல் இவரது சமூகசேவைக்காக 'மக்சேசே' விருது வழங்கிச் சிறப்பித்தனர். இது அம்மையாரின் வெற்றி மகுடத்தில் இன்னொரு வைரக்கல்லாக ஒளிவிட்டது. மேலும் தமிழக அரசின் ஔவையார் விருது, அன்னை தெரெசா விருது முதலான பெருமைக்குரிய விருதுகளும் இவரை வந்தடைந்தன.

பெண்களுக்குப் பல்வேறு கட்டுப்பாடுகளும் தடைகளும் நிலைபெற்றிருந்த ஒரு காலகட்டத்தில், அடுக்களைக்குள் அடங்கிவிடாமல் அரங்கத்திற்கு வந்து ஆன்றோர் போற்றும் அதிசயப் பெண்மணியாக வாழ்ந்த சாந்தா அம்மையார் புதுமைப் பெண்களின் முன்னோடிகளில் ஒருவர் என்பதில் ஐயமில்லை. மருத்துவத்துறையிலும், குறிப்பாக புற்றுநோய் சிகிச்சையிலும், சமூகப் பணிகளிலும் ஒரு மாமணியாக விளங்கிய அம்மையார் 2021 ஜனவரி 19–ஆம் நாள் தமது 93 ஆவது வயதில் உலக வாழ்க்கையை நீத்தார். அடையாற்றில் இன்னொரு ஆலமரம் சாய்ந்தது!

– குடும்பமலர் இதழ் 2021 மார்ச்.

**ஆசிரியர் குறிப்பு :** 'அடையாற்றில் இன்னொரு ஆலமரம்' என்னும் தலைப்பிலான வி. சாந்தா அம்மையாரின் வாழ்க்கைக் குறிப்பு 2021–ஆம் ஆண்டு மார்ச் மாதக் குடும்பமலரில் பிரசுரமானதாகும்.

### செயல்பாடுகள்

- மருத்துவத் துறையில் சிறப்புப் பெற்ற மருத்துவர் ஒருவரை நேர்காணல் நடத்துவதற்கான வினாநிரல் தயாரியுங்கள்.
- மருத்துவத்துறையில் மனிதநேயப் பண்போடு வாழ்ந்து காட்டிய டாக்டர் வி. சாந்தாவின் வாழ்க்கை வரலாற்றைத் தன்விவரப் பட்டியலாக மாற்றி எழுதுங்கள்.
- "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்னும் பழமொழியை விளக்கிக் குறிப்பு எழுதுங்கள்.

## விளாத்திகுளம் அன்புராஜ்



தமிழகத்தில் முதன் முறையாக விளாத்திகுளம் அரசு மருத்துவமனையில் திருநங்கை ஒருவர் செவிலியராகப் பணியைத் தொடங்கி உள்ளார். தூத்துக்குடி மாவட்டம் சாயர்புரம் அருகே உள்ள சேர்வைகாரன் மடம் கிராமத்தைச் சேர்ந்தவர் ரத்தினப்பாண்டி. மாற்றுத் திறனாளியான இவரது மனைவி தேன்மொழி. மகன் அன்புராஜ். அன்புராஜ் தனது 13–வது வயதில் தான் திருநங்கையாக மாறியதை உணர்ந்தார்.

இதைத்தொடர்ந்து தனது மகன் திருநங்கையாக மாறிவிட்டார் என்பதை உணர்ந்த அவரது தாய் தேன்மொழி அவரை வெறுத்து ஒதுக்காமல் அன்புடன் அரவணைத்துச் சென்றார். இதைத்தொடர்ந்து அன்புராஜ் தனது பெயரை அன்பு ரூபி என மாற்றிக்கொண்டார் படிப்பில் நன்கு கவனம் செலுத்திய அன்பு ரூபி பிளஸ்–டூ முடித்தப் பின் செவிலியர் கல்வி படிக்க முடிவு செய்தார்.

அரசுக் கலந்தாய்வில் பங்கேற்று பெற்றோர் ஆதரவுடன் நெல்லை மாவட்டத்தில் உள்ள செவிலியர் கல்லூரியில் சேர்ந்தார். அவர் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது அவரது தந்தை ரத்தினப் பாண்டி மரணமடைந்தார். எனினும் அவரது தாய் தேன்மொழியின் ஊக்கத்தால் அன்பு ரூபி செவிலியர் படிப்பை நிறைவு செய்தார்.

இதைத் தொடர்ந்து தமிழ்நாடு மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் சார்பில் நடைபெற்ற செவிலியர் பணிக்கான தேர்வில் அன்பு ரூபி தேர்ச்சி பெற்றார். பின்னர் சென்னையில் நடைபெற்ற விழாவில் செவிலியர் பணிக்கான நியமன ஆணையை முதலமைச்சர் வழங்கினார்.

இதன் மூலம் தமிழகத்தில் அரசு செவிலியராகப் பணி நியமனம் பெற்றுள்ள முதல் திருநங்கை என்ற பெருமையை அன்பு ரூபி பெற்றார். அவரது வேண்டுகோளுக்கு இணங்க சொந்த மாவட்டமான தூத்துக்குடியிலேயே பணி வழங்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து அவர் விளாத்திகுளம் அரசு மருத்துவமனையில் பணியில் சேர்ந்தார். தமிழகத்தில் முதல் திருநங்கை செவிலியரான அவரை விளாத்திகுளம் அரசு மருத்துவமனை நிலைய மருத்துவர் மருத்துவமனை ஊழியர்கள் வரவேற்று வாழ்த்துகள் தெரிவித்தனர்.

"எனது தாய் விவசாயக் கூலி வேலை செய்து என்னைப் படிக்க வைத்தார். நான் திருநங்கையாக உணர்ந்த போது கிராம மக்களும், உறவினர்களும் என்னை வெறுத்த போதும் பெற்றோர் என்னை அரவணைத்தனர்.

பள்ளியில் படிக்கும்போது பல தடைகளைச் சந்தித்தேன். அவற்றைத் தாண்டி இப்போது தமிழகத்தில் முதல் திருநங்கை செவிலியர் என்ற பெருமையைப் பெற்றுள்ளேன்.

எனது சொந்த மாவட்டமான தூத்துக்குடியில் உள்ள விளாத்திகுளம் அரசு மருத்துவமனையில் பணியாணை பெற்றது மகிழ்ச்சியாக உள்ளது. என்னால் முடிந்த வரை விளாத்திகுளம் பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு நல்ல முறையில் செவிலியர் பணியின் மூலம் சேவை செய்வேன்" என அறிவித்துள்ளார் அன்புரூபி.

– இணையச் செய்தி

விளாத்திகுளம் அன்புராஜ் என்ற இப்பகுதி இணையத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது.

## செயல்பாடுகள்

- சாதனை புரிந்த மூன்றாம் பாலினத்தவர் பற்றிய வாழ்க்கைச் செய்திகள், நேர்காணல்கள் இவற்றைச் சேகரித்துப் படத்தொகுப்பு தயாரித்து வெளியிடுங்கள்.
- மூன்றாம் பாலினத்தவர்களுக்கு மதிப்பளித்து, சமூகத்திலும் வேலைவாய்ப்புகளிலும் அவர்களுக்கு உரிய வாய்ப்பை வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் விதமாகப் பத்திரிகைக்குத் தலையங்கம் எழுதவும்.
- மூன்றாம் பாலினத்தவரது வாழ்வில் ஏற்படும் சிக்கல்களையும் அதற்கான தீர்வுகளையும் கலந்துரையாடிக் குறிப்பு தயாரியுங்கள்.



# நிழல்கள்



## இசைக்குயில் எஸ். ஜானகி

ஒரு திரைப்படத்தின் முக்கியமான கூறுகளில் ஒன்று அதில் இடம்பெறும் பாடல்களுமாகும். ஆரம்பகாலத் திரைப்படங்களில் முப்பது நாற்பது பாடல்கள் இடம்பெற்றிருந்தன என்றால் இன்றைய தலைமுறை ஆச்சரியப்படலாம். பாடல்களால் வெற்றிபெற்ற திரைப்படங்கள் பலவுண்டு. அக்காலத்தில் படங்களில் நடிப்பவர்களே அவர்களின் சொந்தக் குரலில் பாடவும் செய்தனர். இசை ஞானமும் நல்ல குரல் வளமும் கொண்டவர்களே நடிகர் நடிகைகளாகத் தேர்வு செய்யப்பட்டனர். பிற்காலத்தில் வேறு பாடகர்களைக் கொண்டு பாடிப் பதிவு செய்யும் வழக்கம் ஏற்பட்டது. அவர்கள் பின்னணிப் பாடகர்கள் என்று அறியப்பட்டனர். இந்நிலையில் சென்ற அறுபது ஆண்டுகளுக்கு மேலாகப் பின்னணிப் பாடகராக இருந்து, சாதனைகள் படைத்து, இன்றும் தம் இனிய குரலால் கேட்போரை மகிழச் செய்து கொண்டிருப்பவர் இசைக்குயில் திருமதி எஸ். ஜானகி அவர்கள்.

இவர் ஆந்திர மாநிலம் குண்டூர் மாவட்டத்தில் பள்ளபட்லா என்ற ஊரில் 1938 ஆம் ஆண்டு ஏப்ரல் 23 ஆம் நாள் திரு. ராமமூர்த்தி, திருமதி சத்யவதி தம்பதியினருக்கு மகளாகப் பிறந்தார். கருவிலேயே திருவுற்றவர் என்னும் கூற்றிற்கிணங்க, குழந்தைப் பருவத்திலேயே இயல்பான இசை ஞானம் பெற்றிருந்தார். மூன்று வயது தொடங்கி பத்து வயதுவரை முறைப்படி இசை கற்றார். நாதஸ்வர மேதை திரு. பைடிசாமி என்பவர் குருவாக இருந்தார். கர்நாடக இசையில் நல்ல பயிற்சி பெற்றார். முதல்

மேடை நிகழ்ச்சியில் பாடியபோது ஜானகிக்கு ஒன்பது வயதுதான் ஆகியிருந்தது. பின்னர் அவரது குடும்பம் சென்னையில் குடியேறியது.

1957–இல் தமது இருபதாவது வயதில் ராம் பிரசாத் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். அவர் தன் மனைவியின் இசை ஆர்வத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்ததுடன் உறுதுணையாகவும் இருந்தார். சென்னைக்கு வந்தபின் ஏ.வி.எம் ஸ்டுடியோவில் ஒப்பந்த அடிப்படையில் சேர்ந்து திரைப்படத் துறையில் கால்வைத்தார். அது அழுத்தமான ஒரு கால்வைப்பாகவே இருந்தது. 1957 ஆம் ஆண்டு வெளிவந்த, 'விதியின் விளையாட்டு' என்ற திரைப்படத்தில் 'பெண் என் ஆசை பாழானது ஏனோ' என்ற பாடலைப் பாடினார் . ஆனால் அந்தக் கானக்குயிலின் ஆசை பாழாகவில்லை என்பதுதான் உண்மை. தொடர்ந்து வாய்ப்புகள் பெருகின. பாடத் தொடங்கிய இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, துளு எனப் பல்வேறு மொழிகளில் பத்தாயிரத்திற்கும் அதிகமான பாடல்கள்! சராசரியாக ஆண்டொன்றுக்கு நானூறு பாடல்கள், ஆச்சரியம்! அதிசயம்! என்றெல்லாம் சொல்லாமல் வேறென்ன சொல்வது!

இந்திய மொழிகளில் மட்டுமன்றி ஆங்கிலம், ஜாப்பனீஸ், ஜெர்மனி, முதலான மேலைநாட்டு மொழிகளிலும் அவர் பாடினார். பதினேழு மொழிகளில் பாடிய ஒரே பாடகி என்ற பெருமை பெற்றார். இதுவரையிலும் நாற்பதாயிரத்திற்கும் அதிகமான பாடல்கள் பாடியுள்ளார். இவை தவிர ஏராளமான தனிப்பாடல்களும் அவரது இன்குரலில் வெளிவந்துள்ளன.

1962 ஆம் ஆண்டு திரைக்கு வந்த 'கொஞ்சும் சலங்கை' என்ற படத்திற்காகப் பாடிய 'சிங்கார வேலனே தேவா' என்ற பாடல் இவரது திரையிசை வாழ்வில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. முதன் முதலாகத் திரைப்படத் துறைக்கு அறிமுகமான இசைஞானி இளையராஜாவின் இசையில் 1976 இல் வெளிவந்த 'அன்னக்கிளி' படத்திற்காக ஜானகி அம்மா பாடிய 'மச்சானைப் பாத்தீங்களா' என்ற பாடல் தமிழகமெங்கும் தூள் கிளப்பியது. எத்தனைமுறை கேட்டாலும் 'இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என்று சொல்லும்படியாக இவர் பாடிய பாடல்கள் எண்ணிலடங்கா! சிங்கார வேலனே தேவா (1962) பூசைக்கு வந்த மலரேவா (1962), ராதைக் கேற்ற கண்ணனும் (1962), பொதிகை மலை உச்சியிலே (1965), மச்சானைப் பாத்தீங்களா (1976), செந்தூர பூவே (1977), ஆயிரம் தாமரை (1981), மணி ஓசை கேட்டு (1982), ஒரு கிளி உருகுது (1983), நிலவு தூங்கும் நேரம் (1985) அழகு மலர் ஆட (1987), மாங்குயிலே பூங்குயிலே (1989) ஒரு நாளும் உனை மறவாத (1993), மார்கழி



திங்களல்லவா (1999), அம்மா அம்மா (2014) முதலான தமிழ்ப் பாடல்கள் அவற்றுள் ஒரு சில மட்டுமே.

முதலில் கண்ணதாசன், விஸ்வநாதன்– ராமமூர்த்தி, ஜானகி கூட்டணியில் பிறந்த கானங்கள் வரலாறு படைத்தன என்றால், பிற்காலத்தில் இளையராஜா, எஸ்.பி. பாலசுப்பிரமணியம், எஸ். ஜானகி கூட்டணியில் பிறந்த பாடல்கள் சாதனைகள் படைத்தன.

ஜானகி அம்மாவின் குரலுக்கு மயங்காதவர்கள் இல்லை. இவர் பெற்ற விருதுகள் பல. நான்கு முறை சிறந்த பின்னணிப் பாடகிக்கான தேசிய திரைப்பட விருதைப் பெற்றார். 33 முறை வெவ்வேறு மாநில விருதுகள் இவரைத் தேடிவந்தன. பதிநான்கு முறை கேரள மாநில விருதைப் பெற்றார் என்பதும் ஆச்சரியமே. 1986இல் தமிழ்நாடு அரசு கலைமாமணி விருது வழங்கிச் சிறப்பித்தது. 1992 இல் இலங்கை சென்றபோது அங்கே 'ஞான கான சரஸ்வதி' என்ற விருதுக்கு ஆளானார். கௌரவ 'டாக்டர் பட்டம்' பெற்ற பெருமையும் ஜானகி அம்மாவுக்கு உண்டு. 1997 இல் இவரது கணவர் காலஞ்சென்ற பின் ஒரே மகன் முரளிகிருஷ்ணனுடன் சென்னையில் வாழ்ந்து வருகிறார். ஒரு பின்னணிப் பாடகியாக சாதனைகள் படைத்தவர் ஜானகி அம்மா.

**ஆசிரியர் குறிப்பு :** இப்பாடப்பகுதி இணைய தளத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

### செயல்பாடுகள்

- தமிழ்த் திரைப்படப் பாடகர்களாகத் தடம் பதித்த பெண்களின் பெயர்களைப் பட்டியலிடுங்கள்.
- உங்கள் பள்ளிக் கலை விழாவில் சிறந்த பின்னணிப் பாடகி ஜானகி வருகை தர உள்ளார். அவரை வரவேற்கும் விதமாக வரவேற்புரை தயார் செய்யுங்கள்.
- திரைத்துறையில் பல நிலைகளில் சாதனைகள் புரிந்துவரும் பெண்கள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுங்கள்.

## காலமாற்றம்

அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெ தற்கோ
அடிமையாக இருப்பதற்கே தகுதி என்று
வடுக்களினை மனத்தினிலே பதிய வைத்து
வாழ்க்கையினை முடக்கிவைத்த காலம் தன்னில்

அடுத்தடுத்துப் பிள்ளைகளைப் பெற்ற ளித்தே
அடுத்தவீட்டை அறியாமல் வாழ்ந்தி ருந்தார்
குடும்பத்தின் குலவிளக்காய் குடத்தின் உள்ளே
குனிந்தபடி இருந்திட்டாள் திறன டக்கி!



பாய்ந்துவரும் வெள்ளம்போல் காலம் மாறப்
பாரதியும் பாரதியின் தாசன் போன்றோர்
வேய்ந்துவைத்தத் தடைகளினைப் புரட்சிப் பாட்டால்
வேரறுத்தே அடிமையச்சம் விரட்டி விட்டார்!

காய்ந்தநிலம் நீரீர்த்தல் போல பெண்தான்
கல்வியினைக் கற்றிட்டாள் அறிவைப் பெற்றாள்
ஏய்த்திருந்த ஆண்கள்தம் ஆதிக் கத்தை
எட்டியுதை தந்தபடி உயர்ந்து நின்றாள்!

கல்வியினைப் பெற்றதனால் தன்னம் பிக்கை
காலூன்ற துணிச்சலுடன் வெளியே வந்தாள்
பல்திறன்கள் வெளிகாட்டி விண்ப றந்தாள்
பல்துறையில் சாதனைகள் படைத்து வென்றாள்!

நல்லபடி குடும்பத்தை மட்டு மன்றி
நாட்டினையும் நிர்வகித்துப் புகழைப் பெற்றாள்
இல்லையவள் இன்றியொரு செயலும் என்றே
இயம்புகின்ற படியின்று திகழு கின்றாள்!

– கருமலைத் தமிழாழன்

**ஆசிரியர் குறிப்பு :** இவரது இயற்பெயர் கி. நரேந்திரன் பிறந்த ஊர் கிருஷ்ணகிரி. இவர் தலைமை ஆசிரியராகப் பணி ஓய்வு பெற்றவர். பல்வேறு தமிழ்க் கவிதைத் தொகுதிகளையும் வெளியிட்டுள்ளார். தமிழில் மிக்க ஆர்வம் உடையவர். மரபுக் கவிதைகள் பாடுவிதில் வல்லவர்.

### செயல்பாடுகள்

- பெண் விடுதலைக்குக் குரல் கொடுத்த கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்து வகுப்பறையில் வெளியிடுங்கள்.

- இப்பாடலை நயம் பாராட்டி எழுதுங்கள்.
- உங்கள் பள்ளி நூலகத்திலிருந்து பெண் எழுத்தாளர்களின் நூல்களைத் திரட்டி, அந்நூலிற்கான நூலடைவு தயாரியுங்கள்.
- காலமாற்றம் என்ற கவிதையின் மையக்கருத்தைக் கலந்துரையாடி விமர்சனம் செய்யுங்கள்.
- சாதனை படைத்த பெண்களின் படங்களைத் திரட்டி, குறிப்பெழுதி வெளியிடுங்கள்.

## இயக்குநர் மீரா



மீரா நாயர் நடிப்புத்துறையில் பிரகாசிக்க வேண்டும் என்று விரும்பினார். ஆனால், அதைவிட வலிமையாக தனது திறமையை திரைப்படம் இயக்குவதில் காட்டிவருகிறார். இந்தியாவில் பிறந்து, வளர்ந்து தற்போது அமெரிக்காவில் குடிபெயர்ந்துள்ளார். 'இந்தியத்தனம்' நிறைந்த படங்கள் இவருடையவை என்று சொல்லப்பட்டாலும் அதையும் தாண்டிய சர்வதேச பார்வையைத் தான் முன்வைப்பதாகச் சொல்கிறார்.

ஒடிசா தலைநகர் புவனேஸ்வர் அருகில் ஒரு கிராமத்தில் பிறந்தார். மீராவின் கற்பனைகளுக்கும் அவரது செய்கைகளுக்கும் இடைவெளி இருந்ததில்லை.

அதனாலேயே திரைப்படம் இயக்கும் முயற்சிக்குப் போனார். ஆனால் நினைத்தவுடன் திரைப்படம் எடுத்துவிட முடியவில்லை. தயாரிப்பாளர்களுக்குக் காத்திருக்க வேண்டியிருந்தது. வந்த தயாரிப்பாளர்களோ, 'உங்களுடைய கதையை வியாபாரமாக்க முடியாது' என்று ஒதுங்கிவிட்டனர். காத்திருந்தார் மீரா. பிறகு நண்பர் ஒருவருடன் சேர்ந்து தானே சொந்தமாகத் தயாரித்தார்.

மும்பையின் தெருவோரக் குழந்தைகள் பற்றிய படமான 'சலாம் பாம்பே' வெளிவந்தது. படத்தில் நடித்த குழந்தைகள், பெண்கள் எல்லோருமே

தொழில்முறை நடிகர்கள் அல்ல. மும்பை தெருவோரக் குழந்தைகளையும் நடிக்க வைத்தார். மிகக் குறைவான பணத்தில் தயாரிக்கப்பட்டு அதிக லாபத்தை ஈட்டித்தந்த படமாக அது அமைந்தது. இந்தியாவைச் சேர்ந்த ஒரு பெண் திரைப்பட இயக்குநராகி இருக்கிறார் என்பதே ஒரு சாதனைச் செய்தியாக இருந்தபோது யாருமே தொடத் தயங்குகிற ஒரு களத்தை முன்வைத்து ஒரு படத்தை உருவாக்கியிருக்கிறார். இந்தப் படம் இருபத்தி மூன்று சர்வதேச விருதுகளைப் பெற்றது. கேன்ஸ் விழாவில் பார்வையாளர்கள் விருதை தட்டிக்கொண்டு வந்தது. அதோடு ஆஸ்கருக்கும் பரிந்துரைக்கப்பட்டது.

இவரது முதல் ஆவணப்படம் 'ஜமா மஸ்ஜித் ஸ்ட்ரீட் ஜேர்னல்' டெல்லியில் வாழும் இஸ்லாமியர்களைப் பற்றியது. தொடர்ந்து அவர் எடுத்த ஆவணப்படம் 'ஸோஃபர் ஃபிரம் இன்டியா' டெல்லி சுரங்கப்பாதையில் செய்தித்தாள் விற்கும் ஒருவரின் அன்றாட வாழ்க்கையைப் பதிவு செய்தது. அதன் மூலமாக நவீனமயமான டெல்லி உருவாகும்போது அதன் கலாச்சார வேர்கள் என்று சொல்லப்படுகிற சில அம்சங்கள் எப்படிச் சீர்குலைகின்றன என்பதையும் ஆவணப்படம் காட்டியது. டெல்லி நகரின் நெரிசலினூடே கேமராவை வைத்து எடுக்கப்பட்ட அந்த ஆவணப்படம், அமெரிக்காவின் திரைப்பட விழாக்களில் பங்குபெற்று வரவேற்பைப் பெற்றது. ஆனாலும், மீராவின் நலம்விரும்பிகள் இதெல்லாம் ஒரு வேலையா .. உலகத்துல சொல்றதுக்கு விஷயமா இல்ல' என்று அவரைப் பின்னுக்கு இழுத்தனர்.

மீரா உகாண்டாவில் தங்கியிருந்தபோது கொஞ்சமாக தன்னுடைய சுய வாழ்க்கையையும் அங்கிருந்து புலம்பெயர்ந்த மக்களின் வாழ்வையும் இணைத்து 'மிஸிஸிப்பி மசாலா' படத்தின் திரைக்கதையை சூனி என்பவருடன் அமைத்திருந்தார். இந்த இருவரும் சேர்ந்துதான் 'சலாம் பாம்பே' படத்துக்கும் திரைக்கதை அமைத்திருந்தனர். முதல் படத்தில் தொழில்முறை நடிகர்களைப் பயன்படுத்தியிராத மீரா, இந்த முறை பிரபலமான நடிகர்களை நடிக்க வைத்தார். டென்சல் வாஷிங்டன், சரிதா சௌத்ரி நடித்திருந்த இந்தப் படமும் மீராவின் முத்திரைகளோடு வெளிவந்திருந்தது.

இருபத்தைந்து ஆண்டுக்கும் மேலாக இயக்குநராகப் பணிசெய்து தற்போது, அறுபது வயதை நெருங்கும் மீரா, தனது திரைத்துறை வாழ்க்கைபற்றி சுருக்கமாக இப்படிச் சொல்கிறார். 'முதலையின் தோலும் கவிஞர்களின் மனமும் இருந்தால் மட்டுமே இங்கு ஒரு பெண் இயக்குநராக வேலை செய்ய முடியும்.'

– ஜா. தீபா

**ஆசிரியர் குறிப்பு :** இவர் சிறுகதையாசிரியர், ஆவணப்பட இயக்குநர், மேடைப் பேச்சாளர் ஆவர். நீலம் பூக்கும் திருமடம் மறைமுகம் ஆகிய சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார்.

## செயல்பாடுகள்

- மீராவின் திரைப்படங்களின் பெயர்களைத் திரட்டி வரிசைப்படுத்துங்கள்.
- திரையுலகில் சாதனை படைத்த பெண்களின் பெயர்களைத் திரட்டி எவரேனும் ஒருவரின் வாழ்க்கைக்குறிப்பு தயார் செய்யுங்கள்.
- திரைத்துறையில் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களைக் கலந்துரையாடி சிறுகுறிப்பு தயார் செய்யுங்கள்.
- "ஆணென்ன பெண்ணென்ன எல்லாம் ஓரினம்தான்" என்ற திரையிசை பாடலைப்போன்று ஆண், பெண், மூன்றாம் பாலினம் ஆகிய அனைவரும் சமம் என்னும் கருத்துடைய கவிதை ஒன்றை எழுதி வெளியிடுங்கள்.
- உங்கள் பள்ளித் திரைப்பட மன்றம் சார்பாக தேசிய விருதுபெற்றத் திரைப்படம் ஒன்றினைத் திரையிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வைப் பொது மக்களுக்குத் தெரிவிக்கும் விதமாக அறிவிப்பு ஒன்றினைத் தயாரியுங்கள்.
- திரைத்துறையில் உங்களைக் கவர்ந்த துறையை அடையாளம் கண்டு அத்துறையில் சிறந்து விளங்குபவர்களின் தகவல்களைத் திரட்டிக் குறிப்பேட்டில் எழுதுங்கள்.



அலகு 3

# கவசம்



பல நிலைகளில் ஏற்படும் விபத்துகளை விழிப்புணர்வுடன் தவிர்க்கலாம். சாலை, இணையதளம் மற்றும் நீர் நிலைகளிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்வது அவசியமாகும். வகுக்கப்பட்ட விதிமுறைகளைப் பின்பற்றி, தகுந்த திறன்களைப் பெற்று, பாதுகாப்பான சமூகத்தை உருவாக்க முனைதல் வேண்டும்.

# சாகசம்



## நில்! கவனி! செல்!

அது உன் வாகனம் தானே
ஏன் எமனின் வாகனம் போல் இயக்குகிறாய்?
வரிசையில் நிற்கும் வண்டிகள் தாண்டி
இண்டு இடுக்குகளில் முண்டியடித்து
சாகசப் பயணம் செய்யத் துடிக்கிறாய்.
அது சாகப் பயணமாய் ஆவது நன்றா?
எதிர்வரும் வண்டிகள் குறித்துக் கவலையில்லை
திரும்பும் திசை குறித்துத் தெளிவில்லை
விதிகளெல்லாம் மீறுவதற்கென்றே
விளங்கிக் கொள்கிறாய்
தெரிந்து கொள்
விபத்துக்கு ஒரு விண்ணப்பம் போடுகிறாய்
குடித்துவிட்டு வண்டி ஓட்டி
இடித்துவிட்டு விழிக்கிறாய்
செல் பேசியபடி செல்கிறாய்
இன்கம்மிங் இலவசமாய் இருக்கலாம்
அவுட்கோயிங்கிற்கு அவசரம் ஏன்?
சாலைப் பயணம் முக்கியம் தான்



அதை விட முக்கியம் நாளைய பயணம்
எதிலும் அவசரம் தவிர்
வாழ்க்கை ஒரு தேநீர் கோப்பை
ஒவ்வொரு சொட்டாய் உறிஞ்சி ரசி
ஒரு கதை தெரியுமா?

கண்ணதாசன் ஒரு முறை
மலேசியா போனார்
இலக்கியக் கூட்டத்திற்கு நேரமாகிவிட்டதென
இயக்கிய டிரைவர்
விரைந்து பறந்தார்
சிரித்தபடியே கவிஞர் சொன்னார்
இந்தக் கூட்டத்திற்கு
பத்து நிமிடம் தாமதமாய் போகலாம்
ஆனால் பத்து வருடம் முன்பே போய் விடக்கூடாது
இனியேனும் விழி
சாலை விதிகள் மதி
வண்டிப் பயணம் மட்டுமல்ல
வாழ்க்கைப் பயணமும் சுகமாகட்டும்!

– ஜீவி

**ஆசிரியர் குறிப்பு :** இவரது இயற்பெயர் ஜி. வெங்கட்ராமன். தமிழகத்தில் அறந்தாங்கலில் பிறந்தார். மிகச் சிறந்த கவிஞர், பட்டிமன்றப் பேச்சாளர். இரு வேறு முகங்கள், அஞ்சறைப்பெட்டி, நைலான் ஊஞ்சல், அசுர சாதகம், அடித்துப் பெய்த மழை போன்றவை உட்பட பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். தமிழக அரசின் தமிழ்ச் செம்மல் விருது உட்பட பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- 'நில் கவனி செல்' கவிதையில் பயின்று வரும் ஆங்கிலச் சொற்களைத் தொகுத்து அதற்கு இணையான தமிழ்ச்சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- விபத்துகள் ஏற்படாமல் பாதுகாப்பாகச் சாலையில் பயணம் செய்ய வேண்டும். அதற்காக அரசாங்கம் விதித்துள்ள சாலை விதிகள் குறித்துக் கலந்துரையாடிக் குறிப்பெழுதுங்கள்.
- சாலை விதி முறைகளை மீறுவதன் விளைவாக விபத்துகள் அதிகமாக ஏற்படுகின்றன. இந்நிலையைப் பொதுமக்களுக்கு எடுத்துரைத்து விழிப்புணர்வூட்டும் விதம் துண்டுப்பிரசுரம் தயார் செய்யுங்கள்.

## ஒரு பிரயாண அனுபவம்



திருநெல்வேலி ஜங்ஷனிலிருந்து புறப்படும்போதே பஸ் கண்டக்டருக்கும் டிரைவருக்கும் பலமான தகராறு! வண்டிக்குள் பெண்களும் இருக்கிறார்களே என்றுகூட கூச்சப்படாமல் இருவரும் ஒருவருக்கொருவர் வாயில் வந்தபடி பேசிக் கொண்டார்கள்.

இரண்டு பேரையுமே விறகுக்கடைத் தராசில் வைத்து நிறுத்துப் பார்த்தால் அனேகமாக ஒரே எடையாகத்தான் இருப்பார்கள். அவர்களுக்கு ஒருவரைப் பார்த்து ஒருவருக்குப் பயம்! ஆகவே, கை கலப்பதில் இறங்காமல் வசவு என்ற பல்லவியிலேயே சஞ்சரித்துக் கொண்டிருந்தார்கள்.

எங்களுக்கு ஒரு வகையில் சந்தோஷமாய் இருந்தது. தினமும் நம்மை வைகிறவர்கள் இன்று தங்களுக்குள்ளேயே வைது கொள்கிறார்களல்லவா!

அடிக்கிற காற்று வெக்கையாக இருந்தது. மூக்கிலுள்ள ஈரம் வண்டு மூச்சு விடுவதற்கே சங்கடமாய் இருந்தது. பஸ்ஸின் பிடரியைப் பிடித்துத் தள்ளிக்கொண்டு போவதுபோல காற்று வடகிழக்கை நோக்கி உந்தி உந்தித் தள்ளியது.

மேல் துண்டு போட்டுக்கொண்டிருந்தவர்கள் பாடு யோகம். காதுக்குள் காற்றுப் புகுந்து குத்தி, வேதனை ஏற்படுத்த இடம் கொடுக்காமல் அவர்கள் காதைச் சேர்த்து இறுக்கித் 'தலைப்பா' கட்டிக் கொண்டார்கள். தலையைத் தண்ணீர் விட்டு சிரமப்பட்டு வெகுநேரம் வகிடு எடுத்துச் சீவி, பிரமாதப்படுத்தியிருந்த 'அழகர் சுவாமிகளின் சிகைகள்' காற்றில் அடிபட்டுப் பறந்த அலங்கோலத்தைப் பார்க்க வேடிக்கையாக இருந்தது.

ஒருத்தருக்கு உச்சந்தலை பூராவும் சரியான பொட்டல்! காதோரங்களிலும் பிடரியிலும் மட்டுமேமுடி, ஜோராகக் 'கிராப்பு'வெட்டி, வலது பக்கக் காதோரமுள்ள முடியை மட்டிலும் ஒரு சாண் நீளத்துக்கு வளர்த்து, அதை உச்சிப் பொட்டலின் மேல் படுக்க வைத்து, பொட்டலே தெரியாமல் திருத்தமாகச் சீவி விட்டிருந்தார். பாவம் அவருக்கு நம்முடைய 'ஐயோ!'.

பக்கவாட்டிலிருந்த சீட்டில் கனமான சாம்பல் பூசணிப் பழ நிறத்தில் ஒரு ஆள், கண்ணை மூடிக் கொண்டு புருவத்தைச் சுழித்துக் கொண்டு தலையை லேசாக ஆட்டி, அந்தக் காற்றிரைச்சலையும் பஸ் இரைச்சலையும் ஆதார ஸ்ருதியாக வைத்துக்கொண்டு வெளியே பகிரங்கமாக சத்தம்

கேட்காமல் ஏதோ ஒரு ராக சஞ்சாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். மேல் அங்க வஸ்திரத்தால் தன்னுடைய சட்டையில்லாத வெறும் உடம்பை மூடிக் கொள்ளாமல், இந்தக் காற்றுக்கெல்லாம் அசருகிறவனா நான் என்பது போல் 'ஜம்'மென்று கைகளைக் கட்டிக் கொண்டிருந்தார். அவர் பாடு ரொம்பத் தேவலை. தலையில் மருந்துக்குக்கூட ஒரு முடி இல்லை.

போய்க் கொண்டே இருந்த பஸ் திடீரென்று ஒரு சடன் பிரேக் போட்டு நின்றது. டிரைவர் சத்தம் போட்டுக்கொண்டே கண்ணைப் பொத்திக்கொண்டார். "எவண்டா பொடி போட்டது..?" என்று கோபத்துடன் கேட்டவர், கடைசியாக ஒரு அசிங்கமான வசவையும் சேர்த்து அந்த வாக்கியத்தை முடித்தார்.

பொடி போட்டது யார்? சாமி சத்தியமாக யாருமே உண்மையிலேயே பொடி போடவில்லை. அப்படியானால், டிரைவர் கண்ணில் எப்படி விழுந்தது பொடி. டிரைவர் கறாரான ஆள் என்று இப்பொழுது தெரிந்தது. பொடி போட்டது யார் என்று தெரியாமல் வண்டி ஒரு இம்மியும் நகராது என்றுசொல்லி பஸ்ஸை நிறுத்திவிட்டார்!

கண்ணில் விழுந்தது பொடியாக இருக்காது. வேறு ஏதாவதாக இருக்கும் என்று துணிச்சல் மிக்க பிரயாணி ஒருவர் சொன்னார். டிரைவர் ஒரு கண்ணைக் கையால் மூடிக்கொண்டவாறே அவரை எரித்து விடுவதுபோல் பார்த்தார். அப்படிச் சொன்ன அந்தப் பிரயாணி கிருதா மீசை வைத்திருந்தார்.

இப்பொழுது 'களுக்' என்று ஒரு சிரிப்புச் சத்தம் கேட்டது. எல்லோரும் அந்தப் பக்கம் பார்த்தார்கள். அந்தப் பிரயாணி, சாம்பல் பூசணிப் பழ ஆளைச் சுட்டிக்காட்டி வயிறு குலுங்கச் சிரித்தார். அவர் வேறு யாருமில்லை; வழுக்கையை மறைத்துச் சீவி விட்டிருந்த ஆசாமிதான். அவருடைய வலது காதின் மேல் வரிசையாக சாண் நீளத்துக்கு மயிர் தோரணமாகத் தொங்கிக்கொண்டிருந்தது. எல்லோரும் சாம்பல் பூசணி ஆளைப் பார்த்தார்கள். ஒருவருக்கும் ஒன்றும் விளங்கவில்லை. அவருக்கும் புரியவில்லை! கட்டிக் கொண்டிருந்த கைகளைக் கலைத்து இடது கையினால் தன் இடுப்பில் செருகியிருந்த சிறிய சீட்டுக் கட்டு அளவுள்ள பெரிய பொடி டப்பி இருக்கிறதா என்று தடவிப் பார்த்துக்கொண்டார். அது அப்படியே இருந்தது. அது தானாகவே திறந்து அதிலிருந்து பொடி காற்றில் பறந்திருக்க முடியாது. சிலர் அவருடைய குடைமிளகாய் போன்ற மூக்கைப் பார்த்தார்கள். அதன் கீழ் இருந்த மீசையின் வெள்ளை ரோமத்திலெல்லாம் முன்பு அவர் போட்ட பொடி வடிந்து, வண்டலாய்க் காய்ந்து போயிருந்தது. அதிலிருந்து ஒரு துகள்தான் காற்றின் வேகத்தில் பறந்து டிரைவரின் கண்ணில் விழுந்திருக்கிறது! இதைத்தான் தோரணச்சிகை ஆசாமி சுட்டிக் காண்பித்துச் சிரித்தார்.

டிரைவர் மட்டுமென்ன, இதற்கு யார்தான் என்ன செய்யமுடியும்? பஸ்ஸிலுள்ள பிரயாணிகள் யாவரும் டிரைவர் உட்பட பலமாகச் சிரித்தார்கள். சாம்பல் பூசணி ஆசாமியை இடம் மாற்றி உட்கார வைத்துவிட்டு பஸ்ஸைக் கிளப்பினார் டிரைவர்.

– கி. ராஜநாரயணன்

**ஆசிரியர் குறிப்பு :** கரிசல் இலக்கியத்தின் தந்தை என்று அழைக்கப்படும் இவர் 1922 ஆம் ஆண்டு இடைசெவல் கிராமத்தில் பிறந்தார். கோபல்ல கிராமம், கோபல்ல கிராமத்து மக்கள், நாட்டுப்புறக் கதைக் களஞ்சியம் போன்றன குறிப்பிடத்தக்க படைப்புகள் ஆகும். 'கோபல்லபுரத்து மக்கள்' புதினத்திற்கு சாகித்ய அகாதமி விருது பெற்றுள்ளார். சிறந்த சிறுகதை ஆசிரியர். 2021 இல் புதுச்சேரியில் மறைந்தார்.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியின் மையக்கருத்தைக் கலந்துரையாடிக் குறிப்பெழுதுங்கள்.
- பள்ளியிலிருந்து கல்விச் சுற்றுலா செல்ல தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் ஒருங்கிணைப்பாளரான நீங்கள் இதனை மாணவர்களுக்கு தெரிவிக்கும் விதமாக சுற்றறிக்கைத் தயார் செய்யுங்கள்.
- இது போன்று நீங்கள் பயணம் செய்தபோது ஏற்பட்ட பயண அனுபவங்களைச் சிறுகதையாக எழுதுங்கள்.
- பயணத்தின் போது நாம் பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறைகளை வரிசைப் படுத்துங்கள்.

## திற

பயணிகளின் கனிவான கவனத்திற்கு... திண்டிவனம், மயிலாடுதுறை, தஞ்சாவூர் வழியாக மன்னார்குடி வரை செல்லும் மன்னை எக்ஸ்பிரஸ் ஒன்பது மணிக்கு மூன்றாவது நடை மேடைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது....

அறிவிப்பைக் கேட்டதும் நடைமேடையில் மனிதத் தலைகள் மொய்க்கத் தொடங்கின. சாவி கொடுக்கப்பட்ட பொம்மைகளைப் போல பயணிகள் அங்கும் இங்குமாக நடந்தார்கள்

டீ, காபி டீ, காபி.... டீக்காரர் பாடத்தை மனனம் செய்வதைப்போல ஒப்பிக்கிறார். இடையிடையே இட்லி, பிரியாணி கூப்பாடுகள். பயணிகள் எதையும் காதினில் வாங்கிக்கொள்ளவில்லை. ரயில் வரும் திசையை வைத்த கண் எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கூட்டத்தில் நானும் என் நண்பர்களும். அவர்கள் கண்களில் தெரிந்த சோம்பல் நித்திரையைப் பார்க்கையில் அவர்கள் இன்னும் இந்த அவசர உலகத்திற்குத் தயாராகவில்லை எனத் தெரிந்தது. கண்களைத் தேய்த்துக் கொண்டு ரயில் வரும் திசையை வேண்டா வெறுப்போடு பார்த்தார்கள்.

தூரத்தில் கண்களைப் பறிக்கும் "பளிச்" வெளிச்சம். "பா....ம்" பேரொலி. "சிக் புக், சிக் புக்"தாளம். ரயில் பயணிகளை நோக்கி வந்துகொண்டிருந்தது.

"நம்ம ஏழு பேருக்கும் சேர்த்து ஒரே இடத்தில இடம் பிடி. இல்ல, மூட்டை முடிச்சோடு கோயம்பேடுதான்" என்றான் ஒரு நண்பன்.

"நான் ஒருத்தன் மட்டும் எல்லோருக்கும் சீட் பிடிக்கிறேன். நீங்க தண்டவாளத்துல உட்கார்ந்து எஞ்சின் எப்படி ஓடுதுனு பராக் பாருங்கடா சோம்பேறி பசங்களா...! நான் ஒருத்தன் எப்படிடா இத்தனை பேருக்கும் சீட் பிடிக்க முடியும் . அவனவனுக்கு அவனவன் சீட் பிடிக்கப் பாருங்க" வாயில் வந்து விழுந்த சொற்களால் அவர்களைக் கடித்து குதறி வைத்தேன்.

"அதெல்லாம் முடியாது. நீ தான் சொன்னாய். எக்மோர்ல கூட்டமிருக்காது. ஆளுக்கொரு சீட்ல படுத்துக்கிட்டு போகலாமுனு. அதை நம்பி தான் உன் கூட இங்கே வந்தோம். நீயே எல்லோருக்கும் சேர்த்து இடம் பிடி"

அவன் இப்படிச் சொன்னதை விடவும் அவன் சொற்களில் இருந்த அலட்சியம் தான் என்னை அதிகமாகக் கோபமூட்டியது. கோபத்தை வெளிப்படுத்த இதுவா நேரம்? சினத்தை எச்சிலைப் போல் தொண்டைக்குள் இறக்கிக்கொண்டேன்.

"சரி சரி நான் எல்லோருக்கும் சேர்த்து சீட் பிடிக்கிறேன். உங்கள்ல ஒருத்தன் ஓடிப்போய் டிக்கெட் எடுத்துக்கிட்டு வாங்க". எனது பையை முதுகில் சுமந்து கொண்டு, உடலைக் குலுக்கி, கை கால்களை நீட்டி ரயிலுக்குத் தயாரானேன்.

"முதல்ல நீ இடம் பிடி, எல்லோருக்கும் இடம் கிடைச்சால் பிறகு டிக்கெட் எடுத்துக்கலாம்." சொன்னவனைப் பார்வையால் தீய்க்கும் அளவிற்கு ரயில் எனக்கு அவகாசம் கொடுக்கவில்லை.

கண்களைக் குத்தும் ஒளி வெள்ளம், செவிப்பறையைக் கிழிக்கும் பா....ம் முழக்கம். ரயில் வந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு பெட்டியும் என்னைக் கடந்துச்செல்ல நான் பெட்டிகள் ஊடே பயணிக்கத் தொடங்கினேன்.



ஒருவன் ஓடும் ரயிலில் சட்டென ஒரு கம்பியைப் பற்றி, படியில் கால் வைத்துப் பயணத்தை தொடங்கிவிட்டிருந்தான். அப்பப்பா.. அவனுக்குத்தான் என்னவொரு துணிச்சல்! படியில் கால் வைத்தது மட்டும்தான் தெரிந்தது. கண் இமைக்கும் நேரத்திற்குள் அவன் எங்கேயோ சென்று விட்டிருந்தான். நான் எத்தனையோ நாட்கள் ரயிலில் பயணித்திருக்கிறேன். இப்படி அவசரப்பட்டுத் துணிவே துணையென எந்த ரயிலிலும் ஏறியதில்லை. அவனையும் ரயிலின் வேகத்தையும் ஒருசேரப் பார்க்கையில் எனக்கு கிலி மூட்டியது. நான் என் நண்பர்களைத் திரும்பிப் பார்த்தேன். எவனும் நின்று கொண்டிருந்த இடத்தை விட்டு நகரவில்லை. அத்தனை பேரும் பிடித்து வைத்த சாணம் போல் ஆடாமல் அசையாமல் அதே இடத்தில் நின்று கொண்டிருந்தார்கள்.

நான் கடைசி பெட்டியின் வருகைக்காகக் காத்திருந்தேன். ஆனால் கூட்டம் என்னை மொய்த்துப் பெட்டிக்குள் லாவகமாக உள்ளே தள்ளியது. என் அருகினில் வந்த ஒரு பெட்டியின் கம்பியைப் பற்றினேன். சட்டென படியில் ஒரு கால் வைத்தேன். என்னைத் தொடர்ந்து நாற்பது வயது மதிக்கத்தக்க ஒருவர் என்னை நெறித்துக்கொண்டு ஏறினார். ஏறியவர் என் முதுகில் ஒரு அழுத்தம் கொடுத்து என்னை உள்ளே தள்ளினார். எனது பாதி உடல் பெட்டிக்குள் நுழைந்து விட்டது.

"ஆஹா இது ரிசர்வ் கம்பார்ட்மென்ட்டாச்சே" என்றபடி கீழே குதித்தார். அவரைத் தொடர்ந்து நானும் இறங்கினேன். பயணிகளை விலக்கிக்கொண்டு தளத்தில் கால் வைத்தேன். தளம் என்னை விராட் என இழுத்துச்சென்றது. இடது கால் செருப்பு உருவிக்கொண்டு ரயில் சக்கரத்திற்குள் விழுந்து விட்டது.

ஒற்றைக் கால் செருப்புடன் கால்களை இழுத்துகொண்டு ஒவ்வொரு பெட்டியாக ஓடினேன். புதுச் செருப்பைப் பறிகொடுத்த கிறக்கம்.

இந்த ஒற்றைச் செருப்பையும் ரயில்வே ட்ராக்கிற்குள் தள்ளிவிட்டு பெட்டியைத் துரத்திக் கொண்டு ஓடினேன். ரயில் ஒரு வழியாக நின்று பெரு மூச்சு விடத் தொடங்கியது.

நான் எலியைப் போல நுழைந்து அடுத்த இருக்கையில் தாவிக் குதித்தேன். எதிரும் புதிருமான இரண்டு இருக்கைகள் கண்டு கொள்ளப்படாமல் விசாலமாக இருந்தன. என் பையைத் தூக்கித் தலைக்கு மேலுள்ள ஷெல்ப்பில் வைத்தேன். சக நண்பர்களைக் கூவி அழைத்தேன்.

"இடம் கிடைச்சிருச்சா..?" என்றபடி ஒருவர் பின் ஒருவராக ஓடிவந்தார்கள். அவரவருக்குப் பிடித்தமான இடத்தில் உட்கார்ந்து கொண்டார்கள். அவர்கள் முகத்தில் லயிப்பு. பூத்துச்சொரியும் புன்னகை. எங்கே படுக்கலாம், எப்படி கால்களை நீட்டிக்கொள்ளலாம், ரயில் எந்தத் திசையில் போகும் என்றவாறு முன்னோட்டம் பார்க்கத் தொடங்கினார்கள்.

"இடம் பிடித்தாகி விட்டது. பிறகு என்ன, யாராவது ஒருத்தர் போய் டிக்கெட் எடுத்துக்கிட்டு வாங்க". நான் சொன்னதை யாரும் காது கொடுத்துக் கேட்பதாக இல்லை.



"நீ போடா "

"அவனைப் போகச்சொல்லு." என்றபடி ஒருவரையொருவர் சுட்டிக்கொண்டு தட்டிக்கழித்தார்கள். மணியைப் பார்த்தேன். ஒன்பதே கால் ஆகியிருந்தது. சரியாகப் பத்து மணிக்கு ரயில் புறப்பட்டு விடும். அதற்குள் டிக்கெட் எடுத்தாக வேண்டும்.

"யாரை அனுப்பலாம்...?."

அவனவனும் பையைத்திறந்து எதையோ தேடுவதைப்போல பாவனை செய்துகொண்டிருந்தார்கள்.

"பணம் கொடுங்கடா. நான் போய் டிக்கெட் எடுத்துக்கிட்டு வாறேன்". டிக்கெட்டிற்குரிய பணத்தை வாங்கிக்கொண்டு ஓடத்தொடங்கினேன். பாதி தூரம் கடந்த பிறகுதான் ஞாபகம் வந்தது.

என் செல்போனில் சார்ஜ் இல்லை. ஒரு வேளை டிக்கெட் எடுக்க முடியாவிட்டால்? மூளை புதிர் போட்டது.

பெட்டியை நோக்கித் திரும்பவும் ஓடி வந்தேன். "எல்லாரும் நல்லா கேட்டுக்கிருங்க... என் செல்போன்ல சார்ஜ் இல்ல. ஒரு வேளை என்னால டிக்கெட் எடுத்துக்கிட்டு டயத்துக்குள்ள வரமுடியலைன்னா, நீங்க என் பையையும் எடுத்துக்கிட்டு கீழே இறங்கிடுங்க. புரியுதா?" நெஞ்சுக்கூடு ஏற இறங்க சொல்லிவிட்டு டிக்கெட் கொடுக்கும் இடத்தை நோக்கிப் பாய்ச்சல் எடுத்தேன்.

ஒரு வழியாகப் பயணச்சீட்டு வாங்குமிடத்தை அடைந்திருந்தேன். டிக்கட் வாங்க ஒரு பெரிய வரிசை.

இந்த வரிசையில் தன்னைக் கடைசி ஆளாக நிறுத்தி டிக்கெட் எடுப்பதென்பது நடக்கக்கூடிய காரியமா? வரிசையை உதாசீனப்படுத்திவிட்டு நேராகக் கவுண்டருக்குள் கையை நீட்டினேன்.

"சார்.... மன்னை எக்ஸ்பிரஸ் பத்து மணிக்கு. டைம் ஆச்சு. மன்னார்குடிக்கு ஏழு டிக்கெட் கொடுங்க.

நான் அப்படிக் கேட்டதும் அவருடைய முகம் இருண்டு விட்டது. என்னை வறுத்து எடுப்பதற்குத் தகுந்தவாறு கீழே குனிந்து என் முகத்தை நன்றாக பார்த்தார். பணத்தைக் கசக்கி வெளியே விட்டெறிந்தார்.

"வரிசைக்கு போ.... ய்யா".

வரிசையில் நின்றவர்கள் அவரை விட அதிகமாக கர்ஜித்தார்கள். "போடா" எனச் சொல்லாத ஒரு குறை தான். முகம் தொங்கிப்போய், மனசு கிறங்க, வியர்வைக்காட்டில் நனைந்து, குதறுண்ட நாயாக வாலைச் சுருட்டிக்கொண்டு பவ்வியமாக வெளியேறினேன்.

மணி ஒன்பது ஐம்பதாகியிருந்தது. ஐந்தாவது ஆளாக நின்றுகொண்டிருந்தேன். உடம்பில் படபடப்பு. பணத்தைக் கவுண்டர்க்குள் திணித்தேன்.

"மன்னை எக்ஸ்பிரஸ். மன்னார்குடிக்கு ஏழு டிக்கெட்"

உதடுகள் படபடத்தன. மனசு வேகமாக அடித்துக் கொண்டது. பயணச்சீட்டுகளும், பாக்கியும் என் கையில் திணிக்கப்பட்டன. பாக்கி சரியாக இருக்கிறதா...? சரிபார்த்துக் கொண்டேன். பக்கத்தில் நீண்டிருந்த வரிசையை விலக்கி, காட்டாற்று வெள்ளமாக ரயிலை நோக்கி பாய்ந்தேன்.

பெட்டிகள் மெல்ல நகர்ந்தன. விறகுக்கட்டிலிருந்து விடுபடும் பாம்பு போல மெதுவாக ஊர்ந்தன. மேல் மூச்சு கீழ் மூச்சை விழுங்க ஓடினேன். கால்கள் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு என்னைக் கீழே சாய்க்க முற்பட்டன. சக நண்பர்கள் அவரவர் பைகளுடன் எனக்காக நடைமேடையில் நின்று கொண்டிருப்பது தெரிந்தது. வெறி பிடித்தவனைப்போல கூக்குரலிட்டேன்.

"ஏறுங்க, ஏறுங்க "

ரயில் அடிப்பட்ட பாம்பைப்போல பாய்ச்சல் எடுத்தது. நண்பர்கள் பெட்டிக்குள் தாவிக்குதித்தார்கள். அவர்களைத் தொடர்ந்து நானும் அதற்குள் பாய்ந்தேன்..

ரயில் திசையைக் கிழித்துகொண்டு சென்றுகொண்டிருந்தது. எனது வியர்வைத் துளிகளைக் காற்று துடைத்து எடுத்தது. தண்ணீர் குடிக்க வேண்டும் போல இருந்தது. எனது பையைத் தேடினேன். யார் கையிலும் இருக்கவில்லை. மனதில் திகில், ஆழ்மனதில் இடி இறங்கியது. நெஞ்சில் படபடப்பு.

எனது கல்விச்சான்றிதழ்கள் அத்தனையும் அதற்குள்தான் இருக்கின்றன. அத்தனையும் உண்மைச் சான்றிதழ்கள். பொறியியல் படிப்பு முடிந்து, அனைத்துப் பாடங்களும் தேர்ச்சி பெற்று கைத்தட்டலுடன் பெற்ற சான்றிதழ்கள். சாதிச்சான்றிதழ்கள், இருப்பிடச் சான்றிதழ்கள் என எத்தனையோ சான்றிதழ்கள்.

"எங்கேடா என் பேக்?" ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு மௌனிகளாக நின்றார்கள். யாரும் பெரிதாக அலட்டிக்கொள்வதாகவோ, வருத்தப்படுவதாகவோ தெரியவில்லை. தேடுவதைப்போல பாவனை செய்தார்கள்.

ரயில் காற்றையும் திசையையும் விழுங்கிப் பாய்ந்து கொண்டிருந்தது. ரயிலிலிருந்து குதித்து விடணும் போலத் தோன்றியது. சங்கிலியை இழுத்து ரயிலை நிறுத்தி விடலாமா... மூளை யோசித்தது. அபாயச் சங்கிலியைப் பற்றி இழுக்க எத்தனித்தேன். அதற்குள் தாம்பரம் சந்திப்பு வந்துவிட்டது.

பிசாசு வேகத்தில் இறங்கி, லோக்கல் ரயிலைப் பிடித்து எக்மோர் வந்திருந்தேன். ஆறாவது நடைமேடையிலிருந்து இறங்கி மூன்றாவது நடை மேடையை நோக்கி விரைந்தேன். மனதில் ஏதேதோ விபரீதக்

கற்பனைகள். ஏமாற்றத்தின் கிறக்கங்கள். உயிர் அறுவதைப்போல உணர்வுகள்.

பயணிகளை விலக்கி ஒரு வழியாக மூன்றாவது பிளாட்பாரம் வந்து விட்டிருந்தேன். ரயில் இல்லாமல் தண்டவாளங்கள் நீண்டுகிடந்தன

ஓரிடத்தில் ரயில்வே போலீஸ்காரர்கள் நான்கைந்துப்பேர் சூழ்ந்து நின்றார்கள். அவர்களின் அருகில் எனது பை இருந்தது. எனக்குள் பெருத்த நிம்மதி. ஆனந்தப் பெருக்கம் ஆட்கொண்டது.

"சார்... என்னுடைய பேக் சார்"

ஒரு போலீஸ் கேட்டார், "மறந்திட்டு போயிட்டியா?"

"ஆமாம் சார்"

"படிச்ச பையனா இருக்கே. இப்படி அலட்சியமா இருந்திருக்கே."

அவருடைய குரலில் அன்பு, கருணை, இரக்கம் மூன்றும் தொற்றியிருந்தன.

"இனி கவனமா நடந்துக்கோ" என்றவாறு ஒரு கண்டிப்பு கண்டித்தார். அவரைக் கண்ணீர் மல்கப் பார்த்து ஆமோதித்தேன். பிறகு "தேங்யூ சார்" என்றபடி பையைப் பற்றிக்கொண்டு நடக்கத் தொடங்கினேன்.

– அண்டனூர் சுரா

**ஆசிரியர் குறிப்பு :** இவரது இயற்பெயர் சு.இராஜமாணிக்கம். தமிழில் பல சிறுகதைகள், கட்டுரைகள், புதினங்களை எழுதியுள்ளார். மழைக்குப் பிறகான பொழுது, பிராண நிறக் கனவு, எண் வழிச்சாலை, அழிபசி தீர்த்தல், சொல்லேர் போன்ற பல சிறுகதைகள் எழுதியுள்ளார். தமிழக அரசின் விருது, படைப்பு விருது, இலங்கை உதயணன் விருது போன்ற பல விருதுகளுக்குச் சொந்தக்காரர். இப்பாடப்பகுதி இவர் எழுதிய திற என்னும் சிறுகதைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது.

## செயல்பாடுகள்

- இரயில் பயணங்களின்போது கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கலந்துரையாடிக் குறிப்பு தயார் செய்யுங்கள்.
- 'திற' என்னும் கதையின் மையக்கரு, மொழிநடை, பாத்திரப்படைப்பு ஆகியவற்றை விமர்சனம் செய்து எழுதுங்கள்.
- 'மக்கள் பயணம் செய்வதற்கு ஏதேனும் வாகனத்தின் உதவியை நாடுகின்றனர். அவ்வாகனத்தை இயக்கும் சில ஓட்டுனர்களின் கவனக்குறைவால் விபத்துகள் நேரிடுகிறது.'

  இந்நிலையில் நம் நாட்டில் தானியங்கி வாகனங்களை இயக்குவதற்கான சாத்தியக்கூறுகளையும் அவற்றில் பாதுகாப்பாகப் பயணம் மேற்கொள்ளுவதற்கு ஏற்படுத்தவேண்டிய வழிமுறைகளையும் கலந்துரையாடித் திட்டம் வகுத்தெழுதுங்கள்.



# வேலிகள்



## சைபர் குற்றங்கள்

விழிப்புணர்வின்மை, கவனக் குறைவு, அச்சம் ஆகியவையே சைபர் குற்றங்கள் நிகழ அடிப்படைக் காரணங்கள். தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக, அன்றாடச் செயல்கள் அனைத்தும் டிஜிட்டல் மயமாகிவிட்டதால், சைபர் குற்றங்கள் தற்போது அதிகரித்துள்ளன.

இணைய வசதியுடன் கூடிய கணினி, வாட்ஸ்ஆப் வழியான குற்றங்கள் அனைத்தும் சைபர் குற்றங்கள் என அழைக்கப்படுகின்றன. ஏமாற்றுதல், சேவை முடக்குதல், கடன் அட்டை மோசடி, ஆன்லைன் பரிவர்த்தனை மோசடி, ஆபாசப் படங்கள் பதிவேற்றி அச்சுறுத்தல், போதைப் பொருள் கடத்துவதாகப் பயமுறுத்துதல் எனப் பல்வகைப்பட்டாலும், ஒரே நோக்கம் பணம் சம்பாதிப்பதுதான்.

மார்ஃபிங்க் (Morphing) எனப்படும் பெண்களின் படங்களை ஆபாசமாக உருமாற்றுதல் இன்றைக்குப் பெண்கள் சந்திக்கும் மிகப் பெரிய அச்சுறுத்தல். கைபேசியில் சேமித்து வைத்துள்ள அவர்களது படங்களை ஆபாசமாக உருமாற்றுவது. இதுவும் போலி அழைப்பாளர்கள் அனுப்பும் லிங்க் தொடுவதால் ஏற்படும் பிரச்சினைதான்.

மால்வேர் மென்பொருளைக் கைப்பேசிக்குள் பதிவேறுவதால், உங்கள் தனிப்பட்ட படங்கள் அனைத்தும் நீங்கள் அறியாமலேயே அவர்கள் வசம் சென்றுவிடும். பிறகு உருமாற்றிய உங்கள் ஆபாசப் படத்தை உங்களுக்கு அனுப்பி, பணம் கொடுங்கள் அல்லது வலைதளத்தில் பதிவேற்றி அசிங்கப்படுத்துவேன் என மிரட்டுவார்கள். பணம் கொடுத்து ஏமாறாதீர்கள்.

சைபர் க்ரைம் அதிகாரிகளிடம் புகார் தெரிவியுங்கள். இல்லாவிடின் இணைப்பைத் துண்டித்துவிடுங்கள். தொடர்ந்து எண்களை பிளாக் (Block) செய்யுங்கள். வேறு வேறு எண்களில் அழைத்தால் உங்கள் கைபேசி எண்ணை மாற்றுவது நலம்.

முக்கியமாகப் புதுக் கைபேசி வாங்கும் போது, ரூ. முன்னூறு, ரூ. ஐந்நூறுக்கு ஆசைப்பட்டுப் பழைய கைபேசியை விற்காதீர்கள். உங்கள் கைபேசியிலுள்ள படங்கள், வங்கி எண், கிரெடிட் கார்ட் எண், கடவுச் சொல் அனைத்தையும் நீங்களே தாரை வார்த்ததுபோல் அதாவது திருடனிடம் நீங்களே சாவியைக் கொடுத்ததுபோல் ஆகிவிடும்.

நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம், கைபேசியில் எடுக்கும் படங்களை நீங்கள் முழுமையாக அழிக்கவே முடியாது. கைபேசியில் ஹார்ட் டிஸ்க் இல்லை. அது உள்ளே இருக்கும் சிப்–இல் (Chip) தாமாகவே சேமித்துக் கொள்ளும். சிப்–இல் இருந்து தகவல்களை, படங்களை மற்றொரு மென்பொருள் மூலம் வெகு எளிதாக எடுத்துவிடுவார்கள். ஆகவே கவனம் தேவை.

– ஜனனி ரமேஷ்

எச்சரிக்கை / கவனம்

1) அந்நியர்களிடம் கைபேசியைக் கொடுக்காதீர்கள்.
2) பழைய கைபேசியை விற்காதீர்கள்.
3) வாட்ஸ் ஆப் / மின் அஞ்சலில் வரும் லிங்க் தொடாதீர்கள்.
4) ஓடிபி (OTP) பகிர்ந்து கொள்ளாதீர்கள்
5) யாருக்கும் எந்த விவரத்தையும் வாட்ஸ் ஆப் / மின்னஞ்சலில் அனுப்பாதீர்கள்

ஒருவேளை உங்கள் கவனத்தையும் மீறி தவறு நடந்தால் செய்ய வேண்டியவை

1) 1930 என்ற எண்ணில் புகார் தெரிவிக்கவும்.
2) www.cybercrime.gov.in என்ற இணையதளத்தில் புகார் அளிக்கவும்
3) https://tafcop.sancharsaathi.gov. in வலைதளத்தில் விவரங்களைப் பதிவு செய்வதன் மூலம், உங்கள் பெயரில் யாரெல்லாம் உங்கள் ஆதார் எண்ணைப் பயன்படுத்தி கைபேசி இணைப்பு எடுத்துள்ளனர் என்பதை அறியலாம்.

**ஆசிரியர் குறிப்பு :** இவர் ஓய்வு பெற்ற காப்பீட்டுத் துறை அதிகாரி. இவரது சிறுகதைகளும் கவிதைகளும் பல்வேறு இதழ்களிலும் வானொலியிலும் வெளியிடப்பட்டுள்ளன. 72 நூல்களுக்கும் மேல் எழுதியுள்ளார். தமிழ் அறிஞர்கள், திருவள்ளுவர் போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்கன.

## செயல்பாடுகள்

- பாதுகாப்பான முறையில் இணையதளங்களைக் கையாளும் வழிமுறைகளைப் பட்டியலிடுங்கள்.
- உங்கள் பகுதியில் வசிக்கும் மக்களின் சமூக ஊடகக் கணக்குகள் மற்றும் வலைதளங்களில் இணையக் குற்ற நிகழ்வுகள் பரவி வருகின்றன. இச்சூழலில், அவற்றிலிருந்து பொதுமக்களைப் பாதுகாத்துக் கொள்ள விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதம் குறுஞ்செய்தி உருவாக்குங்கள்.
- இணையம் தொடர்பான கருவிகள் மற்றும் செயலிகளின் பெயரை எழுதி, அதற்கிணையான தமிழ்க் கலைச் சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.

## செல்லிடப் பேசி

செயற்கைக் கோளால்
கோபுர வழியால்
செல்லும் இடமெல்லாம்
பேசிக்கொண்டே செல்லச்
செல்லிடப் பேசி...

அலைபேசி என்றும்
கைப்பேசி என்றும்
அழைத்து வந்தாலும்
ஆட்சி யாளர்க்கு
ஆள்படை போலும்

வணிகர்க்கு வரப்பிரசாதம்
அதிகாரிக்கு ஆணவம்
அலுவலர்க்கு அதட்டப்படும் குரல்
உலகச் செய்தியும்
உறவுச் செய்தியும்
உடனுக்குடன் சொல்லும்
செல்லிடப் பேசியில்
பல தரப்பினரும்
பேசிப்பேசி
உடல் வலிக்கும் – பின்
உளம் வலிக்கும்.



– மா. கோவிந்தராசு

**ஆசிரியர் குறிப்பு :** இவர் பயணக் கட்டுரைகளையும் திறனாய்வு நூற்களையும் எழுதியுள்ளார். புதுக்கவிதை மொழி, புதுக்கவிதை கட்டமைப்பு போன்ற திறனாய்வு நூற்களை எழுதியுள்ளார்.

### செயல்பாடுகள்

- கவிதையின் மையக்கருத்தைக் கலந்துரையாடிக் குறிப்பாக எழுதுங்கள்.
- அலை பேசியால் ஏற்படும் நன்மை, தீமைகளைக் கலந்துரையாடிப் பட்டியலிடுங்கள்.
- "செல்லிடப் பேசியில்
  பல தரப்பினரும்
  பேசிப்பேசி
  உடல் வலிக்கும்–பின்
  உளம் வலிக்கும் "

  இக்கவிதை வரிகள் உணர்த்தும் கருத்துக்களை விமர்சனம் செய்து எழுதுங்கள்.

# இருள் வலை வில்லன்கள்



பெங்களூரு காலை 8 மணிக்கும் குளிரில் உறங்கி இருந்தது. தனது நடைப்பயிற்சியை முடித்துவிட்டு வீட்டிற்குள் நுழைந்தார் ராஜன்; ராஜனுக்கு வயது 52, பெங்களூருவில் துணிக்கடை வைத்துள்ளார். கடின உழைப்பாளி. சரியாக காலை 9 மணிக்குக் கடையைத் திறந்தால் இரவு 11 மணி வரை அவரது கடை இயங்கும்.

மனைவி ஜெயா. ஒரு மகன், பெயர் வெற்றிவேல். அமெரிக்காவில் உள்ள ராஜனின் தங்கை வீட்டில் தங்கி மாஸ்டர்ஸ் படித்து வருகிறார். மகன்மீது பெற்றோர் இருவருக்கும் கொள்ளைப் பிரியம். தினமும் இருமுறையாவது வீடியோ காலில் பேசிவிட வேண்டும்.

ராஜன் குளியல் முடித்து, பூஜையறைக்குள் நுழையும் வேளையில் மொபைல் போன் அலறியது. ஜெயா பார்த்துவிட்டு "ஏதோ புது நம்பருங்க!" என்றார். ராஜன் மொபைலை வாங்கிப் பார்த்தார். புதிய எண். கஸ்டமராக இருக்கும் என்ற நினைப்பில் அழைப்பை ஏற்றார்.

தெளிந்த ஆங்கிலத்தில் ஓர் இயந்திரக் குரல் ஒப்பிக்கத் தொடங்கியது. 'வணக்கம், இந்த அழைப்பு பெக்ஸ் கொரியரில் இருந்து வருகிறது. நீங்கள் அனுப்பிய பார்சல் சில காரணங்களால் திரும்பி வந்துள்ளது. மேலும், அது தற்போது இந்திய சுங்கத்துறை வசம் உள்ளது. இது தொடர்பான மேலதிக விவரங்களுக்கு எங்கள் வாடிக்கையாளர் சேவை அதிகாரியிடம் பேச எண் பூஜ்ஜியத்தை அழுத்தவும், செய்தியை மீண்டும் கேட்க எண் 2ஐ அழுத்தவும்' என்றது குரல்.

ராஜனுக்குக் கொஞ்சம் படபடத்தது. அதைக் கவனித்த ஜெயா, "என்னங்க, என்னாச்சு?" என்றார்.

ராஜன் அவசரமாகப் பூஜ்ஜியத்தை அழுத்தினார். மெலிதான இசைக்குப் பின் ஒரு மனிதக் குரல், "ஹலோ ராஜன் சார்" என்றது. மரியாதை, சம்பிரதாயம் எல்லாம் விடுத்து நேரடியாக விஷயத்திற்கு வந்தார் ராஜன் "சார், நான் எந்த பார்சலும் அனுப்பவில்லை. ஏதோ தவறு நடந்திருக்கிறது. ப்ளீஸ், கொஞ்சம் செக் பண்ணுங்க."

"டோன்ட் வொர்ரி சார் சில விவரங்களைக் கேட்கிறேன். பார்சல் உங்களுடையதா என்று பாருங்கள்"

"ஹலோ... நான்தான் எதையும் அனுப்பவில்லை என்கிறேன், பிறகென்ன விவரம் சோதிப்பது? அப்படி என்ன விவரம் சொல்லுங்கள் கேட்போம்" ராஜன் நியாயமான கோபத்தில் உறுமினார். "வெயிட் சார், உங்கள் பெயர் ராஜன்தானே? உங்கள் மொபைல் எண் இதுதானே" என அவரது மொபைல் எண்ணை அவன் ஒப்பிக்க, ராஜன் அலட்சியமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

"அதோடு உங்கள் ஆதார் எண்ணின் கடைசி நான்கு எண்கள் இதுதானே!" என அவன் சரியாகச் சொன்னதும், ராஜனின் முகம் கலவர நிறத்திற்கு மாறியது. பெக்ஸ் அதிகாரி மேலும் தொடர்ந்தான். "சார், நீங்கள் தைவானுக்கு ஒரு பார்சல் அனுப்பியிருக்கிறீர்கள். அதில் மூன்று கிரெடிட் கார்டுகள், 1,500 அமெரிக்க டாலர்கள், மற்றும் போதைப் பொருள் ஆகியவை இருந்தது சுங்கத் சோதனையில் பிடிபட்டுள்ளன. மேலதிக விசாரணைக்காக இப்போது போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் உங்கள் விவரங்களைக் கேட்கிறார்கள், நாங்கள் தந்திருக்கிறோம்."

"சார், நான் எந்த பார்சலும் அனுப்பவில்லை, ப்ளீஸ், ஏதோ தவறு நடந்திருக்கிறது. செக் பண்ணிப் பாருங்கள்" ராஜன் கெஞ்சினார். "சார், உங்கள் சிக்கல் புரிகிறது. நான் வெறும் கஸ்டமர் கேர் ஆள் மட்டும்தான். இப்போது உங்களுக்கு ஒரு மெசேஜ் வரும். அதில் இருக்கும் நம்பருக்கு உடனே கால் செய்யுங்கள்." சொல்லி முடிப்பதற்குள், ராஜன் மொபைலுக்கு ஒரு மெசேஜ் வந்தது. அதில் ஒரு புதிய மொபைல் எண். "இது யாருடைய நம்பர் சார்?" ராஜன் தயங்கினார். "மும்பை நார்காடிக்ஸ் பிரிவு உயரதிகாரியின் எண் சார்!" எதிர்முனை நன்றி, வணக்கம் சொல்லி அழைப்பைத் துண்டித்துக்கொண்டது. ராஜனின் முகத்தைப் பார்த்ததும் ஜெயாவிற்குப் புரிந்தது. ஏதோ சிக்கல், ஏதோ தவறு நிகழ்கிறதென.

அதே எண்ணிலிருந்து ராஜனுக்கு ஒரு வாட்சப் செய்தி வந்தது. அதன் புரொபைல் படத்தில் காவல் துறை உடுப்பில் ஒரு அதிகாரியின் படம் ஒளிர்ந்தது. இப்போது அந்த எண்ணிலிருந்தே அழைப்பு வந்தது. ராஜன் தயங்கியபடியே அழைப்பை ஏற்று "ஹலோ" என்றார். எடுத்த எடுப்பில், மிக அதிகாரமாக ராஜனிடம் ஒரு கேள்வியை வீசியது எதிர்முனை. "எத்தனை நாள்களாக இந்தத் திருட்டு வேலை நடந்து கொண்டிருக்கிறது ராஜன்?" ராஜன் அதிர்ந்துபோனார். உடனடியாகப் பேச்சு வரவில்லை. "சார், உண்மை தெரியாமல் பேச வேண்டாம். எனக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை" எனப் பயத்தில் முனகினார்.

என்ன, கதை விடுகிறாயா? "நீ இந்தியாவில் இருந்து தைவானுக்கு போதைப்பொருள் அனுப்பியிருக்கிறாய். இது பெரிய க்ரைம். உன்னையும் உன் குடும்பத்தையும் அரெஸ்ட் செய்து.." ராஜன் மீதியைக் கேட்கக்கூட இல்லை. சடாரென அருகிலிருந்த சேரில் சரிந்தார். கையிலிருந்த போன் நழுவிக் கீழே விழுந்தது. என்னங்க, என்னாச்சு எனக் கதறினார் ஜெயா.

ஜெயா அவசரமாக ஃபிரிட்ஜில் இருந்த குளிர்ந்த நீரை ராஜனின் முகத்தில் வேகமாக அடித்தார். போனைக் கைகாட்டி ராஜன் ஏதோ சொன்னார். புரிந்துகொண்ட ஜெயா, கீழே கிடந்த போனை எடுத்து அழுதபடியே பேசினார், "ஹலோ சார்!" ஆபீசர் ராய் சற்று அமைதி காத்தார். "ஆர் யூ தமிழ்" எனக் கேட்டார். "ஆமாங்க சார்!" போன் பேசியபடியே தலையாட்டினார் ஜெயா, "ஒன் மினிட்" என்ற ராய், யாரையோ அழைத்தார். பின்னணியில் வாக்கி டாக்கி இரையும் சத்தம் கேட்டது. 'அவனை அரெஸ்ட் செய்', 'இவன் மீது எஃப்.ஐ.ஆர் போடு' எனப் பல குரல்கள் களேபரமாய் ஒலித்தன. ஜெயாவின் விரல்கள் நடுங்கின. சில நொடி நடுக்கத்திற்குப் பின், புதியதாக ஒரு குரல், ஆனால் சற்றுத் தன்மையாய் பேசியது. "மேடம், என் பேர் ரஞ்சித். கொஞ்சம் டமிழ் தெர்யும், சொல்லுங்கே" என்றது.

ராஜன் விட்டதை ஜெயா தொடர்ந்தார்... "சார்... நாங்க எந்த பார்சலும் அனுப்பவில்லை சார்."

பயத்தில் ஜெயா மொபைலை இறுகப் பற்றிக்கொண்டார். "கொரியர் அனுப்பியவர் விவரம் பார்த்தபோது ராஜனின், மொபைல் நம்பர் மற்றும் அவரது ஆதார் எண்ணை ஆதாரமாகக் கொடுத்திருந்தார்கள். இதுவரை இந்த வகை போதை வஸ்து இந்த அளவு பிடிபட்டதே இல்லை. இது ஒரு பெரிய சென்சிடிவ் கேஸ். இதுவரை எஃப்.ஐ.ஆர் போடாமல் முதற்கட்ட விசாரணை செய்துவருகிறோம். "இன்னொரு வழி இருக்கிறது. இன்னும் எஃப்.ஐ.ஆர் போடவில்லை என்பதால் அதை வேண்டுமானால் முயற்சி செய்யலாம் மேடம்!"

"சார், ப்ளீஸ் சார்! என்ன வழி சார், சொல்லுங்க!" ஜெயா பரபரத்தார்.

"மேடம்! முதலில் இந்த கேஸ் குறித்து யாரிடமும் நீங்கள் பேசக்கூடாது. எந்த விவரமும் பகிரக்கூடாது. பிறகு சிக்கல் பெரிதாகிவிடும்."

ஜெயா அமைதியாகக் கேட்டார், ரஞ்சித் தொடர்ந்தான். "முதலில் வீட்டுக் கதவைச் சாத்திவிட்டு வாருங்கள். பிறகு நான் சொல்வதை நீங்கள் அப்படியே செய்ய வேண்டும்." ஜெயா ஓட்டமாகப் போய் கதவைச் சாத்தித் தாழிட்டுவிட்டு வந்தார். ராஜனை எழுப்பி சேரில் சரியாக அமர வைத்தார். போனை அவரது கையில் திணித்து, "பேசுங்க" என்றார்.

அப்போது ஜெயாவின் போனிற்கு மகன் வெற்றிவேல் வீடியோகால் கூப்பிட்டான். அவசரத்தில் யாரையும் பொருட்படுத்தாமல் அட்டன் செய்து விவரத்தைக் கூறினாள். "அம்மா பயப்படாதிங்க" இது மோசடிக்காரர்களின் சதி. உலகளவில் பல இடங்களிலும் இப்படி ஏமாத்தறாங்க. போன்ல கூப்பிட்டு செய்யாத குற்றம் சுமத்தி பணத்தைப் பறிப்பாங்க, ஏமாந்திராதிங்க. அவசரமாக சரி என்று சொல்லிவிட்டு, ராஜன் கையிலுள்ள போனை வாங்கி அழைப்பைத் துண்டித்தாள் ஜெயா.

– ஹரிஹரசுதன் தங்கவேலு

**ஆசிரியர் குறிப்பு :** இவர் தகவல் பாதுகாப்பு மற்றும் சைபர் மோசடிகளைக் கண்டறியும் வல்லுநராகத் தகவல் தொழில் நுட்பத் துறையில் பணியாற்றி வருகிறார். இஸ்ரோவின் கதை என்பது இவர் எழுதிய நூல் ஆகும்.

## செயல்பாடுகள்

- கதையில் வரும் ராஜனைப் போன்று இணைய மோசடியாளர்களின் வலைகளில் சிக்கிக் கொள்ளாமல் நாம் பாதுகாத்துக்கொள்ளும் வழிமுறைகளைக் குறிப்பாக எழுதுங்கள்.
- இணையப் பாதுக்காப்பு தினத்தன்று உங்கள் பள்ளி அறிவியல் மன்றம் சார்பாக சைபர் குற்றங்களைத் தவிர்ப்பதற்கான விழிப்புணர்வு முகாம் நடைபெற உள்ளது இதற்கான அறிவிப்பு தயார் செய்யுங்கள்.
- இணைய மோசடிகளும் தொலைப்பேசி ஏமாற்றுதல்களும் மலிந்துள்ள இன்றைய காலத்தில் இணையம் மற்றும் ஊடகங்களைப் பாதுகாப்பாகப் பயன்படுத்த வேண்டும் என விழிப்புணர்வூட்டும் வகையில் துண்டுப்பிரசுரம் தயார் செய்யுங்கள்.



# வெள்ளம்



## நீந்தக் கற்போம்!

மேலை நாடுகளில் மாணவர்க்கு இன்றியமையாத மூன்று பயிற்சிகள் கட்டாயம். சைக்கிள் ஓட்டுவது, குதிரைச்சவாரி, நீச்சல் ஆகியவையே அவை. நீச்சல் மிகமிக அவசியம்.

நகரங்களிலும் பெரிய ஊர்களிலும் கட்டண நீச்சல் குளங்கள் உண்டு. அவற்றில் பயிற்சியாளரும் இருப்பார். அவரது மேற்பார்வையில் மிக எளிதாக, விரைவாக, பாதுகாப்பாகப் பழகலாம். சினிமாவுக்காகும் பணத்தை விட இது அதிகம் இல்லை.

கிராமங்களில் ஆறு, ஏரி, குளங்கள், பரந்த பாசனக் கிணறுகள் இருக்கும். நன்கு நீச்சல் தெரிந்த ஒருவரது உதவியைக் கேட்டுப் பெறுங்கள். அவருக்கு வசதியான நேரத்தில் கற்கலாம். பயிற்சி முடிந்ததும் எல்லோருமாகச் சேர்ந்து ஏதாவது ஒரு தொகையை அவருக்குத் தந்து ஊக்கப்படுத்துங்கள். அவருடைய திறமையைப் பாராட்டியதாகவும் இருக்கும். பாதுகாப்புடன் இப்படிப் பயிற்சி பெற வீட்டில் தடை கூற மாட்டார்கள்.

மிக மிக முக்கியமானது, பயிற்சியாளர் சொல்வதை, சிறிதும் பிசகாமல் கேட்பது. இதில் அவரை ஏமாற்ற முயலக்கூடாது. ஏனெனில், அது உங்களுக்கே தீங்கு விளைவிக்கும். பயிற்சியாளருக்கும் உங்களால் கெட்ட பெயர்.

நீச்சல், உடம்பின் எல்லா உறுப்புகளுக்கும் பயிற்சி தரும் முழுமையான உடற்பயிற்சி. என்ன, நீச்சல் பயிற்சிக்குக் கிளம்பப் போகிறீர்களா? முழு ஈடுபாடும் முறையான பயிற்சியும் அதைத் தொடரப் போதிய வசதியும் இருந்தால் ஒலிம்பிக்கில் பதக்கங் கூட வாங்கி உலகப்புகழ் பெறலாம். வாழ்த்துகள்.

– ரேவதி

**ஆசிரியர் குறிப்பு :** இவரது இயற்பெயர் ஈ. எஸ். ஹரிஹரன். பாலக்காட்டில் பிறந்த இவர் பத்திரிகை ஆசிரியராகவும் குழந்தை இலக்கிய எழுத்தாளராகவும் விளங்குகிறார். மின்சார வாரியத்தில் தமிழ் வளர்ச்சி அலுவலராகப் பணியாற்றினார். சிறுவயதிலேயே இதழ்களில் எழுதத் தொடங்கிய இவர் சிறுகதை, நாவல், நாடகம் உட்பட 92 நூல்களை வெளியிட்டுள்ளார். 2013ல் சிறுவர் இலக்கியத்திற்காக சாகித்ய அகாதமியின் பாலபுரஸ்கார் விருதினைப் பெற்றார்.

**செயல்பாடுகள்**

- நீச்சல் கற்க வேண்டியதன் தேவையைக் கலந்துரையாடிக் குறிப்பெழுதுங்கள்.
- நீச்சல் கற்கும்பொழுது கவனிக்க வேண்டிய வழிமுறைகள் எவையெல்லாம் என்பதைப் பட்டியலிடுங்கள்.
- நீச்சல் கற்றுக்கொள்வதால் ஏற்படும் நன்மைகளைக் குறிப்பிட்டு நண்பனுக்குக் கடிதம் எழுதுங்கள்.

## நீர் விளையாட்டு

அவனை அவர்கள் அழைத்தபோது மிகுந்த தயக்கத்தைக் காட்டினான். 'நானா' என்று வாய்க்குள்ளே மெல்ல இழுத்தான். குழந்தைகள் அவனை மேலும் வற்புறுத்தலாயினர். அங்கே விருந்தாளியாக வந்திருந்தான் அவன். ஓரளவுக்கு நெருங்கிய உறவுதான். அடிக்கடி வரவில்லை என்பதே இயல்பாக இருக்க விடவில்லை. கொஞ்ச நேரத்தில் அந்தக் குழந்தைகள், எட்டிலிருந்து பன்னிரண்டு வயதிற்குள்ளான மூவர் – சிறுமி, இரண்டு சிறுவர்கள் – அவன் மடிமீது புரளவும் விளையாட்டின் நடுவராக அவனைப் பாவிக்கவுமான அளவிற்குத் தயாராகிவிட்டிருந்தனர். அதன் உச்சபட்சமாகத்தான் இந்த அழைப்பு.

குழந்தைகள் கண்களை இடுக்கிக்கொண்டு அவன் தாடையில் கைவைத்துக் கெஞ்சவும், கைகளை உரிமையுடன் பற்றி இழுக்கவும் தொடங்கினர். அவன் அசைவில் கட்டில் கிரீச்சிட்டுக் கத்தியது. ஏதாவது ஒருகுரல் 'அவரத் தொந்தரவு பண்ணாதீங்கடா' என்று உயர்ந்து இந்தச் சூழலைச் சிதைத்து விடுமோ என அஞ்சினான். அதற்குள்ளாக அவர்களோடு எழுந்துவிடுவது நல்லது என்றுபட்டது. தன் ஆர்வத்தை

மனதிற்குள் சுருட்டிக்கொண்டு தயவு செய்யும் பாவனையில் 'துண்டு இல்லையே' என்றான். அதுதான் இப்போது பெரிய பிரச்சினை போல. அவர்கள் வெகு உற்சாகமாகக் கூவிக்கொண்டு எங்கெங்கோ ஓடி ஆளுக்கொரு துண்டை இழுத்து வந்தனர். முகம் முழுக்கப் பரவிய வெட்கச் சிரிப்போடு அவனும் எழுந்துகொண்டான்.

தென்னங்கீற்றுகளில் நுழைந்த கதிரொளி கிணற்றைத் துளைத்து ஆழ்மண்ணைக் காட்டியது. குதிப்பதற்குக் கால்களைத் துறுதுறுக்க வைக்கும் தோற்றமுடைய கிணறுதான் இது. குழந்தைகள் யார் முதலில் குதிப்பது என்று தர்க்கித்துச் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். சண்டையிடலில் அவர்களின் கவனம் குவிந்திருந்த போது, குலையிலிருந்து கழன்று விழும் நெற்றுத் தேங்காயென அவன் குதித்திருந்தான். உடனே கிணற்றின் மூலைகள் ஒவ்வொன்றிலிருந்தும் அவர்களும் குதித்தனர். உறைந்திருந்த கிணறு இப்போது பலவித ஓசைகளில் பேசத் தொடங்கிற்று.

ஒவ்வொரு மூலையும் நின்று ஓய்வெடுப்பதற்கான சிறு இடத்தை ஏற்படுத்தி வைத்திருந்தது. குறைந்தபட்சம் பற்றி நிற்பதற்கான பிடிமானங்களையேனும் கொண்டிருந்தது. கருணை மிக்கது கிணறு. மூலைகளில் பனி நீரின் சுகம். குழந்தைகளோ சற்றும் களைக்கவில்லை. சரியும் மண்ணைப் பொருட்படுத்தாமல், சுவர்களைப் பற்றியேறி மாறி மாறிக் குதித்துக் கொண்டேயிருந்தனர். மேலேறுவதும் குதிப்பதும் தெரியாமல் பையன்கள் அத்தனை வேகம். அவர்களின் பொருளற்ற கூச்சல்களைப் பெருமிதத்தோடு கிணறு வாங்கிக்கொண்டது.

"சித்தப்பா.. கெணத்தச் சுத்தி நிக்காம எத்தன ரவுண்டு வருவீங்க" அவனால் எண்ணிக்கை சொல்ல முடியவில்லை. கிணற்றை அளவிட்டான். அதன் கோணமற்ற பரப்பு எந்தத் தீர்மானத்தையும்

### படகோட்டியும் முனிவரும்

முற்றும் அறிந்த ஒரு முனிவர் ஊர் ஊராகப் பயணம் செய்து கொண்டிருந்தார். ஒரு சமயம் அவர் ஓர் ஆற்றைக் கடக்க வேண்டியிருந்தது. அதைக் கடக்கப் பாலம் கிடையாது. படகில் தான் செல்ல வேண்டும். அங்கிருந்த படகோட்டியிடம் ஆற்றைக் கடக்க உதவுமாறு கேட்டார். அவனும் சம்மதித்தான். முனிவர் படகில்சென்று கொண்டிருந்தார். படகோட்டியின் தோற்றம் பேச்சு அவருக்கு ஒரு மாதிரியாக இருந்தது. அவனிடம் "மகனே நீ எவ்வளவு படித்திருக்கிறாய்?" என்று கேட்டார். அவன், "படிப்பா?" எனக்கு ஒன்றும் தெரியாது சாமி என்றான். படகு ஆற்றின் மத்தியில் சென்று கொண்டிருந்தது. முனிவர், "நீ படிக்காதது வியப்பாக இருக்கிறது. உன் வாழ்நாளில் பாதியை வீணாக்கிக் கொண்டாயே" என்று



கொடுக்கவில்லை. பதிலின்றி மெலிதாக மழுப்பிச் சிரித்தான். அவன் விடவில்லை.

"பத்து ரவுண்டு வர முடியுமா?"
சிறுவன் அதற்குப் பதில் சொன்னான்.
சித்தப்பாவால் ரண்டு ரவுண்டே வரமுடியாது."

அவனைக் கிளப்புவதற்காக அந்தச் சிறுவன் சொல்கிறான் என்பதை உணர முடிந்தாலும், இதையும்தான் பார்ப்போமே என்ற சவால் மனம் வந்திருந்தது. படியிலிருந்து தொடங்கி ஒவ்வொரு மூலையாகத் தொட்டு மீண்டும் படிக்கே வருவது ஒரு சுற்று, முதல் வட்டம் முடிந்து அடுத்த வட்டத்தின் பாதியில் அவன் மூச்சுறுப்புகள் பலகீனமடைந்தன. வாய் வழியாக மூச்சு வாங்கினான். கைகள் சோர்ந்து கால்கள் ஒத்துழைக்க மறுத்தன. எவ்வளவோ முயன்றும் அவனால் முடியவில்லை. மறுபடியும் கிணறு அவனைத் தோல்வியுறச் செய்துவிட்டது. ஒரு மூலையில் நின்றுகொண்டு உடல் குறுகி மூச்சு வாங்கினான். கிணற்றின் எக்களிப்புத் தானோ என அஞ்சும்படி அவர்களின் ஆரவாரம் காதடைத்தது. அவமானத்தை மிகுவிக்கும் கூச்சல். மேலேறிப் போய்விட வேண்டும் போலிருந்தது. கிணறு யாராலும் ஜெயிக்க இயலாத பிரம்மாண்டம். இதன்முன் தோல்வியை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இதனோடு போட்டியிட்டுத் தோற்பதே தைரியம்தான். கர்வத்தோடு பெருமூச்செறிந்தான். படியை நோக்கி நீந்தினான். தேர்வடத்தைப் பிடிக்கும் அடக்கத்தோடு கை துழாவியது. படியோரம் வந்து இறுதி முழுக்குப் போட்டுத் தலையைப் பின்னோக்கி நீர்ச்சீப்பினால் சீவிக்கொண்டான். பின் அறிவித்தான்.

"நா ஏர்றன். நீங்க குதிக்கறதுன்னா குதிச்சுட்டு வாங்க"

வேதனையுடன் கூறினார். "என்ன சாமி பன்றது? எனக்குப் படிப்பு வரவில்லையே" என்றான். அப்போது புயலும் மழையும் அடிக்க ஆரம்பித்தது. படகு ஆட்டம் கண்டது. அப்போது படகோட்டி முனிவரிடம் "சாமி உங்களுக்கு நீந்தத் தெரியுமா?" என்று கேட்டான். முனிவர் "தெரியாதே மகனே!" என்றார். "தெரியாத! அப்படியானால் வாழ்நாள் முழுவதையும் பாழாக்கிக் கொண்டீர்களே! சிறிது நேரத்தில் படகு மூழ்கப் போகிறது" என்றான் படகோட்டி முனிவர் விழித்தார். படகு மூழ்கத் தொடங்கியது. எப்படியோ முனிவரையும் பிடித்துக் கொண்டு நீந்தினான். இருவரும் பாதுகாப்பாக கரை சேர்ந்தனர். "உலகில் எல்லாம் தெரிந்தவர்களும் இல்லை, எதுவும் தெரியாதவர்களும் இல்லை" முனிவர் தனக்குள் கூறிக்கொண்டார்.

அவன் அறிவிப்பு குழந்தைகளிடம் அதிர்ச்சியைக் கொடுத்திருக்க வேண்டும். சில நொடிகள் கிணற்று அலை டிமிக்கிடும் ஓசை. சிறுமியின் முகத்தில் துயரத்தின் சாயை முற்றிலுமாகப் படிந்துவிட்டது. பையன்கள் சோர்ந்து போயினர். கிணற்றுச் சுகம் இத்தனை சீக்கிரம் தீர்ந்து போய்விடுவதை அவர்களால் ஒத்துக்கொள்ள முடியவில்லை. அவன் ஏறிவிட்டால் அவர்களும் ஏறிவிட வேண்டியதுதான். பெரிய ஆள் யாரும் இல்லாமல் கிணற்றுக்குள் இருக்க அவர்களுக்கு அனுமதியில்லை. கிணறு எத்தனையோ அச்சுறுத்தல்களைத் தன்னுள் கொண்டிருக்கிறது. அதன் மேற்பொந்துகளில் விஷமேறிய கிழட்டுப் பாம்புகள் அடை கிடக்கலாம். நீருக்குள் மூழ்கிச் செல்பவர்களை மாட்டி இழுக்கும் கொடங்குகள் மறைந்திருக்கலாம். வழுக்கலின் பிடி எந்த நேரத்திலும் இறுகலாம். அந்தச் சூழல்களைப் பெரியவர்கள் சமாளித்துவிட முடியும். சிறுவர்கள்?' அத்தோடு, சுற்றிலும் உயர்ந்த தென்னைகள் நிற்க, நடுவில் ஆடிச் செல்லும் கிணறு, அமானுஷ்யமான தன்மை வாய்ந்தது. குரல்களின் எதிரொலி எந்தத் திசையிலிருந்தும் வரும். பயமூட்டும் மௌனம் நீரின் கருமைக்குள் நிரந்தரமாகி இருக்கிறது. இவற்றிலிருந்தெல்லாம் பாதுகாக்கும் கவசமான அவன் மேலேறிவிட்டால் அவ்வளவுதான். சிறுமி, அவனை அழைப்பதற்குக் கெஞ்சியதைப் போன்றே மறுபடியும் தொடங்கினாள். வேண்டாஞ் சித்தப்பா. இன்னங் கொஞ்சநேரம் சித்தப்பா..

"சித்தப்பாவ உட்ராத பிள்ள" என்னும் குரல் எங்கிருந்தோ கேட்டது. அப்போதும்கூட பிள்ளை விளையாட்டின் பிடிவாதம் தானே இது என சாவதானமாகச் சிரித்தான். எதிர்பார்க்காத நொடியில் சிறுமியின் கை அவனை வாரி உள்ளே தள்ளியது. சுவரில் துருத்திக் கொண்டிருக்கும் கல்லொன்று பெயர்ந்து விழுவதைப் போல நீரில் படாரென விழுந்தான்.



வயிற்றில் நீர்ச்சாட்டை பளிரென வெளுத்து வாங்கியது. உடலெங்கும் அச்சத்தின் மின் துகள்கள் பாய்ந்தன. சுதாரித்து நீந்திப் படிக்கு வந்தான். இதுவும் கிணற்றுக்கு எதிரான தோல்விதானோ எனத் தோன்றியது. அப்படியொன்றுமில்லை என்று காட்டிக் கொள்பவனாய் 'ஏங்கண்ணு இப்பிடிப் பண்ணுன' எனச் சமாதானம் பேசிக்கொண்டு ஏறலானான். இப்போது அவனுக்கு மேல் படியில் – அது படியில்லை; துருத்திக் கொண்டிருந்த சுவர்க்கல்லில் ஒன்று – கொஞ்சம் பெரிய பையன் நின்று கொண்டிருந்தான். பையன் அவனைப் பார்த்துக் கைகளை விரித்து ஆட்டிக்கொண்டு 'உடமாட்டனே' என்று கூச்சலிட்டான். ஏறிவிடும் வைராக்கியத்தோடு கால் தூக்க, பையன் குனிந்து அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு புரண்டான். இரண்டு பேரும் ஒருசேரக் கிணற்றுக்குள் விழுந்தனர். பையனை நீருக்குள் இழுத்துக் கால் உந்தி ஓர் அழுத்து அழுத்தி விட்டுப் படியை நோக்கி வேகமாக நீந்தினான். பையன் அடிமண்ணைத் தொட்டுத்தான் திரும்ப முடியும். அவன் கழுத்தைக் கட்டிக் கொள்ளக் குறி வைத்து வந்த சிறுமியைத் தள்ளிவிட்டுப் பாய்ந்து படியேறினான். 'ஏய்' என்று உற்சாகக் கத்தலோடு இன்னொரு பையன் அவன்மீது தாவினான். சற்றும் அவன் எதிர்பார்க்காத கணம். மீண்டும் நீருக்குள் விழுந்திருந்தான். நீரைத் துளைத்து வந்த ஒளி கண்களைக் கூசியது. திவலைகளினூடே அவன் பார்க்க முயன்றான். புரியாத காட்சிகளே எங்கும் நிறைத்தன. பரபரப்பானான். ஏறி ஓடி விடுதலையாவதை தவிரத் தப்பிக்க வழியேதுமில்லை. ஆனால், படிக்கு மேலே இன்னொரு பையன். அவர்களுக்குள் சட்டென ஓர் ஒழுங்கு வந்திருந்தது. நீருக்குள் அவனோடு போராட ஒருவர். படியேறவிடாமல் காலைக் கவ்வ ஒருவர். கொஞ்சம் உயரத்தில் நின்று கொண்டு மேலே தாவிக் குதிக்க ஒருவர். மாற்றி மாற்றி அவர்கள் அந்தந்த இடங்களை ஆக்கிரமித்துக் கொண்டனர். அவனைச் சுற்றி உடைக்க இயலாத கனத்த விலங்கென அவர்கள் மாறியிருந்தனர்.

கிணற்றின் பொந்துகள் மரணம் ஒளிந்திருக்கும் இருட்குகைகளென மாறின. இவற்றை வெற்றி கொள்ளும் நீச்சல் பலம் அவனிடம் இருக்கிறதா? சுவர்களின்மீது ஏறிக்கொண்டு சுழன்ற கண்களோடு வாய்பிளந்து நிற்கின்றன தவளைக் குட்டிகள். அவை எந்த நேரத்திலும் அவனை வீழ்த்திவிடத் தயாராய் இருக்கின்றன.

– பெருமாள் முருகன்

**ஆசிரியர் குறிப்பு :** நவீன இலக்கியங்களைப் படைக்கும் இவர் மிகச் சிறந்த எழுத்தாளர். ஏறுவெயில், நிழல்முற்றம், மாதொருபாகன், பூக்குழி, அர்த்தநாரி, ஆலவாயன் போன்ற புதினங்களையும் திருச்செங்கோடு, நீர் விளையாட்டு, வேப்பெண்ணெய் கலயம் போன்ற சிறுகதை தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளார்.

## செயல்பாடுகள்

- கதையின் மையக்கரு, கதாபாத்திரங்கள், மொழிநடை ஆகியவற்றை விமர்சனம் செய்து எழுதுங்கள்.
- நீர் நிலைகளில் இறங்கும் பொழுது கவனிக்க வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகளைக் குறிப்பாக எழுதுங்கள்.

## பிச்சாவரம் கன்னித்தீவு

2300 ஏக்கர் பரப்பளவுள்ள மிதக்கும் காட்டைக் கை, கால் உளைச்சல் இல்லாமல் கன்னாபின்னாவென்று மூச்சிரைக்காமல் சுற்றிப் பார்க்க ஆசைப்பட்டால், முதலில் பஸ் பிடியுங்கள் பிச்சாவரத்திற்கு. பிச்சாவரத்திற்கு சிதம்பரம் போய்ப் போக வேண்டும். சிதம்பரத்திலிருந்து 16 கி.மீ டவுன் பஸ்தான். காய்கறி மூட்டை மாதிரி அள்ளிப் போட்டுக் கொண்டு போவார்கள். அது அலர்ஜி என்பவர்களுக்கு 150 ரூபாயில் டாக்ஸி கிடைக்கிறது.

போகும் வழியில் வறட்சியுடன் நீண்டு கொண்டிருக்கும் சின்னச் சின்னக் கிராமங்களைக் கடந்தால் கிட்டத்தட்ட இரண்டு கி.மீ முன்னால் மெல்ல கடல் காற்றுடன், பசுமையும், பனைமரங்களும், 'கொஞ்ச தூரத்தில்தான் டூரிஸ்ட் ஸ்பாட்' என்று வரவேற்கின்றன. பிச்சாவரத்தில் பஸ்ஸிலிருந்து இறங்கினால், சிமெண்ட் வர்ணம் பூசப்பட்ட மெகா யானை உருவம் (சிற்பம்), நிறைய காளான்கள் முளைத்த மாதிரி நிழல் குடைகள், ஊஞ்சல்கள், தமிழ்நாடு டூரிஸம்காரர்களின் ரெஸ்டாரண்ட், அப்புறம் போட்டிங் ஹவுஸ் தவிர்த்து மற்றபடி கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும்



தண்ணீர் தேசம்தான். கொஞ்சம் வித்யாசமான தண்ணீர் தேசம் என்கிறார்கள் ஜ்யாக்ரபியில்.

பேக் வாட்டர்ஸ் என்று ஆரம்பித்து டெக்னிக்கலாக பிச்சாவரத்தைப் பற்றி சொன்னதைக் கேட்டபோது, பிச்சாவரத்தை ஒரு பாங்க் அக்கவுண்ட் என்றழைக்கலாம் போல. அதுவும் கடலுடைய பாங்க் அக்கவுண்ட். கடல் மட்டம் ஏறி இறங்குவதற்கேற்பவும், அவைகளின் வேகத்தைப் பொறுத்தும், கடற்கரையோரப் பிரதேசங்களின் சில இடங்களில், இந்த மாதிரி நீர்த்தேக்கங்கள் ஏற்படுகின்றனவாம். உள்ளூர்ப் படகுக்காரர்கள் சொல்வதைப்பார்த்தால் ஒவ்வொரு வாரமும், அமாவாசை, பௌர்ணமியன்றும் இந்த கடல் பாங்க் அக்கவுண்ட் ஏறி இறங்குகிறது.

போட்டிங் ஹவுசை தமிழ்நாடு டூரிசம்காரர்கள்தான் நடத்துகிறார்கள். ஐந்து மணி நேரத்தில் கடல் வரைக்கும் போய் விடலாம். போட் போகாத இடங்களுக்கும் போக விரும்புகிறவர்களுக்குப் பக்கத்து கிராமத்தில் நிறைய மீனவர் தோணிகள் கிடைக்கின்றன. அதிலும் போய் வரலாம்.

நாம் போன போட்காரரர் பிச்சாவரத்தில் கிட்டத்தட்ட நாற்பது வருஷமாயிருப்பவர். இப்படிப்பட்டவர்களை அழைத்துப் போகும்போது ஒரு வசதி என்னவென்றால், நாம் என்னென்ன கேட்போம் என்பதை அனுமானித்து அவர்களாகவே சொல்ல ஆரம்பித்து விடுவதுதான். மெல்ல கைகளை, நீர்ப்பரப்பில் உரச விட்டுக் கொண்டு (அதென்னவோ? எப்போது படகில் ஏறி உட்கார்ந்தாலும் கைகள் தன்னையறியாமலேயே நீரைக்கோதி விளையாடுகின்றன), எங்கே தண்ணீர் மட்டம் அதிகம், எங்கே மேடு, எங்கே தரைதட்டும் என்று லாவகமாக துடுப்பு போட்டவர் சொன்ன விஷயங்களைக் கேட்க ஆரம்பித்தோம்.

முதலில் ஒரு அரைமணி நேரப் பயணத்தில் காடு கீடு எதுவும் கிடையாது. வெறும் தண்ணீர் தான் "கொஞ்சம் பொறுங்க" என்றார் போட்காரரர்.



"கன்னித்தீவு அதை கேட்டிருக்கீங்கள்ல, அது மாதிரி பிச்சாவரமும் ஒரு கன்னித் தீவுதான். கொஞ்சம் தவறினால் எப்படி வந்தோம், எப்படிப் போவது என்கிற பிரச்சினை வந்து தொலைந்து போவீர்கள்" போட்காரர் சொல்கிறபடி நம்மைத் தொலைக்கக்கூடிய தீவுகள் கிட்டத்தட்ட நாலாயிரத்துக்கும் மேல் பிச்சாவரத்திலிருக்கின்றன. அப்புறம் ஏகப்பட்ட கால்வாய்கள். நீரோட்டம் இல்லையென்றாலும், ஆழம் ஏழு அடியிலிருந்து ஆரம்பித்து 10, 12 என்று மையத்தில் 20 அடி வரை போகுமாம். உப்புக் கரிக்கும் நீர், கடல் தண்ணி தான் என்றார் போட்காரர்.

கிட்டத்தட்ட அரைமணி நேரப் பயணத்துக்கப்புறம் மெல்ல மரங்கள் தென்பட ஆரம்பிக்கின்றன, வரிசையாய் ரேஷன் க்யூ மாதிரி இடம் விடாமல் வேலிபோட்டுக் கொண்டு அடர்த்தியாகக் காணப்படும் அந்த மரங்களின் தோற்றத்தில் ஒரு வித்யாசம் தெரிகிறது. ஆக்டோபஸ் கைகளை விரிக்கிற மாதிரி, ஏகப்பட்ட வேர்களை விட்டு 'மிதந்து கொண்டிருக்கிறது. இந்த மரங்களுக்கு வேர்தான் உடம்பே. கயிற்றைத் திரித்து வைத்த மாதிரி நீர் மட்டத்திற்கும் மேலே ஒரு அடிக்கு வேர்கள் தெரிகின்றன. பச்சையாய், பெரிய இலைகளுடன் ட்யூப் கட்டி தொங்க விட்ட மாதிரி காய்களுடன் காட்சியளிக்கும் இந்த மரங்களை, மரம் சார்ந்த காடுகளை மான்க்ரோவ் பாரஸ்ட் என்கிறார்கள்.

இந்த மான்க்ரோவ் காடுகள் உலகத்திலேயே ஆஸ்திரேலியாவுக்கு அடுத்தபடியாக பிச்சாவரத்தில்தான் ரொம்பவும் செழுமையாக ஹெல்த்தியாக இருப்பதாகச் சொல்கிறார்கள். இன்னொரு விஷயம் 'கடல் அரிப்பைத் தடுப்பதற்கு இந்த ஹெல்த்தியான மான்க்ரோவ் காடுகள் ரொம்ப அவசியம் என்பது தான். இரண்டு பக்கமும் அடர்ந்து, வெளியே என்ன என்று தெரியாத அளவுக்கிருக்கும் பகுதிக்குள் போட் போகிறது. இந்த மாதிரி சதுப்பு நிலங்கள்தான் இந்த மான்க்ரோவ் காடுகளுக்கு ரொம்ப ஊட்டத்தை அளிப்பதாகச் சொல்கிறார்கள். சுந்தரவனக் காடுகள் என்று புவியியலில் படித்ததையும் ஞாபகப்படுத்துகிறார்கள். உண்மையிலேயே சுந்தரவனம்தான்.



இப்படி குட்டி குட்டித் தீவுகளுக்குள் புகுந்து கிட்டத்தட்ட இரண்டரை மணி நேரம் பயணம் செய்தால் கடலுக்குப் பக்கத்தில் வந்துவிடுகிறோம். கடலையும், நாம் கடந்து வந்த பிச்சாவரத்தையும் ஒரு பெரிய மணற்பரப்பு பிரிக்கிறது. ஒரே ஒரு

மைல் நடந்தால் கடலுக்கருகில் சென்று வரலாம் அப்புறம் பிச்சாவரம் ரிட்டர்ன் இவ்வளவு தூரத்தையும் போட்காரர் துடுப்பு வலித்தபடியே வந்ததைப் பார்க்கும்போது நமக்கே வலித்தது. ஸ்டீமர் போட் எல்லாம் கிடையாதா என்று கேட்டோம். "நான் கன்னித்தீவுன்னு சொன்னேன்ல, அதுக்கு இன்னொரு காரணம் இதுதான் என்று புதிர் போட்டுவிட்டு, இந்த 'மான்க்ரோவ்' மரங்களுக்கு வேர்கள் தான் ரொம்ப முக்கியம். இங்கு நீருக்கடியில் வாழும் இறால் மீன்களுக்கும் அவை ரொம்ப முக்கியம். அதனால் டீசல் போட்கள், ஸ்டீமர்கள் எதுவும் பயன்படுத்தக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். டீசல் புகை வேர்களை பாதிக்குமில்லையா? என்றார் உடன் வந்தவர். இன்னொரு விதத்தில் பார்த்தால் பிச்சாவரம் டூரிஸ்ட் ஸ்பாட் மட்டும் கிடையாது என்ற விவரம் தெரிய வருகிறது.

திரும்பும் வழியில், சாயங்காலம் ஆகிவிட்டபடியால், மெல்ல மெல்ல பறவைகள் மரங்களில் தஞ்சம் புக ஆரம்பித்திருப்பதைப் பார்க்க முடிகிறது. குட்டி வேடந்தாங்கல் போலவும் பிச்சாவரம் உதவுகிறதை நினைத்தால் ஆச்சரியமாயிருக்கிறது. ஒரு டூரிஸ்ட் பிக்னிக் ஸ்பாட் என்ற அறிமுகத்துடன் நாம் நுழையும் பிச்சாவரத்திற்கு எத்தனை முகங்கள்!

– ஜெ. குமரகுருபரன்

**ஆசிரியர் குறிப்பு :** தமிழ்க் கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர். ஞானம் நுரைக்கும் போத்தல், மறுபடியும் முதலில் இருந்து ஆரம்பிக்க முடியாது ஆகிய இரண்டு கவிதை தொகுப்புகளையும் இன்னொருவனின் கனவு என்ற கட்டுரைத் தொகுப்பையும் வெளியிட்டுள்ளார். பயணிகள் கவனிக்கவும் என்ற பயண நூலில் இருந்து இப்பாடப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியில் வரும் மான்க்ரோவ் காடுகளின் நன்மைகள் குறித்துக் கலந்துரையாடி குறிப்பெழுதுங்கள்.
- நீங்கள் சென்ற சுற்றுலாத்தள அனுபவத்தை அனுபவக்குறிப்பாக எழுதுங்கள்.
- சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பிற்குச் சுற்றுலாத் துறையினர் ஏற்படுத்தும் வழிமுறைகள் குறித்து சிறுகுறிப்பெழுதுங்கள்.



# சொல்லகராதி

அகிலம் – உலகம்
அச்சம் – பயம்
அஞ்சாமை – பயமின்மை
அவை – சபை
ஆரவாரம் – பேரொலி
இச்சை – விருப்பம்
உட்கிடக்கை – உட்கருத்து
உண்டி – உணவு
உவப்பு – மகிழ்ச்சி
உற்றுழி – துன்பம் நேர்ந்த காலம்
உறையுள் – தங்குமிடம்
ஊன் – இறைச்சி
எக்களிப்பு – செருக்கோடு கூடிய மகிழ்ச்சி
ஒப்பார் – இணையானவர்
ஒளி – வெளிச்சம்
குருதி – இரத்தம்
குறுகி – சுருங்கி
சங்கடம் – துன்பம்
சஞ்சரித்தல் – பயணித்தல்
சமாதானம் – அமைதி
சிக்கல் – குழப்பம்
சிகை – தலைமுடி
சித்தம் – மனம், மனநிலை
சிருஷ்டி – படைப்பு
சினம் – கோபம்
சுடர் – விளக்கு, ஒளி
சுவடு – தடம்
ஞாலம் – உலகம்
ஞானம் – அறிவு
ஞானி – பேரறிவுடையவன்
தலைப்பா – தலையில் கட்டும் துணி
தழை – தளிர்த்தல்
திண்ணம் – உறுதி
திவலை – சிதறும் நீர்த்துளி
துணிவு – தைரியம்
துயரம் – துன்பம்
நடுநிசி – நள்ளிரவு
நாங்கூழ்புழு – மண்புழு
நாவு – நாக்கு
நிகர் – இணை
நைச்சியம் – தாழ்மை
பங்கயம் – தாமரை
பணி – வேலை
பள்ளி – உறக்கம்/கல்விச்சாலை/தொழும் இடம்
பாமரன் – கல்வியறிவில்லாதவன்
பாரம் – சுமை
பிணி – நோய்
பிரஜை – குடிமக்கள்
புலர் – சூரிய உதயம்
பொத்தல் – துளை
பொலிவு – மலர்ச்சி
போலி – நகல்
மடமை – முட்டாள் தனம்
மயிர் – முடி
மாண்பு – சிறப்பு, பெருமை
மிகுதி – அதிகம்
முகிழ் – அரும்புதல்
முனைப்பு – சுய முயற்சி
மூடர் – அறிவில்லார்
மேன்மை – உயர்ச்சி
மோசடி – ஏமாற்றம்
யாக்கை – உடம்பு
வகிடு – பிளவு
வணிகர் – வியாபாரி
வர்ணம் – நிறம்
வழு – குற்றம்
வளி – காற்று
வஸ்திரம் – உடை/ஆடை
வாக்கு – சொல்
வாய்மை – உண்மை
விதேசி – வெளிநாட்டவர்
விந்தை – ஆச்சரியம்
விழி – கண்
வெகுளி – சினம், வெறுப்பு
வெக்கை – வெப்பம்
ஜீரணம் – செரிமானம்

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ  பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்


*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**
ஸ்ரீ கணேஷ், TC. 14/2036, வான்ரோஸ் ஜங்ஷன்,
கேரளா பல்கலைகழகம் P.O, திருவனந்தபுரம்-34, தொலைபேசி : 0471-2326603

இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in
www.kescpcr.kerala.gov.in


**சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400**
**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000**

*Online **R. T. E Monitoring : www.nireekshana.org.in***